பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 29 ஞாயிற்றுக்கிழமை (13.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 228

மாநகர சபை, யாழ்ப்பாணம்

# கைத்தொலைபேசிப் பாவனை விதிகள் நேற்றுத் தொடக்கம் இறுக்கம்!

## பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கையாக



கொழும்பு, ஜூலை 13

**கைத்தொலைபேசிகளின் பாவனை விதிகள் நேற்றுத் தொடக்கம் இறுக்கப்பட்டன!**

**பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று. அவசர கால சட்டத்தின் கீழ் இந்தப் புதிய கட்டுப்பாட்டு விதிகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதாக தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன.**

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு கைத்தொலைபேசிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவும் - கைத்தொலைபேசிகளை துஷ்பிரயோகம் செய்யும் சரியான உரித்தாளிகளை கண்டுபிடிப்பது கடினமாக இருப்பதாகவும் - பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்திருந்தது.

அந்தப் பின்னணியில், பாதுகாப்பு அமைச்சு கேட்டுக்கொண்டதற்கு இணங்கவே, கைத்தொலைபேசி பாவனை விதிகள் இறுக்கப்பட்டுள்ளதாக தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் பிரியந்தா காரியப்பெருமா சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றுக்கு நேற்று இரவு தெரிவித்தார்.

* கைத்தொலைபேசி சேவை வழங்கும் நிறுவனங்கள் தாம் வழங்கும் - விநியோகிக்கும் - தொலைபேசிப் பாவனையாளர்களின் முழுவிவரங்களையும் கவனமாகப் பேணவேண்டும்.

* கைத்தொலைபேசி பாவனையாளர்களின் ஆள் அடையாளத்தை உன்னிப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் 40 ஆயிரம் தமிழர் கூடி தாயகப் பிரகடனத்தை வெளியிட்டனர்

லண்டன், ஜூலை13

பிரிட்டனில் நேற்று இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் சுமார் 40 ஆயிரம் தமிழர்கள் ஒன்றுகூடி தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற பிரகடனத்தை உணர்ச்சியுடன் வெளிப்படுத்தினர்.

இந்த நிகழ்வு பிரித்தானியாவின் வேல் பகுதியில் உள்ள றிச்சர்ட்சன் இவன்ஸ் மைதானத்தில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3.40 மணிக்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகன் சிங்குக்கு இந்தியப் படைகளே பாதுகாப்பு; ஏனைய தலைவர்களுக்கு இலங்கைப் படைகள் வழங்கும்

### இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஜூலை 13

அடுத்தமாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள 'சார்க்' மாநாட்டில் பங்குபற்றவரும் தலைவர்களுக்கு எமது படைகளே பாதுகாப்பு வழங்கும். இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு மட்டும் இந்தியப் படையினரே பாதுகாப்பு வழங்குவர் அவருக்கு பாதுகாப்பு வழங்க அவர்களின் ஹெலிகள் பறக்க எமது வான்பரப்பில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார இத்தகவல்களை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் வர்த்தகர்களிடம் கோடிக்கணக்கில் கப்பம் அறவிட்ட நால்வர் கோஷ்டி கைது!

### அவர்களில் ஒருவர் பெண்!!

திருகோணமலை, ஜூலை13

திருகோணமலைப் பகுதியில் வர்த்தகர்களை அச்சுறுத்தி கோடிக்கணக்கான ரூபா பணத்தை கப்பமாகப் பெற்றதாகக் கூறப்படும் நால்வர் கோஷ்டியைப் பொலிஸார் நேற்று கைது செய்தனர். அவர்களில் ஒருவர் பெண்.

நால்வர் கோஷ்டியில் ஒருவர் நேற்று நண்பகல் அளவில் கைதானார். மிகுதி மூன்று பேரும் மாலையில் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையின் போது, இந்தக் கோஷ்டி குறிப்பாக வர்த்தகர்களை மிரட்டி, கோடிக் கணக்கான ரூபா பணத்தை கப்பமாகப் பெற்றுள்ளதாகத் தெரிய வந்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முற்பகல் நகரத்தில் உள்ள தமிழ் வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்தி கப்பம் பெற முயன்ற போது, அந்த வர்த்தகர் கொடுத்த தகவலின் பேரில் கப்பம் பெற முயன்ற போது அந்த வர்த்தகர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசு 22 ஆம் திகதியன்று நாடாளுமன்றில் நம்பிக்கை வாக்கெடுப்பு

புதுடில்லி, ஜூலை13

இந்திய மத்திய அரசுக்கான ஆதரவை இடதுசாரிகள் விலக்கிக் கொண்டதை அடுத்து ஆளும் காங்கிரஸ் எதிர்வரும் 22 ஆம் திகதி தமது பலத்தை நிரூபிக்க நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்த உள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் ஜனாதிபதி பிரதீபா பட்டீலை கடந்த வியாழக்கிழமை சந்தித்துப் பேசினார்.

தமது கட்சியின் பலத்தை நிரூபிக்க எதிர்வரும் 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தை பிரதமர் கூட்டுகிறார். மறுநாள் 22 ஆம் திகதியன்று

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஆழ ஊடுருவும் முயற்சி முறியடிப்பு

வவுனியா, ஜூலை 13

வவுனியா, சேமமடுப் பகுதியில் தாக்குதல் நடத்தவந்த ஸ்ரீலங்கா படையினரின் ஆழ ஊடுருவும் அணியினர் தம்மால் விரட்டப்பட்டதாகப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினர் கொண்டுவந்த கிளைமோர்களையும் கைவிட்டு தப்பி ஓடியுள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.20 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தால் அமைதிப் பேச்சுக்கு அரசாங்கம் தயார்

### திருப்பதியில் வைத்து மஹிந்த மீண்டும் அறிவிப்பு

திருப்பதி (தமிழ்நாடு), ஜூலை 13

**விடுதலைப்புலிகள் முதலில் ஆயுதங்களை கீழே வைத்தால், அரசாங்கம் அவர்களுடன் மீண்டும் சமாதானப் பேச்சு நடத்துவதற்கு தயாராக உள்ளது.**

**இவ்வாறு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திருப்பதியில் செய்தியாளருக்குத் தெரிவித்தார்.**



விடுதலைப்புலிகளுக்கு இந்தியா உதவி செய்யும் என்று நான் நினைக்கவில்லை என, செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திடீர் பயணமாக பெங்களூர் வந்தார். அங்கிருந்து இந்திய விமானப் படை விமானப் மூலம் ரோணிக் குண்டா அழைத்து வரப்பட்டார். பின்னர் அங்கிருந்து கார் மூலம் திருப் பதிக்கு வந்து சேர்ந்தார்.

பத்மாவதி விருந்தினர் மாளிகையில் தங்கிய அவர், வெள்ளிக்கிழமை இரவு வெங்கடாசலாபதியை வழிபட்டார். இலங்கையில் அமைதி திரும்ப அவர் சிறப்பு வழிபாட்டு நடத்தினார். ராஜபக்ஷவுடன் 10 பேர் கொண்ட அதிகாரிகள் குழுவும் திருப்பதி வந்துள்ளது.

ராஜபக்ஷவின் இந்தியப் பயணம் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அவருக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜானக பெரேராவின் அலுவலகம் மீது தாக்குதல்

கொழும்பு, ஜூலை 13

வடமத்திய மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடும் முன்னாள் இராணுவத் தளபதி ஜானக பெரேராவின் அனுராதபுரத்தில் உள்ள அலுவலகத்தை வெள்ளிக்கிழமை இரவு அடையாளம் தெரியாத குழுவினர் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர்.

அனுராதபுரம் நகரில் உள்ள அவரது அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் வெள்ளிக்

(16 ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலிவு விலையில்......

திருமண அழைப்பிதழ்கள்

ADORNA CARDS
www.andradesigns.com



15%
விசேட விலைக்கழிவு

புதிய வடிவமைப்பில் உருவாக்கம் பெற்ற அழகிய
அடோனா அழைப்பிதழ்களை
எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ பார்வையிட்டு
பிறிண்ட் வசதியுடன் பெற்றுக்கொள்ள முடியும்

நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்
ANDRA DIGITAL IMAGE
# 356A, கஸ்தூரியார் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
# 63, உப்புமடம் சந்தி,கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.
T.P : 021 4590268.0776622981
இணையத்தள முகவரி : www.andradesigns.com



உள்நாட்டு வெளிநாடுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள்
மற்றும் VDO பிரதிகள், CD க்கள்
என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப்
(76264)
பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
குறிப்பு:- அனுப்பப்படும் ஒவ்வொரு பொதிகளிற்கும் காப்புறுதி உண்டு



ஆடித்தள்ளுபடி விற்பனை
சொலக்ஸ் பல் முக்குக் கண்ணாடி அகம்
ஆடித்தள்ளுபடி விற்பனை
வாடிக்கையாளர், மாணவ, மாணவிகளுக்கு
ஒரு மகிழ்ச்சியான செய்தி
எமது தள்ளுபடி விற்பனை அநேகரின்
வேண்டுகோளுக்கிணங்க 30.07.2008 வரை
நீடிக்கப்பட்டுள்ளது
மாணவர்களின் வசதி கருதி 20.07.2008, 27.07.2008
ஞாயிறு தினங்களிலும் பி.ப. 3 மணிவரை
கடை திறந்திருக்கும்
கொம்பியூட்டர் மூலம் இலவச கண்பரிசோதனை செய்து கண்ணாடிகள் பெற்றுக்கொள்ளவும், ஜப்பானிய சங்குப்பற்கள் கட்டவும், மிதப்புப் பற்களுக்கு நிரந்தர கிளிப்பும் செய்து கொள்ளவும்
3500/= 2000/=
2500/= 1500/=
1800/= 1000/=
1000/= 700/=
சொலக்ஸ் பல் முக்குக் கண்ணாடி அகம்
516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(O.P.D. முன்பாக)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
05 - 10 - 1933



ஆண்டவன் அடியில்
20 - 07 - 2007

### அமரர் அந்தோனிப்பிள்ளை அல்பிரட்

*(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், சுங்கத் திணைக்களம்)*

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் அன்பு முகம் எங்கள் கண்களில் பிரகாசித்துக்கொண்டே இருக்கிறது. எம் அனைவருக்கும் அன்பால் வழிகாட்டிய அன்புத் தெய்வமே-
எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும் அகலாது.

334, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## 'புளொட்' ஏற்பாட்டில் இன்றுமுதல் நான்கு தினங்கள் வீரமக்கள்தினம் அனுஷ்டிப்பு

வவுனியா, ஜூலை13

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஏற்பாட்டில்இன்றுமுதல் எதிர்வரும் 16ஆம் திகதிவரை வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அ.அமிர்தலிங்கம், வெ.யோகேஸ்வரன் ஆகியோர் கொலைசெய்யப்பட்ட தினமான இன்றில் இருந்து புளொட் அமைப்பின் செயலதிபர் க.உமாமகேஸ்வரன் கொல்லப்பட்ட தினமான எதிர்வரும் 16ஆம் திகதி வரை இந்த வீரமக்கள் தினம் அனுஷ்டிக்கப்படுவதாக புளொட் அறிவித்துள்ளது.

இந்தத் தினம், சிரமதானங்கள், உதவிவழங்கல் போன்ற செயற்பாடுகள் முதல் மூன்று நாள்களும் இடம்பெறும். இறுதி நாள் நிகழ்வாக அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் பொதுமக்கள் கலந்து கொள்ளும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறும்.

வவுனியா, கோவில் குளம் உமாமகேஸ்வரன் வீதியில் அமைந்துள்ள உமாமகேஸ்வரன் நினைவு இல்லத்தில் வழமை போல் பொதுமக்கள் கலந்துகொள்ளும் அஞ்சலி நிகழ்வுகளும், அஞ்சலி உரைகள், அன்னதானம் என்பனவும் நடைபெறும்- என்று அந்த அமைப்பு அறிவித்துள்ளது. (01)

## விஞ்ஞான மாணவர்களுக்கு மானிப்பாயில் செயலமர்வு

யாழ்ப்பாணம் ஜூலை 13

ஜி.சீ.ஈ (உயர்தர)பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் விஞ்ஞான மாணவர்களுக்கான துரித மீட்டல் செயற்திட்டம் தொடர்பான செயலமர்வு நாளை திங்கட்கிழமை முதல் மூன்று தினங்கள் காலை 8.30 மணி முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெறும்.

பரீட்சைக்குத் தோற்றும் விஞ்ஞான மாணவர்களை பங்குபற்றி பயன் பெறுமாறு வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் பி. விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார். (1)

## இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை13

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதி பொது அமைப்புகளுக்கான கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறுமென நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார். (1-207)

## மீட்டல் வகுப்புகள்

கரவெட்டி, ஜூலை13

நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் நாளை தொடக்கம் மூன்று நாள்களுக்கு உயர்தர மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணிவரை மீட்டல் வகுப்புகள் நடைபெறவுள்ளன.

இதில் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், இணைந்தகணிதம் ஆகிய பாடங்களில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் கலந்துகொள்ள முடியும். (203-70)

### வீடு வாடகைக்கு

பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார் பண்ணையில் சகல வசதிகளுடன் இரண்டறை வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 477, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தோ.பே.: 021 222 7334
(பகல் மட்டும்)

### விற்பனைக்கு

ORIENDAL AQUARIUAM
வளர்ப்பு கலர் மீன்கள் மற்றும் மீன்தொட்டி உபகரணங்களும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: மலர் பாம்
61, இராமநாதன் வீதி,
(நாச்சிமார் முன் றோட்), யாழ்ப்பாணம்.
(76243)

### தவறிவிட்டது

தளையசிங்கம் பிரியதர்சினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (828374818V) எனும் இலக்கமுடையது யாழ். கன்னாதிட்டி மக்கள் வங்கிக்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் தந்துதவவும்.
தொடர்பு: SOND,
இல.60, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
(76267)

### ஆடிச் செவ்வாய் உற்சவத்தை முன்னிட்டு கடைகள் ஏலத்தில் விடப்படும்

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான ஆடிச் செவ்வாய் உற்சவத்தை முன்னிட்டு கடைகள் ஏலத்தில் விடப்படவுள்ளன.
இடம்: தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கப் பணிமனை.
காலம்: 20.07.2008 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 9 மணி
அத்தினத்தில் கடை வியாபாரத்தில் ஈடுபாடு உள்ளவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*இணைச் செயலாளர்கள்,*
*தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.*

### தவறிவிட்டது

பத்மநாதன் மோகனதாஸ் ஆகிய எனது (783574853V) எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் வாகன சாரதி அனுமதிப்பத்திரம், தொழில் அடையாள அட்டை ஆகியன அடங்கிய பேர்ஸ் வட்டுக்கோட்டைக்கும் யாழ்நகருக்கும் இடையில் (வட்டுக்கோட்டை, சங்கரத்தை வீதியூடாக ஆனைக்கோட்டைச் சந்தி மற்றும் மானிப்பாய் வீதி ஊடாக நாவலர் வீதி, கோயில் வீதி ஆகியவற்றுக்கு ஊடாக எமது காரியாலத்துக்கு இடையில்) தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியின் ஊடாகவோ, தொ.பேசி இலக்கத்தின் ஊடகவோ தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 'ZOA', நிறுவனம்
இல.127/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 8561, 0773582704
(76262)


மிக மலிவு விலைகளில்...
Pentium 4
(17" Dell Moniter,Intel Mother Board, Intel Processor 1,6, 256 Ram, CD ROM,40GB Hard Disk, Keyboard & Optical Mouse

ரூபா 32,750 மட்டுமே
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.




## காரைநகர் திண்ணபுரம் சிவன் கோயில் ஈழத்துச் சிதம்பரம்

### 108 கலச சங்காபிஷேகம்

நாளை (14.07.2008) திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப்பெருமானுக்கும் பூரண புட்கலா சமேத அரிகரபுத்திர ஐயனார் சுவாமிக்கும் விசேட அஷ்டோத்திர சதகலச சங்காபிஷேகம், விஷேட திரவிய ஹோமம், திரவிய அபிஷேகம், விஷேட பூஜை என்பன நடைபெற இருப்பதனால் அடியார்கள் யாவரும் வருகைதந்து எல்லாம் வல்ல எம்பெருமான் திருவருளை பெற்றுய்யும்வண்ணம் வேண்டுகின்றோம்.

ஆ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம்
ஆதீனகர்த்தாக்கள்.

## நினைவஞ்சலி

### யோகசிங்கம் சத்தியேந்திரா

நட்பிற்கோர் எடுத்துக் காட்டாய் இருந்து
எனது ஆரம்பக் கல்விப் பருவத்திலேயே என்னுடன்
துணை நின்று அம்மாவை இழந்த எனக்கு பல
அறிவுரைகளும் - ஆறுதல்களும் கூறி எனது
வளர்ச்சிகளுக்கு துணை நின்ற ஆருயிர் நண்பனே
ஆண்டு ஒன்று சென்ற போதும் உன்னை
இழந்ததுபோல் எனக்கு இன்னும் தோன்றவில்லையே.

சிவகுமார் ஜீவா குடும்பத்தினர்,
ராஜன் எலக்றோனிக்ஸ்,
அச்சுவேலி.
(76269)
Kavinay920@HOTMAIL.com

## மரண அறிவித்தல்

### *கதிரவேலு அப்பாத்துரை* (அப்பா அண்ணை)

(முன்னாள் இ.போ.ச. மின்னியலாளரும், விநாயகா லொறி உரிமையாளரும்)



கோப்பாயைப் பிறப்பிடமாகவும் தம்பாலை, அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு அப்பாத்துரை இந்தியாவில் 08.07.2008 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் அமரர்களான கதிரவேலு - நல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும் அமரரான சிவகுரு மற்றும் நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அமிர்தாம்பிகையின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரி, Dr. லோகேஸ்வரி, காங்கேசன், சந்திரசேகரம், யோகேந்திரன் ஆகியோரின் சகோதரனும் விஜிதா, சஜிதா, சுந்தரேசன்(பொறியியலாளர்),செந்தூரன் ஆகி யோரின் பாசமிகு தந்தையும் Dr.சௌந்தரராஜன்,கலாநிதி வேல்நம்பி (முதுநிலை விரிவுரையாளர், வணிகத்துறை, யாழ். பல்கலைக் கழகம்), நிரூபா ஆகியோரின் மாமனும் மித்திரசிறி, சதுசிகன், றேசிகா, சியாமி, தட்ஷா ஆகியோரின் பேரனும் சுப்பிரமணியம், சிவபாதசுந்தரம், தனஜோதி, கமலா, விஜயலட்சுமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் (கோப்பாய்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.
பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
(76265)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா தனது மூக்கை இலங்கைக்குள் நுழைக்கும்போது தமிழர் போராட்டத்துக்கு எதிராகத் திருப்பும் கொழும்பின் யுக்தி!

# சிங்கள ஆட்சியாளரின் பரம்பரைத் தந்திரோபாயம் இந்தியச் "சாணக்கியத்து"க்குப் புரியாதது ஏனோ....?

அரசியல்

★குலோத்துங்கன்★

**ஈழ விடுதலைப்** போராட்டத்தை தனது அரசியல், இராணுவ, பிராந்திய நலன்களின் முன்வைத்து கபடி விளையாடும் இந்தியாவின் தொடர்ச்சியான ஆட்டத்தின் பிந்தைய நிலவரம் தான் கடந்த மாதம் மூன்றாவது வாரத்தில் கொழும்பு வந்து சென்ற அந்நாட்டு உயர் மட்டக்குழுவின்


இந்தியப் பிரதமர்
மன்மோகன்சிங்

லம் வெளிப்பட்டுள்ளது.

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் என்பது போலவும் மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி என்பது போலவும் காடும் காடு சார்ந்த இடமும் முல்லை என்பது போலவும் வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்பது போலவும் இந்தியாவும் இந்தியா சார்ந்த இடமும் பிரச்சினை என்ற வரைவிலக்கணத்துக்குள் வந்துவிட்ட அளவுக்கு அந்த நாட்டின் வெளியுறவுக் கொள்கையாளர்கள் காண்பிக்கும் பகை வளர்க்கும் படலத்தின் ஒரு அங்கமாகவே ஈழத்தமிழர்கள் விடயத்தை அவர்கள் கையாள்வது தென்படுகிறது.

இதன் மறுபுறத்தில், சிங்கள தேசத்துடன் கைகோர்த்து நின்று தனது தேச நலன்களை முன்னெடுக்கலாம் என்ற "அறிவுசார்ந்த" தீர்மானத்துடன் இலங்கையை சீனப்புற்றெடுக்காத - தனக்கு சார்பான - நித பிரதேசமாக பேண இந்தியா மகிந்த அரசுடன் கைகோர்க்க முடிவெடுத்துள்ளமை அவர்களின் வெளியுறவுக்கொள்கையின் அடுத்த குறைப்பிரசவம்.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தை எண்பதுகளில் இருந்தே அருகில் இருந்து தொடர்ச்சியாக நாடிபிடித்து பார்த்துவரும் இந்தியா, சிங்கள தேசம் தனக்கான - தனது தேச நலனுக்கு உதவக்கூடிய - நிரந்தர நண்பனாக இருக்கும் என்று இன்றும் நம்பி தனது காய்களை நகர்த்துவதானது, சிங்கள தேசத்துக்கு தமிழர் போராட்ட நியாயப்பாடுகளை விளக்க முனைவதிலும் பார்க்க, முட்டாள்தனமான முடிவு என்பதில் இரண்டாம் கேள்விக்கு இடமிருக்க முடியாது.

இந்தியாவின் நலனுக்காக சிங்கள தேசம் இன்றுவரை செய்த காரியங்களை பட்டியலிட்டுப் பார்த்தால் முன்னாள் பிரதமர் ராஜீவை துப்பாக்கிப் பிடியால் அடித்தது முதல் இந்தியாவுக்கு ஆகாதவர்கள் என்று தெரிந்துகொண்டும் சீனாவுடனும் பாகிஸ்தானுடன் கூட்டணி வைத்தது வரை எல்லாமே எதிர்மறையானவையே.

### இந்திய எதிர்ப்பு அடிப்படை மாறவில்லை

இந்த இடைவெளிக்குள் இந்தியாவுக்கு எதிராக புரிந்த சம்பவங்கள் இலங்கையின் தமிழ்த் தேசிய அழிப்புப்போரின் வெம்மையின் கீழ் வெளிவராமல் போயிருக்கலாம் அல்லது இந்தியா அவற்றை மறந்திருக்கலாமே தவிர சிங்கள தேசத்தின் இந்திய எதிர்ப்பு என்ற அடிப்படை நிலை இன்றுவரை மாறவில்லை. ,னிமேலும் மாறப்போவதில்லை.

இலங்கையின் அரசியல் கட்டமைப்பை நோக்கினால், பிரதான கட்சிகள் எனப்படும் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றை விட, அதன பின்னர் உருவான பெரிய கட்சிகள் எல்லாமே இந்திய எதிர்கொள்கைகளுடன் தான் தமது அரசியல் பாதையை அமைத்திருக்கின்றன.

அது ஜே.வி.பியாக இருக்கட்டும் ஹெல உறுமய எனப்படும் முன்னாள் சிஹல உறுமயவாக இருக்கட்டும் இல்லை தற்போது பிளந்துபோயுள்ள அவற்றின் உதிரிக்கட்சிகளாக இருக்கட்டும். எல்லாமே தமக்குள் வேறுபட்ட அரசியல் முரண்பாடுகளை கொணடிருப்பினும் தமிழ்மக்களுக்கும் இந்தியாவுக்கும் எதிரான நிலைப்பாட்டை தொடர்ந்து பேணி வந்திருக்கின்றன. அவ்வாறு ஒரு நிலைப்பாட்டை எடுத்தால் அது சிங்கள மக்கள் மத்தியில் எடுபடும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு அன்றும் இருந்தது. இன்னமும் உள்ளது. அதனை தாம் பெற்ற நாடாளுமன்ற ஆசனங்களின் ஊடாகவே அவர்கள் நிரூபித்தும் இருக்கிறார்கள்.

ஆகவே, இலங்கையின் இந்த அரசியல் பாரம்பரியத்தை ஒட்டிய எதிர்கால அரசியல் வழித்தோன்றல்களும் இவ்வாறான ஒரு கொள்கையையே - சிங்கள மக்கள் மத்தியில் செல்லுபடியாகும் என நம்பும் இந்த நிலைப்பாட்டையே - எடுக்கப்போகிறார்கள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

### குறையும் என்று எதிர்பார்க்க முடியாது

ஜே.வி.பியிலும் விட கொடூர இனவெறிகொண்ட சிஹல உறுமய போன்று இனிவரப்போகின்ற அரசியல் பிதாமகன்களின் இந்திய - தமிழ் எதிர்வெறிப்போக்கு அதிகரிக்க வாய்ப்பு உள்ளதே தவிர குறையும் என எதிர்பார்க்க முடியாது.

சிங்கள தேசத்தின் கொள்கை இப்படித்தான் அமைய வேண்டும் என்று இன்று சிங்கள புத்திஜீவிகளும் சான்றோர்களும் தமது கட்சிகளுக்கு ஆலோசனைகள் கூறுவது அன்றாட செய்திகளலேயே அறியக்கூடியதாக உள்ளது.

தமிழர்களின் போராட்டத்தை நசுக்க வேண்டும். அதனூடாக அவர்களது தேசியத்தை சிதைக்க வேண்டும். பௌத்த நாடாக இலங்கை திகழ வேண்டும். இதற்கு இணங்குபவர்கள் சிங்களவர்களின் ஆட்சியின் கீழ் அடிமைகளாக வாழ வேண்டும். இதில் எந்தச் சக்தியுடனும் சமரசம் கிடையாது. குறிப்பாக இந்தியாவின் தலையீடு கூடவே கூடாது. மீறி, இந்தியா தன் மூக்கை நுழைக்க வேண்டுமானால் அதனை தமிழர்களின் போராட்டத்துக்கு எதிராகப் பயன்படுத்துவது.

இதைத்தான் காலகாலமாக சிங்கள தேசம் கடைப்பிடித்து வருகிறது.

இதனை எதிர்த்து அதாவது தமிழரின் உரிமைகளை பெறுவதோடு மட்டுமல்லாமல் இந்தியாவின் நலனையும் தமது நலனாக மதித்து - சிங்கள தேசத்துக்கு எதிராக வெடித்ததுதான் தமிழின ஆயுதப்போராட்டம்.

அப்போது, தமிழர்களுக்குச் சிங்கள தேசத்திடமிருந்து விமோசனமளிப்பதாக வந்த இந்தியா அன்று என்ன செய்தது?

இந்தியாவால் தமக்கு விடிவு கிடைக்குமென தமிழன் பட்டுவேட்டிக் கனவுடன் இருககும்போது, வந்த இந்தியா தமிழன் கட்டியிருந்த கோவணத்தையும் கழற்றிக்கொண்டோடியது.

### தனது நலனையும் சேர்த்துத்தான் ஈழத்தமிழர் போராடுவது இந்தியாவுக்கு விளங்காதது ஏன்?

தனது நலனுக்கும் சேர்த்துத்தானே ஈழத தமிழன் போராடுகிறான் என்ற அறிவுசார்ந்த - தூர நோக்குடைய அரசியல் தீர்க்கதரிசனம் - இல்லாமல் அன்று இந்தியா தமிழனுக்குச் செய்த அந்த கைங்கரியத்தால் சிங்கள தேசமே கைகொட்டி சிரித்தது. எமது எதிரிகள் இருவரையும் ஆளுக்கு ஆள் எதிரிகளாக்கிவிட்டோம் என்று புளகாங்கிதமடைந்தது.

ஆனால், இதனால் இந்தியாவை சிங்கள தேசம் நட்புசக்தியாக பார்த்ததா என்றால் இல்லை. தனது நலனுக்காக தம்முடன் சேர்ந்து நின்று தமிழனை எதிர்த்த இந்தியா என்றோ ஒருநாள் அதேபாணியில் சிங்கள தேசத்துக்கு எதிராக தனது பழைய ஆயுதத்தை பயன்படுத்தும் என்ற ஓயாத பயம் சிங்கள தேசத்துக்கு இன்றுவரை அடி மனதில் இருந்து கொண்டுதான் உள்ளது.

இந்தியாவிலுள்ள ஆறு கோடி தமிழர்களின் வாக்கு பலம் இந்தியாவின் அரசியல் அதிகாரத்தை என்றோ ஒருநாள் ஈழத்தில் உள்ள தமிழனுக்கு ஆதரவாக திருப்பி' அது இலங்கைத் தீவை பிளக்கப்போகும் ஆப்பாக இறங்கும் என்றும் -

அது நடைபெறும் நாளில் தனது நலனைக் காப்பாற்றிக்கொள்ள இந்தியா நிச்சயம் சிங்கள தேசத்துக்கு எதிராக தனது தர்ம சக்கரத்தை வீசும் என்றும் சிங்கள தேசம் உசாராக உள்ளது.

இந்தியாவுக்கு இல்லாத இந்த தூர நோக்க பார்வையே இன்று சிங்கள கட்சிகளால் சிங்கள மக்களின் மனங்களில் ஆழமாக விதைக்கப்பட்டுள்ளன.

அன்று இதை இந்தியா உணரவில்லை சரி. இன்றுமா உணரவில்லை.

இந்த துன்பியல் சம்பவங்கள் நடந்து இருபது வருடங்கள் ஆகியும் இந்தியா இன்றும் தனது பழைய பஞ்சாங்க கால வெளியுறவுக்கொள்கையுடன் மீண்டும் சிங்கள தேசத்துடன் பேரம் பேசிக் கொண்டு தமிழர் போராட்டத்தை நடுவில் வைத்து கபடி ஆடுகிறது.

### யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து அரசு விலகியபோது ஏன் கூறவில்லை?

இந்நிடையில் தான் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டையும் எடுப்பதைப்போல, இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சரிவராது என்று திருவாய் மலர்ந்திருக்கிறது. உண்மையிலேயே தமிழர்களின் நலனில் தான் அக்கறையுள்ள நாடு என்றால், இந்தியா இந்த 'கண்டுபிடிப்பை', விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து சிறிலங்கா அரசு வெளியேறும்போது ஏன் கூறவில்லை?

இந்த முரண்பட்ட வெளியுறவுப்போக்குத்தான் இன்று இந்தியாவை சூழ எல்லா நாடுகளையும் அதற்கு எதிரிகளாக்கி வைதத்திருக்கிறது. பாகிஸ்தான், வங்காளதேசம்


இலங்கை ஜனாதிபதி
மகிந்த ராஜபக்ஷ

முதல் சீனா வரை சகல நாடுகளும் தனக்கெதிராக என்ன செய்கின்றன என்று கண்ணிலே எண்ணெய் ஊற்றிப்பார்த்துக் கொண்டிருப்பதுதான் இன்று இந்தியாவின் நாளாந்த நிகழ்ச்சி நிரலாகிவிட்டது.

இந்தியவுக்குரிய தன்நேசப் பின்னணியில் பார்க்கப்போனால் கூட, இன்றைய தெற்காசிய அரசியல் சூழலில் பரவி வரும் சீனாவின் ஆதிக்கப்பிடியை சமநிலைப்படுத்துவதற்கு இந்தியாவை பொறுத்தவரை ஈழத்தமிழர் விவகாரம் தான் மிகப்பெரிய வரப்பிரசாதம்.

ஈழத்தமிழர் விவகாரத்தை இதய சுத்தியுடன் அணுகி, காத்திரமான ஒரு பங்களிப்பை நல்கி தமிழர்கள் விரும்பும் ஒரு தீர்வை பெற்றுக்கொடுத்து ஈழத் தமிழரை தனது நிரந்தர நண்பனாக்கி கொள்வது, தமிழீழத்தை மையமாக வைத்து இலங்கையை மொய்க்கும் எத்தனையோ சக்திகளை எதிர்கொள்ள இந்தியாவுக்கு அரசியல், இராணுவ, பிராந்திய ரீதியில் பாரிய பலத்தை கொடுக்கும்.

தனது சில்லறை தேவைகளுக்கு சிங்கள தேசத்தை பயன்படுத்துவதும் சிங்கள தேசத்தின் சிதைக்கும் வேலைகளுக்கு தான் பயன்படுவதும் இந்தியாவின் நீண்டகால நலனுக்கு என்றுமே பயன்தரப் போவதில்லை.

### இந்தியா மானத்தைக் காப்பாற்ற பாசித்தாள் பரிசோதனை ஈழப்பிரச்சினையே

இலங்கையில் அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் அதனை சாக்காக வைத்துக்கொண்டு அமெரிக்காவுடன் இந்தியா ஏற்படுத்திய உறவு இன்று இரண்டு நாடுகளுக்குமிடையில் முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது மறுக்க முடியாத ஒன்று. அது இந்தியாவுக்கே தெரியும். இது ஒரு சிறு உதாரணம்.

இந்நிலையில், ஈழப்பிரச்சினையில் இந்தியா காண்பிக்கக்கூடிய காத்திரமான பங்களிப்பு எதிர்காலத்தில் தனது பிராந்தியத்தில் நேர் சீரான உறவுகளை பேண வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவின் இந்த வருகைக்காக ஈழத்தமிழர்கள் இன்றும் தமது கதவுகளை திறந்தே வைத்துள்ளனர். இந்தியா தன்மானத்தையும் தமிழ் மானத்தையும் ஒருங்கே காப்பாற்றக்கிடைத்துள்ள வரலாற்று சந்தர்ப்பம்.

ஈழப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி, இந்தியா தனது சரியான செல்நெறியை கணிக்க தெரிவு செய்யக்கூடிய முறையான பாசித்தாள் (Litmus) பரிசோதனை.

*******************************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தான் தோண்டிய குழிக்குள் வீழ்ந்து தத்தளிக்கிறது ஐ.தே.கட்சி; மீண்டெழுவதானால் நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிய வேண்டும்!

**நாட்டின் இன்றைய அரசியல் சிக்கல்களுக்கான அடிப்படைக் காரணம் குறித்து விமர்சிக்கும் இக் கட்டுரை 'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவனால் எழுதப்பட்டதாகும். கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதிய ராவய பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த அதன் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.**

இன்றைய அரசைத் தோற்கடிப்பதற்காக அரசுக்கு எதிரான சகல தீவிர சக்திகளும் ஒன்றிணைய வேண்டியது இன்றைய அவசிய தேவையாக அந்த வகையில் தரப்புகளை ஒன்றிணைத்துக் கூட்டணி ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட விதத்திலான கருத்து வெளிப்பாடுகள் அண்மைக் காலமாக இந்நாட்டின் அரசியலரங்கிலும் பொதுமக்கள் தரப்பிலிருந்தும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.



இன்றைய அரசைப் பதவியிலிருந்து அகற்றி விடுவதற்கான மிகச் சிறந்ததொரு மார்க்கத்தைத் தேடிக் கண்டுபிடிக்க முயல்வோர் தரப்பாக - இன்றைய அரசியல் சூழ்நிலைகளில் உடனடி மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கான அபிலாஷை நிறையவே கொண்டுள்ள தரப்பினரைக் கொள்ள இயலும். ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இன்று செயற்படுவோரில் ஒரு குழுவினர் ரணில் விக்கிரமசிங்கவைக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து வெளியேற்றிவிட்டு அந்தப் பதவிக்கு ருக்மன் சேனநாயக்கவை நியமிக்கும் ஆவல் கொண்டுள்ளனர். ஜே.வி.பி. தரப்புடன் ஒன்றிணைந்து அரசுக்கு எதிராகச் செயற்படும் யோசனையை ரணில் விக்கிரமசிங்க

## அதிர்ஷ்டவசமாக பொ.ஐ.முன்னணியிடம் சிக்கிக் கொண்டது அதிகாரம்; அதனைப் பிரித்தெடுக்கும் வலு எவரிடமும் பிறக்கப்போவதில்லை!!

ஒருபோதும் ஒத்துக்கொள்ளப் போவதில்லை என அத்தரப்பினர் நம்புகின்றனர்.

அதேவேளை, ஏனைய சகல தரப்பினரையும் அவ்வித கூட்டணியொன்றுக்குச் சம்மதிக்க வைப்பது அத்தனை சிரமமானதொரு காரியமல்ல என அத்தரப்பினர் நம்புவதாகத் தோன்றுகிறது. ரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருக்கும் வரையிலும் ஜே.வி.பி. அத்தகையதொரு கூட்டணியில் இணைந்து செயற்பட முன்வரப் போவதில்லை. அதேசமயம் ருக்மன் சேனநாயக்கவைப் போன்ற ஒருத்தரை ஐ.தே.கட்சியின் தலைவராக ஆக்கிக் கொள்ள இயலுமானால், ஜே.வி.பியைப் பெரும்பாலும் அத்தகையதொரு கூட்டணியில் இணைந்து செயற்பட முன்வரவைக்க இயலுமென அத்தரப்பினர் நம்புவதாகத் தெரிகிறது. ரணில் மீது கொண்டுள்ள வைராக்கியம் போன்று ஜே.வி.பி. தரப்பு ருக்மன் சேனநாயக்கவுடன் வைராக்கியம் பாராட்டுவதில்லை எனக் கொள்ள முடிகிறது.

**மங்கள சமரவீரவின் நிலைப்பாடு**

இன்றைய அரசுக்கு எதிராக ஏனைய அரசியல் தரப்புகள் ஒன்றிணைந்து கூட்டணியொன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்ற யோசனையை மங்கள சமரவீரவே முதலில் முன்வைத்திருக்கக்கூடும். சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுத் தரப்பினரின் முக்கிய மாநாட்டில் சந்திரிகாவிடமும் ரணிலிடமும் அத்தகைய கோரிக்கையே முன்வைக்கப்பட்டது. அந்த மாநாட்டில் உரையாற்றிய மங்கள சமரவீர, ஜே.வி.பி. தரப்பு அத்தகையதொரு கூட்டணியில் இணைந்து செயற்பட வேண்டியுள்ளதன் அவசியம் குறித்துச் சுட்டிக்காட்டியிருந்தார்.

அரசை அவசரமாகக் கவிழ்த்து விடுவதற்கான விருப்புடன் செயற்படும் தரப்பினருக்கு அவ்விதம் அரசைக் கவிழ்த்து விடுவதற்கான தேவை ஏற்பட்டுள்ளமைக்கான காரணம், உண்மையில் நாட்டில் சமாதானமும் அபிவிருத்தியும் காணப்படுமொரு நிலை உருவாக வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையிலானது அல்ல.

ஐ.தே.கட்சி தற்போது மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகத்தில் நிலவும் ஊழல், பயங்கரம் மற்றும் குடும்ப ஆதிக்கம் என்பவை குறித்துப் பெரிய அளவில் விமர்சித்து வருகின்றது. அவர்களது விமர்சனங்களில் ஓரளவு உண்மை பொதிந்துள்ளது மட்டுமன்றி மிகைப்படுத்தலும் தாராளமாகவே உள்ளன. ஐ.தே.கட்சியும் தொடர்சியாக 17 ஆண்டுகள் காலமாக நாட்டை நிர்வகித்துள்ளது. அந்த வேளையில் நாட்டில் ஊழல், பயங்கர நிலை, குடும்ப ஆதிக்கம் நிலவியதில்லையா? நாட்டை நிர்வகித்த தலைவர்கள் அரச சொத்துகளை நாட்டின் பொது வளங்களைச் சூறையாடியதில்லையா? எதிரணித் தரப்பினரை ஈவு இரக்கமின்றி அழித்தொழித்ததில்லையா? அரச தரப்பினரின் உறவினர்கள் விசேட கவனிப்புக்கு உள்ளானதில்லையா? ஊடகங்கள் மீது அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டதில்லையா?

**சந்திரிகாவின் கடும் விமர்சனம்**

சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவின் அந்த மாநாட்டில் உரையாற்றிய சந்திரிகா இந்த அரசின் நிர்வாகத்தில் இடம்பெற்றுவரும் ஊழல், பயங்கரம் மற்றும் குடும்ப ஆதிக்கம் என்பன குறித்துக் கடுமையாக விமர்சித்திருந்தார். அவர்கூட இன்றைய அரசின் நிர்வாகம் குறித்து விமர்சிக்கையில், தமது நிர்வாக காலத்தில் இடம்பெற்ற மேற்குறித்த விடயங்கள் குறித்து எவ்வித கருத்தும் தெரிவித்ததில்லை.

சந்திரிகாவின் நிர்வாக வேளையில் ஊழல்களெதுவும் இடம்பெறவில்லையா? சந்திரிகா நாட்டின் பொதுச் சொத்துகளைக் கொள்ளையிடவில்லையா? தமது உறவினர்கள் பொதுச் சொத்துகளை நியாயமற்ற வகையில் அபகரிக்க இடமளிக்கவில்லையா? அவரது நிர்வாக வேளையில் நாட்டில் பயங்கர நிலை நிலவவில்லையா? எதிரணித் தரப்பினர் அடக்கி ஒடுக்கப்படவில்லையா? ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட அச்சமூட்டும் பயங்கர செயற்பாடுகளை இன்றும் பலர் மறந்திருக்கவாய்ப்பில்லையல்லவா? ஊடவியலாளர்கள் தரப்பினர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதில்லையா? ரோஹண குமார மற்றும் குமார் பொன்னம்பலம் ஆகியோரின் படுகொலைச் சம்பவங்களில் சந்திரிகா நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டிருக்கவில்லையா? சந்திரிகா தனது பதவி அதிகாரத்தைத் தவறான விதத்தில் பயன்படுத்திக் கொண்டதில்லையா? தாம் பதவியிலிருந்து வெளியேறவிருந்த கடைசி வேளையிலும் கூடக் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள அரசுக்குச் சொந்தமான நிலத்தின் உரிமையைத் தமது பெயருக்குச் சந்திரிகா மாற்றிக் கொண்டதில்லையா?

**விமர்சகர்களது நம்பகத்தன்மை**

ஐ.தே.கட்சிக்கோ, சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுக்கோ அல்லது சந்திரிக்காவுக்கோ இன்றைய அரசை விமர்சிக்கத் தகுதி - உரிமை கிடையாது என்பது இதன் அர்த்தமல்ல. ஆனால் அதற்கு முன்னர் அதே விதத்தில் நாட்டை நிர்வகித்த தலைவர்கள் என்ற வகையில் சுய விமர்சனத்துடன் அரசையும் அவர்கள் விமர்சித்திருப்பார்களானால் அத்தகைய விமர்சனங்களுக்கு ஒரு பெறுமதி - செல்லுபடித்தன்மை இருந்திருக்கும்.

உண்மையில், நிறைவேற்று ஜனாதிபதி நிர்வாக நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் நாட்டை நிர்வகித்த சகல தலைவர்களும் குறைந்தும் கூடிய விதத்திலும் நியாயமற்ற வகையிலேயே செயற்பட்டு வந்துள்ளனர்.

இத்தகைய சகல அரசுத் தலைவர்களும் நாட்டின் பொதுச் சொத்துகளைச் சூறையாடத் தவறியதில்லை. தமது உறவினர்களையும் அத்தகைய விதத்தில் செயற்பட அனுமதித்தனர். பொறுப்பான அரச பதவிகளுக்குத் தகுதியுள்ளவர்களைத் தவிர்த்துவிட்டுத் தமது அடிவருடிகளையே நியமித்தனர். எதிரணித் தரப்பினர் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர். உண்மையை உள்ளது உள்ளபடி வெளிப்படுத்திய ஊடகங்களை அழித்தொழித்தனர்.

ஒருவேளை [illegible]

பின்னர் நாட்டில் இடம்பெறப் போவது அதேபோன்ற போக்கில் செயற்படும் ஒரு நிர்வாகமானால் அத்தகைய நிர்வாக மாற்றத்தால் நாட்டுக்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது?

நாட்டுக்கும், இந் நாட்டின் பொது மக்களுக்கும் நாட்டு நிர்வாகத்தில் பூரணமான மாற்றமொன்று அவசியமாயுள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. ஆனால், நாட்டுக்கு இன்று தேவையாகியுள்ள நிர்வாக மாற்றத்துக்கும், மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசைக் கவிழ்த்து விடக் கனவு காணும் அரசியல்வாதிகள் தரப்பின் எதிர்பார்ப்புக்குமிடையே எவ்வித நெருங்கிய ஒற்றுமையும் கிடையாது.

நாட்டின் பொதுமக்களுக்கு இத்தகைய சகல நிர்வாக நடைமுறைகளினூடாகக் கிட்டிய அறுவடைகள் யாவும் ஒரே விதத்திலானவையே ஆகும்.

நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், அதிகாரத்தைக் கைப்பற்றி நாட்டை நிர்வகித்த சகல கட்சிகளும் நாட்டின் பொதுச் சொத்துக்களை நியாயமற்ற விதத்தில் சுருட்டிக்கொண்டன.

அவ்விதம் அவர்களால் சூறையாடப்பட்ட சொத்துக்கள் யாவுமே, இந் நாட்டின் பொது மக்களது சுகாதாரம், பொதுப் பிரயாண வசதிகள் போன்ற பொதுச் செயற்பாடுகளின் தரத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படவிருந்த பொதுமக்களுக்குச் சொந்தமான நிதித்தொகையே ஆகும்.

இதுவரைகாலமும் நாட்டில் இடம்பெற்ற தவறான முறையிலான அரச சொத்துக்கள் - காணிகளின் விற்பனை மூலம் பத்தாயிரம் கோடி ரூபா வரையிலான அரசுக்குச் சேர வேண்டிய நிதி அரசியல் தலைவர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று அரச நிறுவனங்களைத் தனியார் துறைக்கு விற்பனை செய்யும் விடயத்திலும் நியாயமான நடைமுறை கைக்கொள்ளப்பட முடியுமானால், தனியார்மயப்படுத்தல் செயற்பாடுகளால் அரசு ஈட்டிக் கொள்ளத் தக்க இலாபத்தைப் பல மடங்குகளால் அதிகரிக்க வைக்க இயலும்.

அரச உயர்பதவிகள், மற்றும் பொது நியமனங்களின் போது பொருத்தமான, தகுதியானவர்களுக்கு வாய்ப்பு வழங்கித் தேர்வுகள், நியமனைங்கள் வழங்கப்பட்டால் மாத்திரமே ஊழல்கள், மோசடிகளற்ற விதத்தில் அரசதுறை நிர்வாகத்தை ஆரோக்கியமான தொன்றாக செயற்படுத்தும் வாய்ப்புக் கிட்டும்.

அரசு துறை ஊழியர்கள் சகல தரத்தினருக்குமான நம்பிக்கை அளிக்கவல்ல சம்பளக் கொள்கையொன்று வகுக்கப்பட்டு, அதனை உரியமுறையில் முகாமைத்துவப்படுத்துவதன் மூலம் மட்டுமே அரசதுறை நிர்வாகத்தை செயலூக்கம் மிக்க தொன்றாக ஆக்கி, அதனூடாக நாட்டின் பொது மக்களுக்குத் திருப்திகரமான சேவையை ஏற்படுத்திக் கொடுக்க இயலும்.

**நிறைவேற்று ஜனாதிபதி முறைமைக்கு பதிலாக ஜனநாயக அரசியல் நடைமுறை**

அதிகாரத்திலுள்ள தனிநபர்களை அவர்களது பதவிகளிலிருந்து விலக்கி விடுவதற்குப் பதிலாக அரசியல் நிர்வாக நடைமுறையில் அடிப்படை மாற்றமொன்றை ஏற்படுத்துவதே இன்று நாட்டுக்கு மிக அவசிய தேவையொன்றாக ஆகியுள்ளது.

அடிக்கடி அரசை நிர்வகிப்போரையும், அரசை நிர்வகிக்கும் கட்சிகளையும் மாற்றியமைக்க இயலாத, இறுக்கமான விதத்தில் அரச நிர்வாகம் அமைய வேண்டும் என்ற நோக்குடன் நிறைவேற்று ஜனாதிபதி நிர்வாக நடைமுறை இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது என்ற வாதத்தில் எவ்வித உண்மைத் தன்மையும் கிடையாது. மாறாக, நீண்டதொரு காலத்துக்கு அதிகாரத்தை தக்கவைத்து நாட்டை நிர்வகிக்கும் தலைமைத்துவத்தைத் தொடர்ச்சியாகத் தக்க வைத்துக் கொண்டு, மாற்றம் எதுவுமின்றி அரசை நிர்வகித்துச் செல்ல வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் அடிப் படை நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்டதே இந்த நிறைவேற்று ஜனாதிபதி நிர் வாக நடைமுறையாகும். ரணசிங்க பிரேமதாஸவின் மரணத்தையடுத்து வெற்றிடமான ஜனாதிபதிப் பதவிக்கு டி.பி. விஜேதுங்க நியமிக்கப்படாது, அப் பதவிக்கு திறமையும், வலுவும் மிக்கதொரு பிரமுகர் நியமிக்கப்பட்டிருப்பாரானால், இன்றும் கூட இந் நாட்டின் ஜனாதிபதியாக ஐ.தே.கட்சியின் அரசியல் தலைவரொருவரே பதவி வகிக்க முடிந்திருக்குமேயன்றி பொ.ஐ. முன்னணியைச் சேர்ந்த அரசியல் தலைவரொருவரல்ல. அதே வகையில் 1994 ஆம் ஆண்டில் பொ.ஐ. முன்னணி பெற்ற அந்த வாய்ப்பு கட்டாயமான தேர்வு என்றல்லாது எதிர்பாராத விதமான - அதிர்ஷ்டவசமானதொரு வாய்ப்பு என்ற விதத்திலேயே கொள்ளப்படத் தக்கதொன்றாகும். அந்த எதிர்பாராத வாய்ப்பை - அதிர்ஷ்டவசமான வாய்ப்பைப் பெற்ற பொ.ஐ.முன்னணியால் இன்றுவரையிலும் அப்பதவியைத் தக்கவைத்துத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடிந்துள்ளது. அந்த வகையில் பொ.ஐ.முன்னணியின் கையில் சிக்கிக் கொண்ட அப்பதவி, எப்போது மாற்றத்துக்கு உட்பட நேரும் என்பதை எவராலும் தற்போது அனுமானிக்க இயலாது. அத்தகைய விதத்திலேயே நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறை விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த நடைமுறையை அறிமுகப்படுத்தி வைத்த கட்சி என்ற வகையில் ஐ.தே.கட்சி இன்று தாம் தோண்டிய குழியில் தாமே அகப்பட்டுக்கொண்டு வெளியேற இயலாத நிலைக்கு உட்பட்டுக் கொண்டுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி நிர்வாக நடை



முறை நாட்டின் அரசியல் நிர்வாகம் சீர்கெட்டுப் போக வழிவகுக்கும் ஒன்றாக ஆகிப் போய் விட்டுள்ளது.

இன்று அரசதுறைகளில் சிக்கல்கள் மலிந்து காணப்படுகின்றமை போன்றே நீதித் துறைச் செயற்பாடுகளும் சிக்கல்கள் கொண்டவையாக அமைந்து விட்டுள்ளன. இத்தகைய அதிகாரவாத சீர்கேடான அரசியல் நடைமுறை நிர்வாகம் குறிப்பிட்டதொரு எல்லைவரையே பயணிக்க இயலும். தற்போது இந்த நாடு அத்தகைய எல்லைக்கோட்டை அண்மித்துள்ளதாகக் கருதமுடிகிறது.

நிறைவேற்று ஜனாதிபதி நிர்வாக நடைமுறை மூலம் உருவாக்கப்பட்ட விதிகளின்படி ஜனாதிபதி தேர்தல் ஒன்றின் போதன்றி, வேறெந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஜனாதிபதியை தோற்கடிக்கவோ, பதவியிலிருந்து அகற்றவோ இயலாது. ஜனாதிபதித் தேர்தலில் கூட ஜனாதிபதியாகப் பதவி வகித்தவரைத் தோற்கடிப்பதென்பது சிரமமான விடயமொன்றே. ஆதலால் ஜனாதிபதியைப் பதவியிலிருந்து அகற்றி விட முயற்சிப்பதைவிட அதற்குப் பதிலாக நிறைவேற்று அதிகார நிர்வாக நடைமுறையைக் கைவிட்டு ஜனநாயக அரசியல் நடைமுறையொன்றைப் புதிதாக நடைமுறைப்படுத்த முயல்வதே சிறப்பான செயற்பாடாக அமையும்.

ஆனால் அத்தகைய முயற்சியொன்றுக்கு - போராட்டமொன்றுக்குத் தலைமைதாங்கிச் செயற்படப் போவது யாரென்பதே இன்றுள்ள பிரச்சினையாகும்.

அத்தகைய போராட்டமொன்றுக்குத் தலைமை தாங்கி முன்னெடுக்கத்தக்க தகுதியோ, திறமையோ இன்று எதிரணிக் கட்சிகளுக்கு உள்ளதா? உண்மையில் இந்த நிறைவேற்று ஜனாதிபதி நிர்வாக நடைமுறையை உருவாக்கி அறிமுகப்படுத்திய தரப்பு ஐ.தே.கட்சித் தரப்பாயினும்கூட, மேற்குறித்த ஏனைய தரப்பினர் இந்த நடைமுறைக்கு ஆதரவளித்து, பாலூட்டி வளர்த்தவர்கள் ஆகின்றனரல்லவா?

அவ்விதம் இன்றைய அரசைப் பதவியிலிருந்து அகற்றிவிடுவதற்கான உரிமை மேற்குறித்த தரப்புக்களுக்குக் கிட்ட வேண்டுமானால், தமது அபகீர்த்திமிக்க கடந்த கால செயற்பாடுகளைத் தாமாகவே மீண்டும் நினைவுபடுத்திக் தம்மைத்தாமே விமர்சிப்பதன் மூலம் புதிய பிறப்பெடுக்க அத்தரப்பினர் முன்வந்தாக வேண்டும். அப்படியானதொரு நிலையில் மட்டுமே மேற்குறிப்பிட்ட தரப்பினர் அரசின் நிர்வாகசெயற்பாடு, நாட்டின் பிரச்சினைகளில் அரசு எடுக்கும் தீர்மானம் - அரசியல் நிலைப்பாடு என்பவற்றை விமர்சித்து, அரசுக்கு எதிராகச் செயற்படத் தக்க உரிமை, தகுதி மேற்குறித்த தரப்பினருக்குக் கிட்டக்கூடும்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் பழமரச் செய்கையாளருக்கு ஊக்கம் தருகிறது 'ஜசுபி' தொழிற்சாலை

**யாழ்.** குடாநாடு பழவகைகளுக்கு மிகவும் பிரசித்தமானது. மாம்பழம், திராட்சைப் பழம், வாழைப்பழம், விளாம்பழம், எலுமிச்சம் பழம் எனப் பல்வேறு பழவகைகளும், இங்கு தாராளமாக உள்ளன. யாழ் குடாநாட்டின் காலநிலை, பௌதீக வளங்கள், மக்களின் விடாமுயற்சி என்பன பழ உற்பத்திக்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன. அன்று தொட்டு இன்று வரை தென்னிலங்கையிலே யாழ்ப்பாணத்து மாம்பழத்துக்கு நல்ல மதிப்பு. "யாப்பனே அம்ப" என சிங்கள மக்களால் விரும்பி வாங்கி சுவைக்கப்படுபவை யாழ்.குடாநாட்டு மாம்பழங்களே!

## உற்பத்திகள் தரமானவையாக இருந்தும் பல இடர்களை எதிர்நோக்குகிறது; கை கொடுக்க வேண்டியவர்கள் எமது மக்களே

விவசாயிகளின்உற்பத்திக்கு ஊக்கம் கொடுத்து சந்தைவாய்ப்பு, வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் பழங்களை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தியில் ஈடுபடும் "ஜசுபி" எனப்படும் பழரசத் தொழிற்சாலை 2002 ஆம் ஆண்டு உடுவிலில் ஆரம்பிக்கப்பட்டு இன்றைய குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகளிலும் பழமரச் செய்கையாளருக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றது. பட்டினிக்கெதிரான நிறுவனம், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு, சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் என்பவற்றின் கூட்டிணைப்பில் ஆரம்பிக்கப்பட்ட இத்தொழிற்சாலை சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தினால் நிர்வாகிக்கப்படுகிறது. ஆம், அதுதான் ஜசுபி- JACHUFI-Jaffna Chunnakam Fruit Industry.

### மூலப் பொருள்களைப் பெறுதல்

யாழ். குடாநாட்டின் விவசாய உற்பத்திகளைப் பெரும் மூலாதாரமாகக் கொண்டு சுகாதார முறையில் அதி உன்னதமாக தமது உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். விவசாயிகளிடமிருந்து உற்பத்திக்குப் பெற்றுக்கொள்ளும் பழங்களை கொள்வனவு செய்யும்போது தரக்கட்டுப்பாடு, நியாயவிலை, பொருளின்தரம் என்பன கருத்தில் கொண்டே கொள்வனவு செய்யப்படுகின்றன. இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் பழங்கள் அந்த அந்தக் காலங்களில் அளவுக்கதிகமாகக் கொள்வனவு செய்யப்பட்டு அடுத்த பருவம் (Season) வரும் வரையும் தகுந்த தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு பாதுகாத்து வைக்கப்படுகிறது. இவ்வாறு பாதுகாத்து வைப்பதனால் நியாயமான விலை, விலைத்தளம்பல், பொருளின்தரம் போன்றவற்றைச் சீர்செய்து நுகர்வோருக்குக் கொடுக்கிறார்கள். இப்பழங்களைச் சேகரித்துச் சாறாக்கி வைப்பதன் மூலம் பழங்கள் அற்ற காலங்களிலே மக்கள் பதப்படுத்திய உணவாக 'ஜசுபி' தயாரிப்புகளைக் கேட்டு வாங்கும் தன்மையை ஏற்படுத்தி உள்ளார்கள்.

### ஜசுபி தயாரிப்புகள்

நெல்லி ரசம், பழக்கலவைக் கோடியல், திராட்சைக் கோடியல், அன்னாசிக் கோடியல், பழக்கலவை ஜாம், விளாம் பழ ஜாம், ஸ்ரோபரி ஜாம், தக்காளி சோஸ், மிளகாய் சோஸ், மிளகாய் சட்ணி, தேசி ஊறுகாய், மோர் மிளகாய்.

### உற்பத்தி நடைமுறைகள்

உற்பத்திக்கு தேவையான நீரைச் சுத்தப்படுத்துவதற்கென தனியான இயந்திரம், பழம் பிழியும் இயந்திரம், பழப்பாகு காய்ச்சும் இயந்திரம் போன்றவற்றின் செயற்பாடுகளால் தமது உற்பத்திகளை வெற்றிகரமாக உற்பத்தி செய்கின்றனர். உற்பத்திக்குத் தேவையான தூயநீர் பெறுவதற்காகத் தண்ணீர் சுத்திகரிக்கும் கருவி-Water Purification Plant இயக்கப்படுகிறது. பழங்களிலிருந்து சாறைக் கூழ்நிலையில் பிரித்தெடுப்பதற்குப் பழம்பிழியும் இயந்திரம் பயன்படுகிறது. இவ்வாறு பெற்ற சாற்றுடன் ஏனைய மூலப்பொருள்களைக் கலந்து உற்பத்தியில் தொற்றுகள் ஏதுமற்ற கலவையாக (Disinfected mixture) பெரிய பாத்திரம் (PAN) ஒன்றில் சேர்க்கப்



பட்டு நிராவி மூலம் காய்ச்சப்பட்டு தற்காப்புப் பொருள்கள் (SMS) சேர்க்கப்பட்டு பலகாலம் கெட்டுப் போகாமல் சேமிக்கப்படுகிறது. ஜசுபியில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் நீராவியின் தொழிற் பாடுகள் கொண்டே உற்பத்தி செய்யப்படு கின்றன. நீராவியை உற்பத்தி செய்யும் பொயிலர் (Boiler) இயந்திரம் கடினநீரை மென்னீராக்கி அனுப்பப்படுகிற நீரைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

ஈயம், அலுமினியம் போன்றவற்றினால் ஆன இயந் திரங்களைப் பாவிக்கும்போது கார, அமிலங் கள் தாக்கமடைவதால் துருபிடியாத உருக்கு (Stainless Steel) இயந்திரங்களையே பாவிக்கிறார்கள். பழரசங்கள் அடைக்கும் போத்தல்கள் Autoclave இயந்திரத்தில் போட்டு நீராவி மூலம் அவிக்கப்படுகிறது.

### எதிர்காலத்திட்டங்கள்

*மரக்கறிகள் மலிவான காலங்களில் வாங்கி அரிந்து காயவிட்டு பங்கசு (பூஞ்சனம்) வராமல் பாதுகாத்து பொதி செய்து விற்பது.

*தக்காளி, பூசணி போன்றவற்றை மரக்கறிகளுடன் சேர்த்து 'மார்மைற்' (Marmite) தயாரிப்பது.

*உள்ளூரில் பால் கொள்வனவு செய்து 'டெல்ரா ரொபி' செய்வது.

*பழங்களிலிருந்து சாறு எடுத்து சுவையூட்டிச் சோடா தயாரிப்பது.

*சுத்தமான பருகும் நீர், போத்தலில் அடைத்து விநியோகிப்பது.

### வேலை வாய்ப்பு

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில் பாரிய ஓர் இடப் பெயர்வுக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தொழிற்சாலை 'ஜசுபி' ஆகும். இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட பின்பு பழச்செய்கை உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு நியாயமான விலைக்கு பழங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இதனால் அவர்களுக்கும் தொடர் வருமானம் கிடைக்கிறது.

### எதிர்நோக்கும் பிரச்சினைகள்

*வன்னி, தென்னிலங்கைப் பிரதேசங்களுக்குத் தயாரிப்புகள் செல்லாமை.

*பொருள்களின் கேள்வி, தரம், விலை என்பன தென்னிலங்கையிலிருந்து இறக்கு மதி செய்யப்படும் பொருள்களுடன் ஒப்பிடும்போது 'ஜசுபி' தயாரிப்புகள் தரமான வையாகவும் விலை குறைவாகவும் இருந் தும் யாழ்.மக்கள் பெரிதும் வெளிப் பொருள்களையே நாடுதல்.

* உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விநியோகிப்பதற்கு போதுமான வாகன வசதியின்மை.

*அடைப்பதற்குப் பாவிக்கப்படும் போத்தல்கள் கொழும்பில் இருந்து வரு விக்கப்படுவதால் அவற்றிற்கான செலவுகள் அதிக மாக உள்ளன.

*நீண்ட காலமாக யாழ். மண்ணில் நிலவி வரும்யுத்தசூழ்நிலை களாலும்பொரு ளாதாரக் கட் டுப்பாடுகளாலும் போதிய சந்தை வசதிகள் இல்லாமை.

யாழ்.குடாநாட்டில் இத் தொழிற்சாலை மக்களுக்குப் பெரும் சேவைசெய்து வரு வது மறுக்க முடியா தது. அவர்களின் உற் பத்திப் பொருள்களைத் தென்னிலங்கை மக்கள் விரும்பும் அளவிற்கு யாழ்.மக்கள் விரும்பாமை பெரும் கவலைக் குரியதாகும். யாழ். குடாநாட்டு வளத்தையே முற்றுமுழுதாக மூலப்பொருள்களாகக் கொண்டு இயங்கும் இத் தொழிற்சாலையைக் கைகொடுத் துத் தூக்க வேண்டியது யாழ்.மக்களுடைய பொறுப்பு அல்லவா.

**********

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தைச் சேர்ந்த ?வது விவசாயச் சிறப்புப் பிரிவின் மாணவர்கள் ஐவர் சேர்ந்து நடத்திய கள ஆய்வில் கிடைத்த தரவுகளின் தொகுப்பு இது.

# இந்திய அணியைப் புரட்டி எடுத்த 'சுழல் தளபதி' அஜந்த மெண்டிஸ்!

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் புதிய சுழல் சூறாவளியாக புறப்பட்டிருக்கிறார் அஜந்த மெண்டிஸ். ஆசியக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இந்திய அணியைப் புரட்டி எடுத்த அவர், இலங்கை அணி சம்பி



யன் பட்டம் வெல்ல முக்கிய காரணமாக இருந்தார்.

பந்துவீச்சில் வித்தியாசம் காண்பிப்பதே மெண்டிஸிற்குச் சாதகமான அம்சமாக விளங்குகின்றது. 'லெக் ஸ்பின்னரா' அல்லது 'ஓவ் ஸ்பின்னரா' என்று கணிப்பதற்குள் துடுப்பாட்ட வீரர்கள் காலியாகி விடுகின்றனர். இதனை இந்திய அணித்தலைவர் டோனியே ஒப்புக்கொண்டுள்ளார்.

அடுத்து நடக்க உள்ள டெஸ்ட் தொடரிலும் மெண்டிஸின் மந்திர பந்துவீச்சை எதிர்பார்க்கலாம். இவருக்குப் பக்கபலமாக 'சுழல் மன்னன்' முரளிதரனும் இருப்பதால், இந்திய அணி இம்முறை வாங்கிக்கட்டும் என எதிர்பார்க்கலாம்.

இலங்கை ஜாம்பவானான டுலீப் மெண்டிஸ் பிறந்த மொறட்டுவ கிராமத்தில்தான் அஜந்த மெண்டிஸும் பிறந்தார். இளம் பருவத்தில் இருந்தே கிரிக்கெட் மீது மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.

இலங்கை இராணுவத்தில் இருந்தபோது இராணுவக் கிரிக்கெட் அணிக்காக தேர்வு செய்யப்பட்ட இவர் தனது 'சுழல்' திறமையை சிறப்பாக வெளிக்காட்டினார். இதையடுத்து இலங்கை அணியில் வாய்ப்புத் தேடி வந்தது. கடந்த ஏப்ரலில் நடந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் அறிமுகமானார். சமீபத்தில் பாகிஸ்தானில் நடந்த ஆசியக் கிண்ணத் தொடர்தான் இவரை புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது.

ஆசியக் கிண்ண இறுதியாட்டத்தில் இந்தியத் துடுப்பாட்ட வீரர்களைத் திணறடித்த மெண்டிஸ் 13 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதுகளை வென்ற அவரைப் புகழாதவர்களே இல்லை.

பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் வசீம் அக்ரம் கூறுகையில், "இறுதியாட்டத்தில் மெண்டிஸின் சுழல் ஜாலத்தைப் பார்த்து பிரமித்து போனோம். இப்படி ஒரு அசத்தலான பந்துவீச்சாளரை நான் பார்த்ததே இல்லை." - என்றார்.

டெஸ்ட் அரங்கில் அதிக விக்கெட்டுகளை (735) வீழ்த்தி சாதனை நாயகனாகத் திகழும் முரளிதரனைத் தொடர்ந்து, மெண்டிஸும் கலக்கி வருகின்றமையால் இலங்கை அணி இரட்டை மகிழ்ச்சியில் உள்ளது. மெண்டிஸ் அனைத்து வகை சுழல்களிலும் பந்துவீசுவதில் கெட்டிக்காரர். எதிரணியின் முன்வரிசை


## தொடரும் துடுப்பாட்ட வீரர்களின் ஆதிக்கம்!

யைத் தகர்க்கும் பிரதான பந்துவீச்சாளராக அவர் உள்ளார்.

'பிளிப்பர்', 'கூக்ளி', 'ரொப்-ஸ்பின்னர்' என அனைத்து விதமான முறைகளையும் பயன்படுத்துகிறார். போட்டிகளில் 'கரம் போல்' என்ற புதுமையான பந்துவீச்சு முறையைக் கையாண்டு வருகிறார். அதாவது கரம் வீரரைப் போல தனது விரல்களால் பந்தை சுழற்றி வீசுகிறார்.

முரளிதரனிடம் [illegible] இருந்தது. ஆனால் மெண்டிஸிடம் நிறைய பிரமாஸ்திரங்கள் உள்ளன. தற்போது 23 வயதான மெண்டிஸ் 8 ஒரு நாள் போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார். இன்னும் டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கவில்லை. இவரையும் முரளியையும் ஒப்பிட்டுப் பேசுகின்றனர்.

இது குறித்து இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன கூறுகையில், "முரளிதரனோடு மெண்டிஸை ஒப்பிடுவது சரியாகாது. அவர் அனுபவமிக்கவர். மெண்டிஸ் இப்போதுதான் கிரிக்கெட்டில்காலடி எடுத்து வைத்துள்ளார். இன்னும் நிறையக் கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது." - என்றார்.



ஆசியக் கிண்ணக் கிரிக்கெட்போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற இலங்கைக் கிரிக்கெட் அணி புதன்கிழமை காலை தாயகம் திரும்பியது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இலங்கை அணியினர் விளையாட்டுத் துறை அமைச்சர் காமினி லொக்குகேவால் வரவேற்கப்படும் காட்சி.

ஆஸ்திரேலியாவின் வோர்ன் ஓய்வு பெற்று விட்டார். முரளிதரன், கும்ளே ஓய்வு பெறும் நிலையில் உள்ளனர். எனவே சர்வதேச அரங்கில் 'சுழல் ராஜ்ஜியம்' நடத்த மெண்டிஸுக்கு வாய்ப்பு அதிகமாகவுள்ளது.

### 'ரஜீவ் கேல்ரத்னா' விருதுக்கு டோனியின் பெயர் பரிந்துரை

இந்திய விளையாட்டின் மிக உயர்ந்த 'ரஜீவ் கேல்ரத்னா' விருதுக்கு டோனியின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்திய அணியின் ருவென்ரி/20, ஒரு நாள் போட்டிகளுக்கான அணித்தலைவராக டோனி அசத்தி வருகிறார். தென்னாபிரிக்காவில் நடந்த ருவென்ரி/20 உலகக் கிண்ணப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்று காட்டினார். ஆஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்புத் தொடரிலும் இந்திய அணிக்கு சாம்பியன் பட்டம் பெற்றுத் தந்தார்.

இதற்கு அங்கீகாரம் அளிக்கும்விதமாக டோனியின் பெயரை 'ரஜீவ் கேல்ரத்னா' விருதுக்கு இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) பரிந்துரை செய்துள்ளது.

இது பற்றி பி.சி.சி.ஐயின் நிர்வாக அதிகாரி ரத்னாகர் ஷெட்டி கூறுகையில்,

"2007ஆம் ஆண்டுக்கான கேல்ரத்னா விருதுக்கு டோனியின் பெயரைப் பரிந்துரை செய்துள்ளோம். விருது பெற அனைத்துத் தகுதிகளும் இவருக்கு உண்டு" - என்றார்.

டோனி தேர்வு செய்யப்பட்டால், சச்சினுக்கு (1997-98) பிறகு, கேல்ரத்னா விருது பெறும் 2ஆவது கிரிக்கெட் வீரர் என்ற பெருமையைப் பெறுவார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

டிலான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CARE International
## Sri Lanka

**CARE International Sri Lanka is an INGO actively involved in addressing issues of social marginalization throughout the country. It implements a diverse portfolio of programmes in, governance, gender equity and power analysis, peace building & reconciliation, sustainable livelihoods and emergency and disaster risk reduction**

**We seek the services of qualified, proactive, and self-motivated individuals to join our team.**

## LOCAL INITIATIVE FOR TOMORROW II (LIFT II)

The focus of the *Local Initiatives for Tomorrow 2 (LIFT2) Project* will be building the capacities of community-based organizations, in the conflict-affected areas of the north and east, to directly tackle and advocate on issues that affect the livelihoods of their members and communities, using principles of good governance. The project will be implemented by CARE INTERNATIONAL-Sri Lanka over a five year period from 2008 in Jaffna, Batticaloa, and the Wanni.

The **Goal** of the LIFT2 Project is to strengthen Sri Lankan capacity and commitment to share power and resources equitably, and to protect the fundamental human rights of all citizens. The **Purpose** of the Project is to strengthen communities by building the capacities of CBOs to effectively advocate for poor and marginalized households, and to undertake activities that address discrimination and rights barriers, reduce conflict, improve livelihoods and local economies, and prepare for emergencies.

### 1. FIELD CO-ORDINATOR
*Kilinochchi (04 Positions) / Jaffna (01 position) / Batticaloa (2 positions)*

The Field Co-ordinator will directly implement and monitor implementation in the field. He/She will work directly with Project beneficiaries to achieve Project outputs that include: strengthening Community Based Organisations to improve the livelihoods of target groups; foster peace building; and help communities plan for disaster and environmental change events. The Field Co-ordinators will deliver a capacity building Programme that focuses on both institutional and technical skills. Importantly, he/she will contribute significantly to Programme development and innovation.

### 2. FIELD CO-ORDINATOR – APPLIED RESEARCH
*Jaffna (01 position) / Batticaloa (01 position)*

The Field Co-ordinator – Applied Research will directly contribute to understanding and documenting the impact of the Project's various interventions by analyzing and evaluating them. He/She will also be responsible for co-ordinating, analysing and documenting applied research and pilot activities in conjunction with other staff, or external parties. When pilots are deemed successful, he/she will devise methods for scaling up the interventions or approaches. The Field Co-ordinator - Applied Research will ensure that lessons learned are documented and disseminated throughout the Project and the CARE mission. He/She will be the focus for bringing lessons learned from other CARE initiatives and those of other parties to the Project. This position will contribute significantly to programme development and innovation.

Candidates should possess a Diploma / Bachelor's Degree in a relevant technical area and/or development studies with a minimum of two years development experience in the field. Applicants should have strong analytical, programming, and inter-personal skills.

### 3. PROJECT CO-ORDINATOR – SOCIAL MOBILISATION / TRAINING –
*Batticaloa (01 Position)*

The Project Co-ordinator – Social Mobilization / Training will be responsible for developing, co-ordinating, and ensuring the effective implementation of the Project's social mobilization (including mainstreaming cross-cutting themes such as gender and diversity and peace building) and training elements in all Project areas, particularly disaster and environmental change response. She/he will oversee the identification of skills requirements of the target groups and staff; plan training strategies and activities; provide technical inputs; access resource persons; and co-ordinate with relevant service providers. She/he must report and disseminate findings and develop strategic relationships with key partners. It must also ensure that successful pilots are rolled out across the entire project.

### 4. PROJECT CO-ORDINATOR – MARKETING –
*Jaffna (01 position)*

The Project Co-ordinator – Marketing will be responsible for developing, co-ordinating, and ensuring the effective implementation of the Project's initiatives related to Marketing. It will address all components of the Project (agriculture, fisheries, and micro and small business development). All capacity building requirements of staff, Partners, and Community Based Organisations in areas affiliated with marketing will be co-ordinated or implemented by the PC Marketing. She/he will plan strategies, approaches, and activities, provide technical inputs, and develop and maintain strategic collaborations – all related to marketing. The PC - Marketing will also assist in the collection and analysis of information related to marketing for monitoring and evaluation and reporting purposes. She/he will also document all relevant lessons, issues, and developments related to this component.

Candidates should hold a degree in Social Science together with a minimum of two years development experience preferably in the Field of Social Mobilization and training. A similar Post-Graduate Degree will be a distinct advantage. Applicants should have strong analytical, programming, and inter-personal skills.

All positions carry an attractive salary together with the usual CARE benefits. Positions are on contract basis and require fluency in writing and speaking of Tamil and English languages. The positions are based in the above locations with extensive field travel across the country.

**Suitably qualified candidates are encouraged to apply with names and addresses of three non-related referees (with contact numbers) to the address given below within 10 days of this advertisement. The application should contain relevant bio-data and a one-page hand written text explaining how you could contribute to the LIFT Project.**

**The post for which you are applying should be indicated on the left-hand corner of the envelope. We thank all applicants, but only the short-listed candidates will be notified for interviews.**

**Women are highly encouraged to apply.**
**CARE is an equal opportunity employer**

**Director - Human Resources, CARE INTERNATIONAL,**
**No.7 A Gregory's Road, Colombo 7**
***Canvassing will be an immediate disqualification***



## விற்பனைக்கு

அமெரிக்கன்/யப்பான் அம்ரிலியர், ஸர்க்கர், புதிய கார்/ வான் மெட்டல் மியூசிக் Horn, ஈக்தலைசைர், T.V, பிரிஜ், ரோபா கட்டில், சாப்பாட்டு மேசை, கதிரைகள், புதிய வீட்டு முதிரைக் கதவுகள், கேற், ஸ்கூட்டர், கும்பகோணக் குத்துவிளக்குகள், மோட்டார் சைக்கிள், ரென்ட் (Tent) என்பன விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: **ஆனந்தராகம்,**
இல.09 நக்காறோட் யாழ்ப்பாணம். (மில்லுக்கு முன்பாக, ICRC க்கு அடுத்தவீடு)

## திருமண சேவை

சுலபமான மணமக்கள் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திடத் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த சுயதெரிவு முறை முன்னோடி தனிமனித நிறுவுநர் சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்பு கொள்ளுக! தொலைபேசி: 2360486, 2360694, 4873929

## உடன் விற்பனைக்கு

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில் வீதியில் 2 பரப்பு வெற்றுக் காணி உடன் விற்பனைக்கு உண்டு
தொடர்பு: சி.சதீஸ். T.P.0777664946

## காணி தேவை

நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், கோண்டாவில், திருநெல்வேலிப் பகுதிகளில் மின்சாரம், நன்னீர் வசதியுள்ள, லொறிகள் போகக் கூடிய சிறிய இன்டஸ்ரியல் நடத்தக்கூடிய மிகவும் குறைந்த விலையில் 1 - 2 பரப்புக் காணி உடன் தேவை.
தொடர்பு:
Mobile: 0041786080269 (SMS)
Mobile: 0041762870708 (SMS)
E.Mail: Jaffnacity@hotmail.com


## சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சிவார விழா

யாழ்ப்பாணம்,ஜூலை13

சாவகச்சேரி நகரசபையின் உள்ளூராட்சி வாரவிழா நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவிற்கு முதன்மை விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ, தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் ஆகியோரும் கலந்துகொள்வர்.விழாவில் உள்ளூராட்சி வார சிறப்பு மலர் வெளியீடு, நகரசபை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் இன்று வரை பணியாற்றிய தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரின் புகைப் படங்களும் பெயர் விவரங்களும் திரைநீக்கம் செய்தல்,அரசசேவையில் 25 வருடகால சேவையைப் பூர்த்தி செய்த நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்களைக் கௌரவித்தல், உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடத்தப்பட்ட அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்றோர்களுக்கு பரிசில்கள் வழங்கல் ஆகியவையும் இடம்பெறும். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறும். (202-207)


உ

## ஆச்சார்ய அபிஷேக அழைப்பு

**ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களரமான சர்வதாரி வருஷம் ஆனித் திங்கள் 30 ஆம் நாள் (14.07.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி 30 நிமிடம் முதல் 11 மணி 45 நிமிடம் வரையுள்ள சுபமுகூர்த்த நன்நாளில்**

**பிரம்மஸ்ரீ க. முத்துக்குமாரசர்மா அவர்களின் சிரேஷ்ட புதல்வன்**
**ஸ்ரீநிவாச சர்மா அவர்களுக்கும்**
**பிரம்மஸ்ரீ வை. ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்களின் புதல்வன்**
**உமாசுத சர்மா அவர்களுக்கும்**

சமய, விசுஷ, நிர்வாண தீட்ஷை, ஆச்சார்ய அபிஷேகம் என்பன செய்ய குருவருளும், திருவருளும் சேர்ந்து பெரியோர்களினால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம் நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் அனைவரையும், குடும்ப சமேதராக வருகைதந்து குருவருளும், திருவருளும் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபமஸ்து

**தங்கள் நல்வரவை நாடும்:**

பிரம்மஸ்ரீ புவன சதாசிவக் குருக்கள்
குடும்பத்தினர்
'பாக்கியலெட்சுமி வாசம்'
*கல்வியங்காடு,*
*யாழ்ப்பாணம்.*

நல்லூர் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தான அறங்காவல் குழுவினரும் உப குழு இளைஞர்களும் ஊர் வாழ் விநாயகர் அடியார்களும்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**தோற்றம்:**
**06.04.1917**



**மறைவு:**
**15.06.2008**

## அமரர் ஏரம்பமூர்த்தி புண்ணியமூர்த்தி

கடந்த 15.06.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளை குறைகள் இன்றி நிறைவேற்ற சகல வழிகளிலும் உதவியோருக்கும் வல்வையில் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் மற்றும் நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் 15.07.2008 செவ்வாய்க் கிழமை காலை 6.30 மணிக்கு முகத்துவாரம் அந்தியேட்டி மண்டபத்தில் நடைபெறும்.

எதிர்வரும் 17.07.2008 வியாழக்கிழமை பம்பலப்பிட்டி, லோரன்ஸ் வீதி, இல 8 இல் அமைந்துள்ள A.V.S. மண்டபத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

கொழும்பு.

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புள்ளோய் எப்பன் தண்ணி கொண்டு வா மோனை"

குத்தகைப் பொன்னையாவின் குரல் கரகரத்து ஒலிக்கிறது.

மாசி மாதத்துப் பனி வெய்யிலின் அகோரத்தைப் பெருமூச்சுடன் ஊதித்தள்ளுகிறார். அப்பொழுதுதான் தோட்டத்தால் வந்தவர், தலையைச் சுற்றியிருந்த துண்டைக் கழற்றி வெளி விறாந்தைத் தூணுக்குத் தலை அணையாக வைத்து உடலைச் சரித்துக் கொள்ளுகின்றார்.

மாட்டுக்குத் தண்ணீர் வைத்துக் கொண்டிருக்கும் மகளின் மேல் அவர் பார்வை விழ, நெஞ்சம் கவலையில் ஆழ்கிறது.

அவரது முகத்திலும் நெற்றியிலும் ஓடியிருக்கும் வயோதிபத்தின் சுவடுகளை வரம்பாக்கி வேதனை பாய்கிறது.

'சீரும் சிறப்புமாக வாழ்கிற வயது.... இவளின்ரை தலையெழுத்து இப்படியாப் போச்சு'

தோட்டத்து ஆடுகால் நிழலில் சின்னத்தம்பியார் நளினமாகக் கேட்டவை குத்தகைப் பொன்னையாவின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

"கலியாண எழுத்துத் தள்ளவேணுமெண்டு மருமோன் பெடியன் ஒற்றைக் காலில் நிற்கிறானாம்."

இரண்டு வருடத்திற்குள் இப்படி நடக்குமென்று அவர் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.



புலோலியூர் க.சதாசிவம் ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களின் நான்காவது பரம்பரையைச் சேர்ந்தவர். அறுபதுகளின் ஆரம்பத்தில் தமது எழுத்துப் பணியை ஆரம்பித்தவர்.

தொழிலால் வைத்திய அதிகாரியாக விளங்கிய அவர் தமது மணிவிழாவைக் காண்பதற்கு முன்னரே யுகப்பிரவேசம், ஓர் அடிமையின் விலங்கு, ஒரு நாட் போர், புதிய பரிமாணம் ஆகிய நான்கு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டிருந்தார். தமது மணிவிழாப் பரிசாக "அக்கா ஏன் அழுகிறாள்" என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டவர்.

கிராமப்புறம் சார்ந்த காட்சிகளையும் வாழ்க்கைக் கூறுகளையும் உருக்கமாகவும் நேர்மையாகவும் சித்தரிக்கும் திறன் கொண்டவர் எழுத்தாளர் சதாசிவம்.

"இவரது கதைகள் யாவும் செவ்வனே பின்னப்பட்டு உயிர்த்துடிப்புள்ள பேச்சுத் தமிழ் இயற்கையான அமைதி பெற்று விளங்குகின்றன" என்று ஈழத்துச் சிறுகதை முன்னோடி சி.வைத்திலிங்கத்தால் பாராட்டப்பெற்றவர்.

இவர் சிறந்த நாவல் ஆசிரியருமாவார். தமது எழுத்துக்களுக்காக சாகித்தியப் பரிசுகளையும் ஏனைய பல அரச விருதுகளையும் பெற்றவர். இலக்கியப் போட்டிகளில் பல தடவைகள் முதற்பரிசில்களை வெற்றி கொண்டவர்.

புலோலியின் பெயரைத் தமது பெயருக்கு முன்னால் சூடிக்கொண்ட முதலாமவர் - புலோலியூர் க.சதாசிவம் என்பர்.

அவர் 2004 ஆம் ஆண்டில் அமரரானார். "புலோலியூர் சொல்லும் கதைகள்" தொகுதியிலிருந்து பெறப்பட்ட "மண்" என்ற சிறுகதையை அவரது ஞாபகார்த்தமாக இங்கு வெளியிடுகிறோம்.

# மண் (சிறுகதை)

'சொந்தத்துக்குள்ளை மருமோன் பெடியனைக் கட்டிக் குடுத்திருந்தாலும் ராசாத்திபோல என்ரை புள்ளை இருக்கும்'

'படுபாவி பரமநாதன் என்னைக் கொண்டுபோய் பாண் கிணத்துக்குள்ளை விழுத்திப் போட்டான்.'

மறுநாள் கலியாண எழுத்து. நிலவில் செம்பாட்டுத் தோட்டத்தில் புகை யிலைக் கன்றுகளுக்குப் பாத்தி கட்டிக் கொண்டிருக்கும் பொழுது பரமநாதன் அவரைத் தேடிவந்து செய்த 'கூத்து'.

'பத்தாயிரம் ரூபா எழுத்தண்டைக்கு வைக்காட்டால், உது சரி வராது எண்டு மாப்பிள்ளை குழப்புகிறார்.'

பொன்னையா பத்தாயிரம் புரட்ட இரவிரவாகப் பட்டபாடு.

'அவன் நொத்தாரிசிட்டை நோட்டுக்கு வாங்கின காசு பத்தாயிரம் ரூபாவும் இந்தத் தையோடை எல்லை தப்பிப் போச்சு, மற்றவங்களெண்டால் இவ்வளவுக்குச் சித்தாரிச்சுக் கோட்டுக்கு இழுத்திருப்பாங்கள். நாங்கள் நாலுபேர் மதிக்க நாணயமான மனுஷராக உலாவின படியால்தானே அவன் மனுஷன் விட்டிட்டிருக்கிறான்.'

சீதனமாக வந்த மண் வீட்டை இடித்துக் கல்வீடு கட்டத் தொடங்கும்பொழுது அவர் கையில் அதிகம் காசு இருக்கவில்லை. அந்த வருடம் விற்ற புகையிலைக் காசில்தான் அத்திவாரம் போட்டார்.

கீழ்க்கன்றுகள் முளை விடுவதற்குமுன் ஒரு 'பெம்பிளை'ப் பிள்ளை என்ற நினைப்பில், உழைப்பைக் காணிகளுக்குப் 'பாட்டிசம்' போடும் 'நுண்கலை' யில் கொட்டினார். சிறு பங்குகளுக்காகப் பெரும் பணத்தைச் செலவு செய்து 'சுப்ரீம்' கோடுவரை போய் வந்திருக்கிறார்.

'என்னைப்போல தோட்டம் செய்தவை இந்த ஊரிலை ஆர்? எங்கடை தோட்ட வெளியிலை பலிக்கப் பொயிலைக் கண்டு செய்து, முதல் வெட்டி உலத்தி விக்கிறது நான்தானே. 'பொன்னையாணணை! என்ரை பொயிலையை ஒருக்கால் பாத்து வெட்டுங்கோ' எண்டு மடத்தடிப் பெடியங்கள் எத்தனை பேர் வீடு தேடி வந்திருப்பாங்கள். இண்டைக்கும் வருஷம் பிறந்தால் வண்டில்காரப் பெடியன் என்னெட்டைத்தானே கைவியளம் வாங்கிறது.

பொன்னையாவுக்குக் 'குத்தகைக்காரன்' என்ற பெயர் இன்று நேற்று வந்ததல்ல. அவரது மூத்த மகள் பாக்கியம் பிறந்த வருஷமே இந்த 'விருது' அவருக்குக் கிடைத்துவிட்டது.

புகையிலை உலர்த்துக் காலம் தொடங்கி விட்டால் அவரது வீடு திருவிழாக்கோலம் பூண்டு விடும். குத்தகைக்குக் கொடுத்தவர்கள் அவருக்குச் 'சம்பளத்துக்கு' ஒத்தாசை செய்வார்கள்.

கந்தனின் கள்ளும் காத்தவராயன் கூத்துப் பாட்டும் அவர்களுக்கு உற்சாகம் ஊட்டும்.

பாக்கியம் பம்பரமாகச் சுழன்று எல்லோருக்கும் சமைக்குப் போடுவது தொடக்கம் புகையிலை வேலை வரையும் செய்யும் கயிட்டைத்தைப் பார்க்கும் பொன்னையா, 'எல்லாம் என்ரை மோளுக்குத்தானே. இன்னும் எத்தனை நாளுக்கு இந்தக் கயிட்டம். நாளைக்கு உத்தியோக மாப்பிள்ளையைக் கட்டிக் கொழும்புக்குப் போய்விட்டால் அவள் சீமாட்டியெல்லோ?" என மனதுக்குள் சொல்லிக் கொள்வார்.

"அப்பு இந்தாணை தண்ணி"

இரண்டு கையாலும் வாங்கிய செம்புத் தண்ணீரை ஒரே முடறில் குடித்துவிட்டு, செம்பைப் பாக்கியத்திடம் நீட்டிய பொழுது ஏனோ அவர் கைகள் நடுங்கின.

'பாவம் பிறந்த வீட்டிலைதான் ஆறணிவு எண்டால், கட்டிக் கொடுத்தாப் போலையும் நாலு நாளைக்கு என்ரை புள்ளை ஆரிச்சுப் பூரிச்சு வாழக்குடுத்து வைக்கேல்லை'

நடந்து செல்லும் பாக்கியத்தில் கடந்த காலத்தைக் காண்கிறார் பொன்னையா.

பரமநாதன் அவரைச் சந்தித்தது அவளுக்கு மாப்பிள்ளை தேடும் படலம் ஆரம்பித்த பொழுதுதான்.

"மாப்பிள்ளை நல்ல ஒழுக்கமான பெடியன். கச்சேரியில் கிளறிக்கல் வேலை. வெட்டுக் கொத்தும் பிழையில்லை. நாலஞ்சு பேருக்குப் பெரியவனாம்"

பரமநாதனின் ஆசையால் உந்தப்பட்ட குத்தகைப் பொன்னையா நேரே சென்று மாப்பிள்ளையின் தாயாரையே கேட்டுவிட்டார். தகப்பன் இல்லாத காரணத்தால் சிறிய தகப்பன்மார்கள், மச்சான்மார்களின் சம்மதத்தைப் பெற அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

எல்லாப் பொருத்தமும் பொருந்தி வரும்பொழுது சீதனத்தில் சிக்கல் ஏற்பட்டது. உத்தியோக மாப்பிள்ளையை எடுக்க வேண்டுமென்ற அவசரத்தில் இளையதுகள் இரண்டையும் எண்ணிப் பார்க்காது மனைவியின் சீதனத்தை அப்படியே 'தாரவார்த்துக்' கொடுத்துவிட்டார்.

பேர்போன பெரிய மேளம், இடைக்காட்டுச் சப்பறம், 'லையிற்-மெஸின்', வாண வேடிக்கைகள் இத்தியாதி சிறப்புடன் 'கார்ட்' அடித்துக் கொண்டாட்டம் மூன்று நாள்கள் வரை வைத்து, அந்தக் கிராமமே வாயிற் கையை வைக்கக்கூடிய அளவுக்கு, எந்தத் தோட்டக் காரனும் இதுவரை செய்யாத தனிச்சிறப் புடன் பாக்கியத்தின் திருமணத்தைச் செய்து முடித்தார்.

'மோனை ! நீ பாக்கியம் செய்தனி என்றெல்லோ எண்ணியிருந்தேன்'

கலியாணம் நடந்த வருஷம் கலியாண வீட்டுச் செலவுக்குக் கையிலை காசில்லாமல் இருந்த பொழுது, கொக்குவில் வியாபாரி வந்து கைக்காசு கொடுத்துப் புகையிலை முழுவதையும் கட்டிக் கொண்டல்லோ போனான்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பற்றைக்குள் பூத்த பூக்கள்

ஞாயிறு சிறப்புக் கவிதை

புகழ்தல் இகழ்தல் புவியிற் பொதுமை
புகழ்ந்தவர் இகழ்வது புந்தியின் புதுமை
நரகமதில் சுவர்க்கமும் சுவர்கமதில் நரகமும்
வருவிக்கும் வல்லமை மனதின் மாண்பு
மனத்தை உடையவன் மனிதன் மாறும்
மனத்தின் மதிப்பீடும் மாறும் வகையதே
பயணிக்கும் பாதையில் பார்த்தது மொழிவேன்
பயனில் பற்றைக்குள் படர்கொடி தனிற்பூப்
பலதிகழ்ந் தனஅழகைப் பார்த்ததும் மகிழ்ந்தேன்
மலர்ந்தது மனத்தில் கதையும் கருத்தும்

முல்லைபோல் மொட்டுடன் பூக்கள் இருவகை
இளஞ்சிவப் பதில்சிறிய பூக்கொத் துகள்பல
கடுஞ்சிவப் பதில்செஞ் சாறிட்ட செவ்விரல்
அனைய நீள்இதழில் மஞ்சள் கீறுகள்
பச்சை நீள்மடல் களும் கத்தரித்த
விளிம்புகள் இரண்டும் கூரிய நுனியும்
விழிகளைக் கவரும் வனப்பொடு ஒன்றும்
தேரென்ன தேசமே கொடுப்பேன் யான்
பாரெல்லாம் பரவட்டும் பார்ப்பவர் மகிழட்டும்

வன்மனம் தன்னில் வனப்பொடுவ ளமும் உண்டு
வன்தாட்டி டைசந்தன மரமும்வி டநாகத்தின்
நன் மணியு மெனத்தோன்றி யஇடம் பொருளல்ல
குணமும் கோலமும் கொள்வது குணமே
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை
நற்குணம் தனைஇ தாகுணம் களைக
மனமது மகிழ விளைந்திடும் நன்மையே

- பிறை -

# பண்பாடுகளை இழந்து விடும் வசதி படைத்த அநாகரிகர்

**மு.கனகசபை.**

நாகரிகம் என்ற சொல் பலரால் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. பெரியவீடு, பஞ்சணை விரித்த கட்டில்கள், காற்றாடிகள் , குளிர்பெட்டி, மின்விளக்குகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், ஆளுக்கொரு தொலைபேசி, வாகனங்கள் ஆகிய விஞ்ஞான வளர்ச்சியால் கிடைத்த பல்வேறு பொருள்கள் இருந்துவிட்டால், அங்கே நாகரிகம் வளர்ந்திருப்பதாகப் பலர் கருதுகிறார்கள்.

இற்றைக்கு நாலாயிரம் வருடங்களுக்கு முன்னர் சிந்துநதி வெளியில் திராவிட இனம் உயர்ந்த நாகரிகத்தோடு வாழ்ந்தார்கள் என அறிகிறோம். அப்போது இந்த விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் இருக்கவில்லை. ஆனால், அவர்களிடம் அன்பு, அறம், கருணை, இரக்கம், சேவை, தியாகம், பக்தி, ஒழுக்கம், மனிதநேயம் முதலான உயர்ந்த பண்புகள் இருந்தன. அவர்கள் அமைதியாக ஒரு பிரதேசத்தில் வாழ்ந்தார்கள்; வளர்ந்தார்கள். இறை தத்துவங்களைக் கூட சிந்தித்தார்கள்.

ஆனால், ஒரு குறையிருந்தது. உட்பூசல்களோ, பகைமையோ இல்லாதிருந்தமையால் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய பலம் இருக்கவில்லை. அச்சமின்றி வாழ்ந்தார்கள். அதனால், மேற்கேயிருந்து குதிரைகளில் வந்த மந்தை மேய்ப்பாளர், இலகுவாக அவர்களைத் துரத்தவும், அழிக்கவும் முற்பட்டார்கள்.

குடிசை வாழ் மக்களிடம் நாகரிகம், உயர்ந்த பண்பாடுகள் இருக்கும். செல்வம் படைத்தவர்களும் வசதி படைத்தவர்களும் பண்பாடுகளை வீரைவாக இழந்து விடுகின்றனர். தெய்வத்தைப் பேணார். சுற்றத்தைப் பேணார். சொல்வதை அறிந்து சொல்லார். வெம்பகை வலிதென்று எண்ணார். வல்வினை என்று ஒன்று இருக்கிறதே; அதன் விளைவையும் பாரார். அவர்களிடம் அநாகரிகம் தளைத்து வளர்கிறது. பரிதாபம்! ★★★★★★★ ★★★★★

# மனிதப் பண்புகளைப் பேணிக் காக்க வலியுறுத்தும் திருக்குறளின் தனிச்சிறப்பு



சங்ககாலப் புலவர்கள் பிறப்புகளில் மனிதப்பிறவியே மாண்புமிக்க தென்பதையும், அத்தகைய மாண்புமிகு பிறப்பெடுத்து இவ்வுலகில் வாழப்பேறு பெற்ற மனிதன், மனிதப் பண்புகளுக்கமைய ஒழுகி வாழ்ந்து தனக்கும் தான் சார்ந்த சமுதாயத்துக்கும் பயனுடையவனாக வாழவேண்டும் என்பதையும் தத்தமது படைப்புகளில் வற்புறுத்திக் கூறத் தவறியதில்லை.

அந்தவகையில், தமது ஈரடி வெண்பாக்களில் கொடையின் சிறப்புக் குறித்தும் அவசியம் பற்றியும் திருவள்ளுவர் எத்தனை ஆழமாக வற்புறுத்தியுள்ளார் என்பதை இங்கு நோக்குவோம்.

**அன்பின் வழியது உயிர்நிலை**

வாழ்வளிக்க வந்த துணைவியிடத்திலும், குலம் தழைக்கப் பிறந்த மக்களிடத்திலும் மாசற்ற அன்புடன் ஈடுபாடு கொள்ள வேண்டும். இல்லறம் இனிது நடக்கவும், பிற உயிர்களின்மேல் கருணை பிறக்கவும் அன்பின் பயன் காரணமாக இருப்பதால் அந்த அன்பை, தவத்தைப் போலத் தன் மனத்திலே வளர்க்க வேண்டும். அன்பு இல்லாது போனால் இல்லறம் இனிது நடக்காது. அங்கே களிப் பில்லாமல் கசப்பு மேலோங்கி நிற்கும். துன்பங்கள் ஒவ் வொன்றாய் வந்து கூடிக் குடும்பத்தைச் சிதைக்கும்.

'குளம்' என்றிருந்தால் அங்கே தண்ணீர் இருக்கவேண்டும். அது இல்லாவிட்டால் குளத்திற்குப் பெயர் பள்ளம். 'மனம் என்றிருந்தால் அங்கே அன்பு இருக்க வேண்டும். அது இல்லாவிட்டால் அது முள்ளடர்ந்த வனம்.


மனத்தில் அன்பில்லாமல் வாழும் உயிர் வாழ்க்கைக்கு வெறுப்புடன் ஓர் உதாரணம் தருகிறார் வள்ளுவர்.

*'வன்பாற்கண் வற்றல் மரம்தளிர்த் தற்று' என்று. 'பாலை நிலத்தில் பட்ட மரம் தளிர்த் தாற் போன்றது'* என்பது பொருள்.

பாலை நிலமோ வன்மையானது. அதிலே மரம் முளைப்பதே அரிது. அந்த நிலத்திலே ஏதோ மரம் ஒன்று தவறி முளைத்துவிட்டது. முளைத்த மரமும் பட்டுப் போய்விட்டது. அந்த நிலையிலே ... முடியாது. அதைப் போலத் தான் விதி வசத்தால் மனிதன் பிறக் கிறான். ஈரம் சுரக்க வேண்டிய அவன் மனம் பாலை நிலமாகி விட்டது. அதிலே பட்ட மரமாகி விட்டது அன்பு. இப்படிப்பட்டவன் வாழ்க்கை பட்டுப் போக வேண்டியது தான்.

***அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை வன் பாற் கண் வற்றல் மரம் தளிர்த் தற்று.***

அன்பு செலுத்தாதவன் வாழ முடியாது என்பதற்குக் காரணம் உண்டு. பிறரிடம் விருப்பம் உடையவனாக வாழும் தன்மை அவனிடம் இல்லாததால் அற்றுப் போகும்.



பிறரிடம் விருப்பம் காட்டாதபோது, பிறரும் விருப்பம் காட்ட மாட்டார்கள் அல்லவா? இவ்வகை யில் பிறர் தொடர்பு நீங்கிய பின்னர் அவன் தனித்து வாழ்வது எங்ஙனம்?

உடலும் உயிரும் தொடர்பு கொள்ளும் போது தான் இரண்டும் பயன் பெறுகின்றன. உயிர் நீங்கி விட்டால் உடம்பு மரக்கட்டையாகி விடுகிறது. அதைப் போல 'அன்பு' என்ற உயிர்நிலையை இழந்த மனிதன், வெறும் மரக்கட்டைதான். வாழப் பிறந்த மனிதன் மரக்கட்டையாகிவிட்ட பின்பு, வாழ வைக்கும் உயிர்த் துடிப்புக்கும் அவனுக்கும் உறவே இல்லையே! எனவே -


பிறரிடம் விருப்பத்தைச் செலுத்தி வாழ்வதற்கு அன்பு வேண்டும். அது நட்பு என்ற அளவற்ற சிறப்பைத் தேடித் தரும்; செல்வத்தையும் தேடித்தரும்.உலகமே ஒரு நட்புக்கூடமாகி விட்டால் பகையில்லை. வாழ்க்கைக்கு எதிர்ப்பில்லை. ஏற்றமே உண்டு.

***அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும் நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.***

அன்பு அகத்திற்கு மட்டும் துணையாக நிற்பதில்லை. ஒருவன் பகைமை தொடுக்கிறான். அவனை நண்பனாகக் கருதி அவனிடம் அன்பு செலுத்தும் போது அவன் திணறுகிறான். 'இத்தனை நல்லவனையா நாம் பகைவனாக நினைத்தோம்?' என்றெண்ணி வேதனையுறுகிறான். இறுதியில் 'என்னை மன்னித்துக்கொள்' என்று அன்பாளனின் காலில் விழுந்து விடுவான்.

(12 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சாவகச்சேரி, வாரிவனம் திருவருள்மிகு ஸ்ரீ முத்து

## சுந்தர பஞ்சதள இராஜகோபுர புனராவர்

# மகா கும்பாபிஷேக

## சர்வதாரி வருடம் ஆனித் திங்கள் 30 ஆம் நாள் (14.07.2008)

### பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசியுரை



பல்லாண்டு காலமாக சாவகச்சேரி வாரிவனம் பதியில் அருளாட்சி செய்துவரும் அகிலபுவன மாதாவாகிய அன்னை முத்துமாரி அம்பிகைக்குக் கும்பாபிஷேகப் பெருஞ் சாந்தி விழா இனிது நடைபெற அம்பிகையின் அடி பணிந்து எம் நல்லாசிகளைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்லாண்டுகளுக்கு முற்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்த இவ்வாலயம் காண்பவர் உள்ளம் வியக்கும் வண்ணம் காட்சியளிக்கின்றது. கர்பக்கிரகம், அர்த்த மண்டபம் என்பன கருங்கல்லினால் அமையப் பெற்றும், மகாமண்டபம் தரிசன மண்டபங்கள் வெள்ளைக் கற்களால் அமையப்பெற்றும் தம்ப மண்டபம், உள்வீதி பிரகாரம் ஆகியன மணி மண்டபங்களாக அமையப்பெற்றும் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்து காட்சியளிக்கின்றன. பஞ்சதள சுந்தர ராஜகோபுரம் அன்னையின் வரலாறுகளை கொண்ட சிற்ப வேலைப்பாடுகளுடன் வானளாவி உயர்ந்து விளங்குகின்றது. இந்த அனைத்து திருப்பணிகளும் புதிதாக இடம் பெற்று அன்னையின் குடமுழுக்கு நிகழ்வதில் அன்னையின் அருளாட்சி எங்கும் பரந்து சகல ஜீவராசிகளும் இன்புற்று வாழ இறையருள் இறைஞ்சி எம் நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

சிவஸ்ரீ.சதா.மகாலிங்க சிவக்குருக்கள் *செயலாளர்,*

*அகில இலங்கைச் சைவக்குமார், அர்ச்சகர் சபை.*

### சாவகச்சேரி - வாரிவனம் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான அறநெறிப்பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி



*''உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா, எங்கள் முத்துமாரி'' எனப்போற்றித் துதிப்பார் பாரதியார். ''அகிலாண்ட கோடியீன்ற அன்னையைப் பின்னையும் கன்னியென மறைகள் பேசும்'' எனத் துதிப்பார் அபிராமிப்பட்டர். இந்த உலக உற்பத்திக்கும், இயக்கத்திற்கும் பரா சக்தியே மூலம் என்பதை இந்த அருளாளர்களின் வாக்கு களால் அறியலாம்.*

அம்பாள் ஆலயம் புதுப்பொலிவும், புனித புலமுமாகக் காட்சி தந்து கொண்டிருக்கிறது. இராஜ கோபுரம், பரிவார மூர்த்தங்கள், சுற்றுப்பிரகாரங் கள் எனப் புனராவர்த்தனப் பணிகள் நிறைவுபெற்று, மஹாகும்பாபிசேகம் நடைபெறுவது, அம்பிகை அடியவர்களிற்கு அமுதான செய்தியாகும்.

எனவே அம்பாளின் அருள் பிரவாகத்தினால் மஹாகும்பாபிசேகம் இனிதே நிறைவேறவும், அருள்பிரவாகம் அனைத்து அடியார்களிற்கும் கிடைக் கப்பெற்று, இன்புற்றிருக்க வேண்டுமெனவும் மனதார வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன்.

*''முக்கண்ணியைத் தொழுவார்க் கொருதீங்கில்லையே!''*

சைவப்புலவர் N.P ஸ்ரீந்திரன்

அதிபர், வாரிவனம் ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை

### தென்மராட்சி வாழ் மக்களுக்கு அருள் பாலிக்கும் அன்னை



சாவகச்சேரி வாரிவனதிருப் பதியில் கோயில் கொண்டருளும் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் மகா கும்பாபிஷேக மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதற்கு அன்னையின் அருள் கிடைத்தமையை யிட்டு மகிழ்வடைகின்றேன். ஈழத்தின் பண்டைய திருத் தலங்களுள் வாரிவனம் சிறப்புப் பெற்ற ஒரு புண்ணிய தல மாகும். அன்னையின் ஆலயம் புனரமைக்கப்பெற்று இராஜ கோபுரத்துடன் நிமிர்ந்து நிற்பது வாரிவனநாதத்துக்கு மேலும் அழகும் பொலிவும் தருகிறது. இப்பகுதியில் முதன் முறையாக இராஜகோபுரத்துடன் கூடிய அம்மன் ஆலயத்தைப் புனரமைத்து உருவாக்கியதில் தொழிலதிபரும் புரவலருமான வை.சிவராசா அவர்களின் பணி மகத்தானது. இப் பிரதேசத்தில் வாழும் இந்துக்களாகிய நாம் அனைவரும் அவருக்கு நன்றியுடையவராக உள்ளோம். புதுப் பொலிவு பெறும் இவ்வாலயத்தில் எழுந்தருளும் முத்துமாரி அன்னை தென்மராட்சி மண்ணையும் மக்களையும் மீண்டும் புதுப்பொலிவு பெற அருள வேண்டுமென அவள் பாதார மலர்களைப் பணிந்து போற்றுகிறேன்.

க.அருந்தவபாலன் அதிபர், யா/டிறிபேக்கல்லூரி.

### ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



*சாவகச்சேரி வாரிவனம் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் ஸ்ரீமுத்துமாரி அம்பாளுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். ஆலயத்தில் நடைபெறும் அபிஷேகங்களில் 12 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுவது இக் கும்பாபிஷேகம். இதனைப் பார்ப்பதும் செய்வதும் செய்விப்பதும் புண்ணியப் பேறாகும். வரலாற்றுச் சிறப்புள்ள பழமையான பெரும்சிவாலயத்தைக் கொண்ட வாரி வனவில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரிவது இந்த ஆலயம் ஆகும். இங்கு பல ஆலயங்களும் சமய நிறுவனங்களும் ஆன்மீகப் பணியாற்றுகின்றன. இதனை அடிப்படையாகக் கொண்டு முத்துமாரி அம்மன் ஆலயப் பஞ்சதள இராஜகோபுரத்துடன் பல சிற்ப வேலைப்பாடுகளோடு கூடிய ஆலயமாக அமைந்துள்ளது அனைவருக்கும் வெகுவான மகிழ்ச்சியைத் தருகின்றது. மக்களுடைய உடல் நோயையும் உளநோயையும் தீர்க்கின்ற முத்துமாரி அம்பாளுக்கு 9யாக குண்டங்கள் அமைத்து கும்பாபிஷேகம் நடைபெறுவது ஆலயத்துக்கும் ஆலயத்தை சார்ந்த மக்களுக்கும் வரலாற்றுச் சிறப் பைத்தருவதாகும். இக்கும்பாபிஷேகத்தை செய்யும் சிவாச்சாரியாளுக்கும் ஆலய குருமார்களுக்கும் சாவகச்சேரி வாழ் சைவத்தமிழ் மக்களுக்கும் அம்பிகையின் ஆசி கிடைப்பதாகுக! இக் கும்பாபிஷேகத்தை தரிசனம் பண்ணி மண்ணில் நல்ல வண்ணம் வாழ் வோமாக.* ***''என்றும் வேண்டும் இன்ப அன்பு''***

இரண்டாம் குருமஹாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

### அடியவர்களுக்கு அபயமளிக்கும் ஸ்ரீமுத்துமாரி அம்மன்

*நீர் வளமும் நிலவளமும் நிறைந்த தென்மராட்சிப் பிரதேசத்தில், செந்நெல் வயல்கள் சூழ்ந்த வாரிவனப்பதியில், பஞ்சதள இராஜகோபுரத்துடன் கூடிய ரம்மியமான ஆலயத்தில் வீற்றிருந்து, அடியவர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீமுத்துமாரி அம்மனுக்கு குடமுழுக்குப் பெருவிழா நடைபெறுவதைக் காண்பது நாம் செய்த பாக்கியமாகும்.*

*கோயில்கள் பல அமைந்துள்ள சூழலிலே இப்பிரதேச மக்களின் இன்னல்கள் தீர்க்கின்ற அருள்கடாட்சமாக அம்பாள் அருளாட்சி புரிகின்றாள். அவ் அருள் கடாட்சத்தினை மேலும் மெருகூட்டுவதற்காக ஆலயத் திருப்பணியாளர் திரு.வை.சிவராசா குடும்பத்தினரது முயற்சியால் சிறப்புமிக்க இவ் வாலயம் புனரமைக்கப்பட்டு குடமுழுக்குக் காண்பது இப் பிரதேச மக்களை பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. புனிதமும் பக்திப் பொலிவும் நிறைந்த அம்பாள் ஆலயத்தில் நடை பெறுகின்ற குடமுழுக்குக் கிரியைகளும் அதைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மண்டலாபிஷேகக் கிரியைகளும் எம்மைச் சூழ்ந் திருக்கும், துன்பங்கள், வேதனைமிகு நிகழ்வுகள் எல்லாம் தணிவடைந்து எமது பிரதேச மக்கள் நல்வாழ்வு பெறுவதற்கு வழிவகுக்கும் என நம்புகின்றோம்.*

*முத்துமாரி அம் மனின் கும்பாபிடேகத்தை செய்விப்பதும், செய்வதும், அதைப் பார்ப்பதும் நாம் செய்த புண்ணியப்பேறாகும். அருட்சிறப்பு மிக்க குடமுழுக்கு வைபவம் சிறக்க எல்லாம் வல்ல அன்னையின் பாதக் கமலங்களைப் பிரார்த்திக்கின்றேன்.*

அ.கயிலாயபிள்ளை, அதிபர்,

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி, (தேசிய பாடசாலை).

### பிரதேச செயலரின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஓர் இயற்கை எழில் கொஞ்சும் நிலமாக தென்மராட்சி பிரதேசம் விளங்குகின்றது. அந்த இயற்கையின் முத்தாக சாவகச்சேரிப் பகுதி அனைத்து வளங்களும் நிரம்பப் பெற்று விளங்கி வருகின்றது. அதிலும் ''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற முது மொழிக் கிணங்க அநேகமான கோயில்களைத் தன்னகத்தே கொண்டு அழகாக மிளிர்கின்றது. கோயில்களில் மக்கள் தங்கள் மனது நிறைய இறைவனை உருகி வழிபடுவதால் அவர்களது வினைகள் யாவும் எரிந்து வீடுகின்றன. இவ்வாறாக மக்களின் துன்பம் போக்கும் ஆலயமாக சாவகச்சேரி சீர்மேவும் வாரிவன திருப் பதியில் பல நூற்றாண்டுகளாக எழுந்தருளியிருந்து அருள்புரியும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் சுந்தர பஞ்சதள இராஜகோபுர புனராவர்த்தன நவ குண்டபக்ஷ மகா கும்பாபிஷேக நிகழ்வு சிறப்புற நடைபெறுவதற்கும் ஆலயம் சூழவுள்ள அடியவர்கள் அன்னையின் அருள்பெற்று நல்வாழ்வு வாழ்வதற்கும் அன்னையின் நல்லாசிகளை வேண்டிநிற்கிறேன்.

சி.ஸ்ரீநிவாசன், பிரதேச செயலர், தென்மராட்சி.

### அமைதியும் இன்பமு

### முத்துமாரி அம்மனை

''இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!'' ஈழத்தின்



சாவகச்சேரி வாரிவ
கும்பாபிஷேகம் சா
நாள் நாளை (14.0
திருவருள் பாலி
அறியத் தருகின்
இறை அன்பு
தான் நாடும் சமுத
உண்மையை நாம்
அவன் தாழ் வண
நேரம் தவறாத பூ
உற்சவங்க
மகள் இறை பக
தான் மனிதன் ம
வடைகிறது.

நாட்டில் ஏற்ப
அருளை மங்கச் செய்து விட்டன. அதனால் பெருந் துய
வன்மையும் வறுமையும் நோயும் நோக்காடும் புடை

இதை எம்மவர்கள் உணராத ஒன்றல்ல. இவ்வு
கத்தான் செய்தது. எமது நாட்டுக்கு , எமது மக்களு
ஏங்கினேன். பூலோக வாழ்க்கை நன்கு நடைபெற ச
நம்புபவன் நான்.

எனவே என் குல தெய்வமாகிய முத்துமாரியம்மன


கால நிகழ்வுகளில் என் தெய்வத்தின் திருக்கோயி
கண்டு கவலை அடைந்தேன். தெய்வத்தின் திரு
விலும் நனவிலும் எனது உள்ளத்து உணர்வின் செயற்
முத்து மாரியம்மன் ஆதரவும், அருளும் தந்து கொண்
செய்து முடிப்பேனோ! என்றொரு ஐயம் தோன்றாம
பூக்கட்டிப் பார்த்தேன். இரண்டு தடவையும் அம்மன்
வதில்லை. நான்கு மறைத் தீர்ப்பு'' யாவும் நல்லபடி
பொலிவுடன் ஐந்து கலச கோபுர நிழலில் கம்பீரமாக

மேலும் மூலஸ்தானத்தை கருங்கல்லால் அமை
கொண்டு வந்து குறுகிய காலத்தில் பல சிரமங்களி
எல்லாவற்றுக்கும் மூலகாரணமாக விளங்கும் தாய
எல்லாம். அத்துடன் காளியை வைப்பதற்கு அம்மன்

அந்தத் திருக் கோயிலை மையமாக, அன்பும், அறனும்
என்பதே என் அவா. அந்த வகையில் அம்பாளின்
வாங்கினேன். உவந்தளித் தனர் சிலர். மடைப்பள்ளி,
மண்டபம், அன்னதான மடம் இப்படி யாவும் கைக
பலபல செய்ய வேண்டும் என்ற அவா எனக்குண்டு.
பொலிய வேண்டும். அம்பாளினால் பக்தர்களுக்
எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டில் அமைதியும், இன்

''வான்முகில் வழாது பெய்க!
மலி வளம் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க!
குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான் மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ழத்துமாரி அம்மன் திருக்கோயில்

ாவர்த்தன நவகுண்டபக்ஷ

ந சிறப்புமலர்

008) திங்கட்கிழமை மு.ப. 10.38 - 11.08 மணி

## மெய்யடியார்களே!

சிவபூமியின் சென்னியாம் யாழ்ப்பாணத்தின் திலகம் எனப் போற்றப்படும் தென்மராட்சியின் அரசன் சாவகச்சேரியின் சீர்மேவும் வாரிவன திருப்பதியில் பல நூற்றாண்டுகளாக எழுந்தருளி அருள் ஆட்சி புரியும் அம்மா முத்துமாரி அம்பாளிற்கும் ஏனைய பரிவார மூர்த்திகளான பிள்ளையார், கேதாரீஸ்வரி சமேத கேதாரலிங்கேஸ்வரர், முருகன், வரலட்சுமி, காத்தவராயர் ஆகிய மூர்த்திகளுக்கும் ஸ்வஸ்தி நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் ஆனித் திங்கள் 30 ஆம் நாள் நாளை (14.07.2008) திங்கட்கிழமை துவாதசித் திதியும் அனுஷ நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய மு.ப.10.38 மணிமுதல் 11.08 மணிவரையுள்ள கன்னிலக்ன சுபமுகூர்த்த வேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது. அடியார்கள் அன்றும் அதற்கு முன்பும் நடைபெறும் கிரியைகளில் ஆசாரசீலர்களாக கலந்துகொண்டு திருத்தொண்டுகள்புரிந்து அம்பாளின் திருவருளைப்பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆலயத் திருப்பணியாளர்**
**திரு.வைத்திலிங்கம் சிவராசா**
**[சிவா ரேடிங் கம்பனி],**
**ஆலய ஆதீன குரு**
**சிவஸ்ரீ தம்பையா குருக்கள்**
**வீரபத்திரக் குருக்கள்.**

## இன்பமும் ஏற்றம்பெற
## ம்மனை வேண்டுவோம்

ாழ்க!" ஈழத்தின் வடபாலமைந்த யாழ்ப்பாணத்தின் ாவகச்சேரி வாரிவன முத்துமாரி அம்மன் ஆலயத்தின் ும்பாபிஷேகம் சர்வதாரி வருடம் ஆனி மாதம் 30 ஆம் ாள் நாளை (14.07.2008) திங்கட்கிழமை நடைபெறத் ிருவருள் பாலித்துள்ளமையை மனமகிழ்ச்சியுடன் ுறியத் தருகின்றேன்.

இறை அன்பும், வழிபாடும் பெருகிவரும் போது ான் நாடும் சமுதாயமும் நலம் பெற்று ஓங்கும். இந்த ண்மையை நாம் அறியாததில்லை. அவனருளாலே ுவன் தாழ் வணங்கும் பாக்கியம் கிடைக்க வேண்டும். நரம் தவறாத பூசைகள், காலம் தவறாத திருவிழாக் உற்சவங்க கோயில்களில் அமைதல் வேண்டும். கள் இறை பகதியில் ஈடுபட வேண்டும். அப்போது ான் மனிதன் மனஅமைதி அடைகிறான். நாடு உய் டைகிறது.

நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள், இறை சக்தியை, னால் பெருந் துயரும் துன்பமும் அமைதியின்மையும், க்காடும் புடை சூழ்ந்து எம்மை வருத்துகின்றன. ன்றல்ல. இவ்வுணர்வு என்னையும் வாட்டி வதைக் , எமது மக்களுக்கு அமைதி கிடைக்காதோ என்று கு நடைபெற சக்தியின் கருணை அவசியம் என்று

ுத்துமாரியம்மனை வேண்டி நின்றேன்.

ின் திருக்கோயிலும் தூர்ந்து போகுமோ என்ற நிலை ய்வத்தின் திருக்காட்சி எனக்கும் கிடைத்தது. கன ணர்வின் செயற்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் வாரிவன ம் தந்து கொண்டேயிருந்தாள். இந்தச் செயலை நான் யம் தோன்றாமலில்லை. அம்மனுக்கு இரு தடவை வையும் அம்மன் நல்லருள் தந்தாள். "நம்பினார் கெடு ாவும் நல்லபடி நடந்து முடிந்தது. "அம்பாள்" புதுப் லில் கம்பீரமாக திரு வீற்றிருக்கிறாள்.

கல்லால் அமைப்பதற்குக் கடல் கடந்த கற்களைக் பல சிரமங்களின் மத்தியில் கட்டி முடிக்கப்பட்டது. விளங்கும் தாயாகிய அம்மனின் செயற்பாடுதான் பதற்கு அம்மன் அருள் கிடைத்துள்ளது.

அன்பும், அறனும், பக்தியும் பண்பாடும் வளர வேண்டும் பில் அம்பாளின் அருளால் சூழலில் காணிகளை . மடைப்பள்ளி, பூசகர் இல்லம், சுற்று மதில், வில்லு யாவும் கைகூட திருவருள் கிடைத்தது. மேலும் எனக்குண்டு. பக்தர்களால் அம்பாளின் திருவருள் ல் பக்தர்களுக்குத் திருவருள் மலிய வேண்டும். அமைதியும், இன்பமும் ஏற்றம் பெற வேண்டும்.

ழாது பெய்க!
க மன்னன்
செய்க!
ர்கள் வாழ்க!
ங்கள் ஓங்க
வி மல்க!
சைவ நீதி
மெல்லாம்!"

திருப்பணியாளர்
வைத்திலிங்கம் சிவராசா
சிவா ரேடிங் கம்பனி

## சமூகநலத்துறை அமைச்சரின் செய்தி



எல்லாம் வல்ல ஸ்ரீமுத்துமாரி அம்மனது இன்னருளால் எல்லா நலன் களும் எய்துக.

நல்வினை செய்து தீவினை அகற்றி ஆன்ம ஈடேற்றம் கொள்வதே ஒவ்வொரு மனிதப்பிறவியினதும் நோக்கமாகும். இதன் பிரகாரம் மக்கள் குடிகொள்ளும் பதிதோறும் ஆலயங் கள் ஆகமங்களின் விதிப்படி அமைத்து வழிபடுவது தொன்று தொட்டு சைவர்களிடம் விளங்கி வரும் பாரம்பரியமாகும்.

ஈழத் திருநாட்டின் சிரசுபோல் விளங்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் சாவகச்சேரி எனும் ஊரில் இறைவன் திருவருளால் நடைபெறவுள்ள வாரிவனம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய கும்பாபிஷேக நிகழ்வையும், சிறப்பையும் மிகச்சித்திரித்துக் காட்டும் இச்சிறப்பு மலர் பலருடைய எண்ணக் கருத்துக்களையும் மக்கள் எல்லோரினதும் மனப்பக்குவத்தினையும் உயர்த்துவதாக அமைகின்றது.

இப்பணிகளை மிகவும் சிரத்தையுடன் நிறைவேற்றியுள்ள அன்பர் வைத்திலிங்கம் சிவராசா மற்றும் ஆலய அறங்காவலர், திருப்பணிச் சபையினரைப் பாராட்டுகின்றேன்.

அத்துடன் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மனின் எல்லா நலன்களையும், அருளையும், சகல மங்களங்களையும் பெற்றுத் திகழ திருவருள் பாலிக்குமாறு எல்லாம் வல்ல ஸ்ரீமுத்துமாரி அம்மனைப் பிரார்த்திக் கின்றேன்.

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

**டக்ளஸ் தேவானந்தா, பா.உ**
*செயலாளர் நாயகம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி,*
*சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்.*

## சாவகச்சேரி நகரசபைச் செயலாளரின் வாழ்த்துரை

ஈழமணித் திருநாட்டின் வட மாகாணத்தின் முக்கனி வளம் நிறை தென்மராட்சிப் பகுதியில் இன்று வானுயர்ந்து கண் கொள்ளாக் காட்சி தரும் இராஜகோபுரத்தை தன்னகத்தே தாங்கி தென்மராட்சி மக்களின் வினைகளைப் போக்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் மிகப் பழமையும் புதுமையும்மிக்க சாவகச்சேரி வாரிவனம் திருவருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயில் சுந்தர பஞ்சதள இராஜகோபுர புனராவர்த்தன நவகுண்டபக்ஷ கும்பாபிஷேகம் ஆனித்திங்கள் 30 ஆம் நாள் நாளை (14.07.2008) திங்கட்கிழமை நடக்கவிருப்பதையிட்டு அடியார்களாகிய இந்நகர மக்களும், நகரசபை உத்தியோகத்தர்கள் அனைவரும் ஆசி வழங்கி பிரார்த்திக்கின்றோம்.

இராஜகோபுர தரிசனத்துடனும் பரிவார மூர்த்திகளுடனும் கம்பீரமாக வீற்றிருந்து அருட்காட்சி தரும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளை அனைவரும் தரிசித்து அம்பாளின் பேரருளைப் பெற்று எல்லோரும் இம்மண்ணில் நல்லவண்ணம் வாழப் பிரார்த்திப்போமாக.

**திருமதி சு.ஆறுமுகம்,**
செயலாளர், நகரசபை, சாவகச்சேரி.

## சிற்பாச்சாரியாரின் வாழ்த்துரை



சீரும் திருவும் பொலியுந் தெய்வீகத் திருப்பதி வாரிவனநாதர் இத் திருப்பதியின் வடக்கு வீதியில் தெற்கு நோக்கி முதல்வியாக விளங்குபவள் ஸ்ரீ முத்துமாரி அம்பாள். மஹா கும்பாபிஷேகத்தில் வாழ்த் துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தூலலிங்கமான பஞ்சதள இராஜ கோபுரம் விநாயகர், கேதாரீஸ்வரி சமேத கேதாரலிங்கேஸ்வரர், வரலட்சுமி, பாலசுப்பிரமணியர், சாத்தவராயர் ஆகிய பரிவாரதேவர்களும் முதல்வியாகிய மூலஸ் தானம் கருங்கற்களில் செதுக்கப்பட்டு துபிதள விமானம் அமைக் கப்பட்டு மண்டபத்தூண்களில் யாழ்.சிற்பம், குதிரைச்சிற்பம், துதி யாழிசிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக் கோயிலின் திருப்பணி வேலைகள் யாவும் திருவாளர் வைத்திலிங்கம் சிவராசா அவர்களால் புனரமைக்கப்பட்டது எனக் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

*சிற்பாச்சாரியார், நி.சந்திரன், நவாலியூர்.*

## அரவணைத்து அருள் செய்யும் தாயாக விளங்குகின்றாள் முத்துமாரி அம்மன்



தமிழர் வாழ்வுடன் மிகநெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் முத்துமாரி அம்மன் வழிபாடு நல்லுலகெங்கும் பரவிக்காணப்படுகின்றது. தமிழர் வாழும் பிரதேசம் உலகில் எங்கு காணப்படுகின்றதோ அங்கு முத்துமாரி அம்மன் கோயில்கள் காணப்படுகின்றன.

சக்தி வழிபாடு என்ற Hindu Godesses என்ற நூலில் Divid Kinsly என்ற அறிஞர் நோய்களுடன் தொடர்பு படுத்தப்படும் ஒரு பெண் தெய்வ மாகத் தனித்துவம் பெற்று விளங்குகிறாள் முத்துமாரி என்று விபரிக்கிறார். காளி, துர்க்கை முதலிய போர்த்தெய்வங்கள் போல் உக்கிர மூர்த்தியாக இல்லாமல் சாந்தமூர்த்தமாகவே பழந்தமிழர்கள் முத்துமாரி அம்மனைக் காண்கிறார்கள் என்கிறார்.

இங்கு ஆதி சைவக்குருமார் பரம்பரையினரால் மரபுவழிக் கிரியை வழிபாடு களும் ஆகமக்கிரியை வழிபாட்டு முறைகளும் இணைந்து நடைபெற்று வருகிறது. இவ்வேளையில் அம்பாளுக்கு இராச கோபுரம் அமைத்து கும் பாபிஷேகம் செய்விக்கும் பெரும்பேற்றை இப்பகுதி திருப்பணியாளர்களும் அடியார்களும் குருமார்களும் அன்னைமுத்துமாரி அம்மனின் அருளால் கிடைக்கப் பெற்றுள்ளனர். இது பெறுதற்கரிய பெரும்பேறாகும் எனலாம்.

தங்கக் குடமெடுத்து முத்துமாரி
தீர்த்தப் பொய்கையிலோ முத்துமாரி
தங்கச்சிறு தாலி கிடை த்திடவே முத்துமாரி
தலையில் தாங்கி வந்தோம் முத்துமாரி
தலை வணங்கித் தாழ்பணிந்தோம் முத்துமாரி
பொகைக்கே போகையிலே முத்துமாரி
பொட்டுச் சிறுமணி அணிவித்து முத்துமாரி
பொன்னுக்குடமெடுத்து முத்துமாரி
குடமுழுக்குச் செய்திடுவோம் முத்துமாரி
ஆருடன் கடன் நின்றாலும் முத்துமாரி
மாரிகடன் ஆகாது முத்துமாரி
மாரிகடன் தீர்த்தவர்கு மனக்கவலை தீருமம்மா.

என்ற நாட்டார் பாடலில் நம்பிக்கையுடன் நிகழும் சர்வதாரி வருடம் உத்த ராயணத்தில் ஆனி 30 ஆம் நாள் திங்கட்கிழமை அனுஷநட்சத்திர கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேம் நடைபெற்று திருப்பணி யாளர்கட்கும் அடியார்களுக்கும் பக்தர்களுக்கும் அம்பாள் அருள் கிடைக்க வேண்டுமென்றும் நாட்டில் சாந்தி, சமாதானம் கிடைத்து எல்லோரும் இன் புற்று வாழ வேண்டும் என அன்னை முத்துமாரி அம்மனைப் பிரார்த்தித்து எல்லோருக்கும் ஆசி கூறி அமைகின்றேன்.

ஓம் சக்தி ஓம்.

*ஆலய கும்பாபிஷேக குருமுதல்வர்*
சிவஸ்ரீ.த.வீரபத்திரக்குருக்கள்

## ஆத்மீக எண்ணங்கள் பெருகட்டும்

"குழைதல் வேண்டும் தாள்கள்
தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழ்தல் வேண்டும் செல்வி
குழைத்திடல் வேண்டும்தாலு"

இது கந்தபுராணக் காட்சி. நான் இவ்வாலய வீதியின் ஊடாகவரும் வேளை உயர்ந்து எழில்மிகு தோற்றத்துடன் காட்சிதரும் முத்துமாரி அம்மன் ஆலய இராஜ கோபுரத்தை அண்ணாந்து பார்த்த வேளை எனது மனதில் தோன்றிய எண்ணமும் அதுவே.

இன்று எம்மிடையே ஆத்மீக எண்ணங்கள் பெருக வேண்டும். அத்தகைய ஆத்மீக எண்ணங்களை வளர்க்கும் ஆலயங்களில் இத்தகைய நற்கருமங்கள் நடைபெறுவது இறைவன் செயலினால் ஆகும். இந்த வேளையில் நானும் ஒரு செய்தியை வழங்குவது இறைவன் செய்த நற்பயனே.

**கே.வரதராஜாமூர்த்தி,**
பிரதிக்கல்விப்பணிப்பாளர், தென்மராட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்.................

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

"சூ சூ ஹூய்.ஹூய்... ஊராவீட்டு கோழியெல்லாம் நெல்லுக் குடிக்குது; எல்லாரும் வீட்டுக்குள்ளை படுத்திருக் கிறியளே...?

கறிக்கடையும் காத்தாப் பறக்குது. நாலஞ்சு சூடையை ஒரு கூறாக வைச் சுக்கொண்டு, அவள் கறிக்காறிச்சி முக்காறூவாச் சொல்றாள். ம்.. உலகமே தலைகீழாத்தானே கிடக்கு. கறிக்கடை முழுக்க ஆம்பிளைகள் தான் நிக்கிறாங்கள்... சங்கக் கடையில் நிக்கிற புதுப்பெடியன் சாமான் அளவெல்லாம் பெரிய அநியாயம்"

மனைவி படலைக்குள் வரும்பொழுது சொல்லிக்கொண்டு வரும் வாசகங்களில் அவரது மனம் ஒன்றாது தங்கள் இருவரது முப்பதாண்டுச் செம்மையான இல்வாழ்வை எடை போடுகின்றது.

அவர்கள் வாழ்க்கையில் வாக்கு வாதங்கள் எழுவதுண்டு. ஆனால் அவை பிரச்சினைகளை அலசி ஆராய எழுவனவேயன்றி உள்ளன்பை எள்ளளவும் குறைக்காது.

அவர் குடித்திருக்கிறார் என்பதை அவள் எப்படித்தான் அறிவாளோ?

'மனுஷன் [illegible]ண்டைக்கு எங்கையோ போட்டிரு[illegible]றார்'

[illegible] குடித்துவிட்டால் கூடாதவரல்ல. ஆனால் செத்த பிரச்சினைக்கு உயிர் கொடுப்பார்; மறந்து போன சங்கதிகளை நினைவு கூருவார். விருப்பு வெறுப்புக்களை சரள நடையில் சொல்லுவார்.

அளவு கடந்துவிட்டால் அவளிடம் அவர் தப்பமுடியாது. அன்றைக்கு ஒன்றுமே பேச மாட்டாள். அடுத்த நாள் விடிந்ததும் நல்ல 'அரிச்சனை' நடக்கும்.

தலை குனிந்து நிற்பார், புகையிலைக் கன்றின் தலை இலை போல; பார்க்கப் பாவமாய் இருக்கும்.

புகையிலை விற்றதும் கட்டுக்கட்டாக காசை கொண்டு வந்து அவளிடம் கொடுப்பார். வாழ்க்கைச் செலவுகளை எல்லாம் அவளே நடத்துவாள். அவர் அதில் தலையிடவே மாட்டார்.

தேவை வந்ததும் கேட்பார். வாழ்க்கையில் ஏற்படும் தேவைகளை எவ்வளவு சாதுரியமாக அவள் நிறைவேற்றுவாள்!

மூத்த மகள் பாக்கியம் வயிற்றில்... அவள் சுமை சுகமாக இறங்க எடுத்த நேத்திக் கடன்கள்! தோட்டத்து இறைப்பாள் வந்து சாத்திரியார் வீட்டுக்குச் சாதகத்துடன் போனது... பரிகாரியார் வீட்டுக்கு விடியப்பற நிலவோடை போய்வந்தது.

'என்ரை மோளைக் கன்னிப் புள்ளத்தாச்சி எண்டுகூட மனமிரங்காது அவன் கூட இருந்த ஏழாலை ஆக்களுக்கு முன்னாலை செய்த சித்திரவதை'

கொழும்பால் வந்த பாக்கியம் பெற்ற தாய்க்குச் சொல்லி ஆறினாள்.

"என்னடி! மாயங்குத்துறாய், உங்கை ஒருதரும் பிள்ளை பெறெல்லையே? நீதான் கண்டறியாத பிள்ளையைப் பெறப் போறாய்."

அவளுக்குத் தலை சுற்றும், சத்தி வரும்; இரவில் நித்திரை வராது. ஆனால் பகல் பதினொரு மணிக்கெல்லாம் அவனுக்குக் கந்தோருக்குச் சாப்பாடு கொடுத்தனுப்பி விடுவாள்.

அவள் ஆசையுடன் சில உணவுப் பொருள்களை விரும்புவாள். அவன் தேவையற்றது என அதனை ஒதுக்கி தள்ளுவான். இது மட்டுமா? அவன் கந்தோரால் நேரம் கழித்துத் தான் வருவான்.

"மெய்யப்பா! இவ்வளவு நேரம் எங்கை நிண்டிட்டு வாறியள். நான் தனிய இஞ்சை விசரி மாதிரி இருக்கிறேன்"

"உன்ரை சிறப்பிலை உன்னோடை தான் எந்த நேரமும் இருக்க வேணுமே? ஆக்களுடன் 'சோஷலா'கப் பிழங்கத் தெரியாத பட்டிக்காடுகள். புது ஆக்களை கண்டால் வெக்கப்படுகிறது. பொயிலைத் தோட்டத்துக்குள்ளை கிடந்ததுகளைக் கொழும்புக்குக் கூட்டிக் கொண்டு வந்தால்...! சும்மாவா சொன்னான், நாய்க்கு நடுக்கடலிலை போனாலும் நக்குத் தண்ணி தானாம் எண்டு"

அவன் வாயில் மது மணக்கும். மதி மயக்கத்தில் யாரோ பெண்ணின் பெயரை அவன் வாய் அடிக்கடி உச்சரிக்கும்.

சீதனமாகக் கொடுத்த பத்தாயிரம் ரூபாவை வங்கியிலிருந்து எடுப்பதற்கு அவளது கையொப்பத்தை வாங்குவதற்காக அவன் எடுத்த பிரயத்தனங்கள்...

பாக்கியம் இவ்விடயத்தில் அறவே மறந்துவிட்டாள்.

"அப்பு மண்ணடிச்சு உழைச்ச காசு இது. ஒருசதமும் வீணாகச் செலவு செய்ய என்ரை உயிர் போனாலும் விடன்"

"சொந்த மருமோன் பாக்கியத்தை கட்டியிருந்தால் அடிபடாமல், குத்துப்படாமல், ஒத்துக் கஞ்சி குடித்திருக்குங்கள்"

சின்னத்தம்பியார் என்னைத் தேடி வலிய வந்து கேட்க, "இதை ஒரு கதையெண்டு கேக்கிறியா விட்டுவிட்டு வேறை என்னத்தையும் பேசுங் காணும்" எண்டு பாவி நான் பகிடி பண்ணியல்லோ விட்டனான்.

இன்றைக்கு ஊரிலை அவனுக்கு நடக்கும் நடப்பு, உண்மையைத் தான் கந்தன் கொட்டிலில் சொன்னான்.

"கமக்காரனுக்கு நடந்த நடப்பு மருமகனுக்கு நடக்குது. இந்த முறையும் எங்கடை பக்கத்து பெடியளின்ரை பொயிலையெல்லாம் அவர்தான் வெட்டப் போகுதாம். அச்சவாரம் கொடுத்திட்டுதாம் இறைக்கிற மெஷினும் இரண்டு எடுத்துப் போட்டுது போலை, செம்மறி ஆட்டாலையும் நல்ல வரும்படியாம்."

அவனும் 'பெண்டிலும்' பிள்ளையார் கோயில் திருவிழாவுக்கு போன சங்கை.

வெள்ளை வேட்டி கட்டி, பட்டுச் சால்வையை தோளிலே தொங்க விட்டு, நிலத்திலே தழுவி நிற்கும் மாதளித்த புகையிலைக் கன்றின் தலை இலை போலப் பரந்து உழைத்து உரம் ஏறிய தசை நார்கள் பின்னப்பட்ட வைச்சிர நெஞ்சுடன், அந்த நெஞ்சுடன் கொஞ்சிக் கொண்டிருக்கும் வரம்பிலே வளர்த்திருக்கும் அறுகம் புல் போன்ற உரோமத்துடன்...

இண்டைக்கும் அவன் எனக்குச் செய்யும் மரியாதை.

'போன மாசம் ஆஸ்பத்திரிச் சந்தியிலை, குழை வண்டிலுக்கு 'அம்மான் கேட்டுப் போட்டார்' என்ற எதிர் விலை கேளாது ஒதுங்கினவனல்லோ. இறைப்புக் காலத்திலை எனக்கு கிணறு விடுவதற்காக முன் நிலவிலும் பின் நிலவிலும் அவன் இறைப்பதையும் பேசிப் புகழாத தோட்டக்காரன் ஆர்?'

'கட்டிக் கொடுத்த' மருமகன் அவருக்குச் செய்யும் மரியாதை!

அன்றுதான் மகளும் மருமகனும் கொழும்பால் ஊருக்கு வந்திருந்தார்கள். வண்டில் கணக்காகப் பறிக்கப்பட்ட குழைக்கட்டுக்கள் வீட்டு முன் வாசலில் கிடந்தன.

பாக்கியத்திற்குக் குழைக்கட்டுகளைக் கண்டவுடன் பரவசமாக இருந்தது. அவள் கணவனுக்கோ 'குழை நாற்றம்' ஏதோ செய்தது.

"நாளைக்குக் கொழும்பிலையிலிருந்து என்னோடைகூட வேலை செய்யிற ஒருவர் வாறார்..... இதென்ன வீடோ அல்லது தோட்டமோ? வீட்டை ஒழுங்காக வைச்சிருக்காவிட்டால் கொப்பனை வீட்டை விட்டு வெளிக்கிடுத்திப் போடுவன்.... ஓ... நான் சொல்லிப் போட்டன்"

அன்றிரவே குழைக்கட்டுகளை அவ்விடத்தை விட்டு அகற்றி விட்டார் குத்தகைப் பொன்னையா.

மறுநாள் குத்தகைப் பொன்னையா களைத்து வோத்து, மண்வெட்டியைத் தோளிலே ஏந்தி, செம்மண் படிந்த நாலு முழ வேட்டியைத் தொடைக்குமேல் தூக்கித் துண்டுபோலக் கட்டி 'சம்பளகாரர்கள்' பின் தொடர வீட்டு வாசலைக் கடந்து உள்ளே போகும் பொழுது....

கொழும்புக்காரனும் மருமகனும் பேசுவது புரிந்தும் புரியாமலும் அவர் காதுகளில் விழுகின்றது.

"யாழ்ப்பாணத்து ஜனங்கள் ரொம்ப 'பேசிவிரன்ஸ்' பாருங்க; இவ்வளவு ஆழமான கிணத்திலை தண்ணீர் எடுத்துப் பயிர் நாட்டி எவ்வளவு கஷ்டப்படுறாங்க... இப்ப போனது ஆர் பாருங்க?"

"கூலியாட்கள்."

ஒதுங்கிச் செல்லும் குத்தகைப் பொன்னையாவை வீட்டுக்கு வெகு தூரத்தில் மாட்டுக் கொட்டிலில் உள்ள அவரது மாடுகள் எல்லாம் பெரும் குரல் கொடுத்து வரவேற்கின்றன.

"ம்மா... ம்மா..."

வேப்பமர நிழலில் சுறி கழுவிக் கொண்டிருக்கும் மனைவியின் முகத்தைப் பார்த்ததும் குத்தகைப் பொன்னையாவுக்குப் புரிந்துவிட்டது; 'மனுஷி எதையோ யோசிக்கிறாள்?'

அவள் அதிகம் மனதை அலட்டிக் கொள்வதை அவர் விரும்புவதில்லை. பேச்சுக் கொடுத்தால் அவள் மனதைத் தேற்றலாம் என்ற நப்பாசை குருத்து விடுகிறது.

"மெய்யப்பா இண்டைக்குப் பொழுது பட்டாலும் மண்டகப்படி பூசையாகாது போலை கிடக்கு"

"நாங்கள் என்ன உத்தியோககாரரே பன்னிரண்டு மணிக்கு மேசைச் சாப்பாடு சாப்பிட"

கெட்டு ஒடிக்கப் போய் இலை ஒடிந்து விட்டது.

மேலும் அவளது உள்ளத்தைக் கிளற விரும்பாத அவரது மனம் சிந்தனைப் பாத்திக்குள் பாய்கிறது.

பெடியன் பிறந்து இந்தப் பங்குனியோடை ஒருவருடம் முடியப்போகுது. பிறந்தவுடனை தந்தி அடிச்சம். பெடிச்சி போட்ட காயிதத்துக்கு ஒரு வரி எழுதினானோ?

அவளைக் கொண்டு வந்து விட்டாப் போலை இஞ்சால் பக்கம் எட்டிப் பார்த்தானோ?

இன்னும் வீடு கட்டின கடன் முடியேல்லை. ஈடு வைத்த றோட்டுக் கரைக் காணியும் கல்வீட்டுக் கனகருக்கு வட்டியோடை மூழ்கப் போகுது.

அந்தக் காணியை மீள அவர் மதியம் திரும்பிய வயதில் படும் கஷ்டம்... வளம் குறைந்த வடமராட்சி மண்ணைப் பண்படுத்தி, நாற்று நட்டு, பின் நிலவிலும் கொட்டும் பனியிலும் இளங்கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றி, பாத்தி கட்டி, 'நாலாம் முறைக்கு' இறைத்து, தலைப்பு முறித்துக் கெட்டுப் பிடுங்கி, வெட்டி நெருப்புக்குள்ளை போட்டெடுத்துப் படும் கயிறுமாலை.

"இஞ்சாருங்கோ! எங்களுக்கு இது ஒரு தலை எழுத்தாப் போச்சு, சங்கக் கடையிலை கொண்டோடி வள்ளிப்பிள்ளை நேற்றுக் கொழும்பாலை வந்த மோன் சொன்னவனாம்- எங்கடை மருமோன் கொழும்பிலை குடியும் குடித்தனமுமாக இருக்கிறானாம்.

நெஞ்சுக் குமுறல்களை வார்த்தைகளாகக் கொட்டிக் கொண்டு மனைவி குசினிக்குள் செல்கிறாள்.

இறுதி வார்த்தைகள் அவரது இதயத்தை ஈட்டியாகத் தாங்கி வேதனையின் விளிம்பிற்கு இட்டுச் செல்கின்றன.

தொடர்ந்து சிந்திக்கத் திராணியற்றவராய், தன் எதிரிலுள்ள கற்சுவரை வெறித்துப் பார்த்த வண்ணம் இருக்கிறார்.

"அ..... ப்..... பூ"

மழலை மொழி நெஞ்சக் கனலுக்கு நீர் ஊற்றுகிறது.

சிறுகைகளையும் கால்களையும் பரப்பி, அவரை நோக்கிப் பேரன் தவழ்ந்து வருகிறான்.

"அப்பூ..... அப்பூ"

குழந்தை அவரைப் பார்த்துச் சிரிக்கிறது.

பேரனுக்காக முகத்திலே சிரிப்பை வலிந்து வரவழைக்கிறார்.

"அப்பூ...."

பெருமூச்சுகள் உதிர்கின்றன.

குத்தகைப் பொன்னையாவின் உழைத்து உரமேறிய காலடியில் படிந்திருக்கும் செம்மண்ணைப் பேரன் தன் குருத்துக் கைகளால் உதிர்த்துகிறான்.

********

## சொற்சிலம்பம் - போட்டி இல: 18

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | 5 | |
| 6 | | | 7 | | 8 | | |
| 9 | | 10 | | | 11 | | |
| | 12 | | | 13 | | | |
| 14 | | 15 | | | | | 16 |
| 17 | 18 | | | | | 19 | |
| 20 | | | 21 | | | | |
| 22 | | | | | | 23 | |

அனுப்புபவர் பெயர்:.......................................

விலாசம்:.......................................

.......................................

கையொப்பம்:.......................................

### இடமிருந்து வலம்

1. இரண்டாவதற்கு முந்தியது.
5. இதற்கு வசமாகா இதயம் எது?
6. உயிர்ப்பின் ஆரம்பம் இங்கு.
7. குறைதல்/குன்றுதல்.
9. காலம் பிந்துவது.
11. உடற்கூறின் மிகச்சிறிய அலகு/பாத்திரம்/படகு.
12. செல்வம்.
13. இரும்பு ஆயுதங்களைத் தீட்டுவதற்கு உதவும் .
15. கள்ளைப் புளிக்க வைக்கும் நுண்ணுயிர்.
17. மாட்டை வண்டியில் பிணைப்பது இங்கே.
19. தமிழ் மாதங்களுள் ஒன்று.
20. முகத்தில் வரும் இளமையின் பிரகடனம்.
21. அபயம் புகுதல்.
22. பைபிளை இப்படியும் அழைப்பர் .
23. பழங்கால ஆயுதங்களுள் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1. முன்னிலையில்.
2. வரவேண்டியது.
3. அழித்தல்.
4. சேலை.
5. வீடு/மனை.
8. இரும்பினாலான மெல்லிய பண்டம்.
10. ஈகை/கொடை
13. பிறப்பு/தோற்றம் (கிருஷ்ணர் இதுவரை எடுத்தது ஒன்பது)
14. நுகர்.
16. விரைவில்.
18. உபகரணம்.
19. எனவே.
21. கழித்தல் குறி.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 18**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,**
**இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (23.07.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 18இல் வெற்றிபெற்றோர் விவரம் 27.07.2008 உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 16 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) ஆசீர்வாதம். (6) கார். (7) சரை. (8)எண். (9) துவரம். (11)பாட்டு. (12)ரிசி. (13) விகடம். (14)தசை. (15) மதம். (16) சுகம். (17) அழி. (18) பகவான். (20) சடாயு. (21) தில்லை. (22) சரிதம்

**மேலிருந்து கீழ்**
(1) ஆகாது. (2) சீர்வரிசை. (3) வாசம். (4) தரை. (5) குண்டும் குழியும். (8) எட்ட (10)ரசி. (11) பாகம். (13) விதம். (14)தம்பதி. (15)மகன். (16) சுவாலை. (17) அடாத. (19) கல். (20) சரி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 16 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
**செல்வராசா தர்ஸ்மலா,**
யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்,
நல்லூர்.

**2 ஆம் பரிசு**
**க.பாரதி**
வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரம்,
வேலணை.

**3 ஆம் பரிசு**
**பொ.ஆஷா**
மே/பா.பொ.சுகந்தன்
சிரணி, சண்டிலிப்பாய்.

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

**(1) திருமதி.தவமலர் தர்மகுலசிங்கம்**
மந்துவில் [illegible]
கொடிகாமம்.

**(2) அ.வஜீரணா**
சொரூபி வாசா, நாவலர் மடம்,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.

**(3) ம.சுகன்யா**
மக்கள் வங்கி, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


**(4) கா.பொ.இ.குலசிங்கம்**
5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

**(5) செல்வி.தாட்சாயினி நவராசா**
சிவகுல வீதி, உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிகாயங்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை குடாநாட்டில் நாளாந்தம் அதிகரிக்கின்றது

**யாழ்.**மாவட்டத்தில் எரிகாயங்களுக்கு ஆளாவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. சிறிய எரிகாயங்களுடனோ பாரிய எரிகாயங்



களுடனோ நாளாந்தம் வைத்தியசாலையில் நோயாளர் சிகிச்சை பெற்ற வண்ணமே உள்ளனர்.

விபத்துகளாலோ, கொலை முயற்சி, தற்கொலை முயற்சி போன்றவற்றினாலோ இவ்வாறான எரிகாயங்கள் ஏற்படுகின்றன.

பெரும்பாலும் குப்பி விளக்குகள், பாதுகாப்பற்ற மண்ணெண்ணை விளக்குகள், மண்ணெண்ணை சமையல் உபகரணம் (குக்கர்), சமயல் எரிவாயு போன்றவற்றால் பெரும்பாலும் விபத்துகள் ஏற்படுகின்றன. கொலை முயற்சிகள் காரணமாகவும் எண்ணெய் வகைகள் ஊற்றப்பட்டு எரியூட்டப்பட்டும் நோயாளர் சிகிச்சை பெறுகிறார்கள். செறிவான அமிலங்கள் அல்லது காரங்கள் ஊற்றப்படுவதனாலும் பாரிய காயங்கள் ஏற்படுகின்றன.

அமில, காரங்கள் ஊற்றப்படும் சந்தர்ப்பங்கள் குறைவாகவே காணப்படுகின்றன. திட்டமிடப்பட்ட பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கே இவை பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. இவற்றால் பாரிய காரியங்கள் ஏற்பட்டு உடற்பகுதி விகாரமான தோற்றங்களாக மாறலாம்.

### எரிகாயங்கள் ஏற்படுவதில் இருந்து தப்புதல்

பெரும்பாலும் சிறுபிள்ளைகள் குப்பி விளக்குகளால் எரிகாயங்களுக்கு உள்ளாகின்றார்கள். இவர்களது கைகளுக்கு எட்டாதவாறு விளக்குகள் வைக்கப்படுதல் வேண்டும். மண்ணெண்ணெய் வெளியில் சிந்தாதவாறு விளக்குகள் உருவாக்கப்படுதல் வேண்டும். 'ஹரிக்கன்' விளக்குகள் போன்ற வகையான விளக்குகள் பெரும்பாலும் பாதுகாப்பானவையாகக் காணப்படுகின்றன. மண்ணெண்ணெய் மற்றும் எரிவாயு அடுப்புகள் வெடிப்பதனாலும், அவற்றிலிருந்து கசிவுகள் ஏற்படுவதாலும், எரிவாயுக் கொள்கலன்கள் வெடிப்புக் குள்ளாகுவதாலும் விபத்துகள் ஏற்படுகின்றன. பெண்களே கூடுதலாக இவ் வகையான விபத்துக்களைச் சந்திக்க நேரிடுகின்றது. எனவே சமயல்கூடங்களில் முன்னெச்சரிக்கையாக இருப்பதுடன்

## எரிகாயச் சிகிச்சைக்கெனத் தனியான பிரிவு ஒன்று போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட வேண்டும்

அடிக்கடி கசிவுகள், வெடிப்புகள் இருக்கின்றனவா எனப் பரிசோதித்துப் பார்த்தல் வேண்டும்.

உடல்பகுதிகளில் எரிகாயங்கள் ஏற்படும் அளவு வீதம் அதிகரிக்கும் போது ஆபத்தின் தன்மையும் அதிகரித்துக் காணப்படுகிறது. எரிகாயத்தின் தன்மை 60% -70% இற்கு மேற்படும் போது உயிராபத்து ஏற்படும் சாத்தியம் உருவாகின்றது. எனவே ''எரிவுகள்'' ஏற்படும்போது இயலுமானவரை அணைப்பதற்கு முயற்சித்தல் வேண்டும் 'நைலோன்' வகை ஆடைகள் அணிந்திருந்தால் அவை உருகி எரிந்து ஒட்டிவிடும் சாத்தியம் காணப்படுகின்றது. எனவே ஒருவர் எரிகாயங்களுக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் வேளையில் உடனடியாக அவரது உடைகளை நீக்குதல் அவசியமாகின்றது. எரிகாயங்களுக்கு உள்ளானவரது உடலில் இருந்து நீரிழப்பு அதிகமாகக் காணப்படுவதால் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு சென்று நாளங்களூடாகத் திரவப் பதார்த்தங்கள் (I.V.Fluids) செலுத்தப்படுதல் வேண்டும். தலை, கழுத்து நெஞ்சுப்பகுதிகளில் ஏற்படும் காயங்களாலும் ஆபத்து வீதம் கூடுதலாகக் காணப்படும். எரிகாயங்கள் ஏற்படும் போது உப்புத் தண்ணீர் நனைப்பதும் சிலரது பழக்கமாகக் காணப்படுகிறது. இப்படியான செயற்பாடுகள் பாதுகாப்பான நடைமுறைகளாக இருப்பதில்லை.செறிவான அமிலங்கள், காரங்கள் உடலில் தெறிக்கும்போது அல்லது ஊற்றப்படும் போது தண்ணீரால் உடனடியாகக் கழுவுதல் நன்று.

### எரிகாயங்கள் உடலில் ஏற்படுத்தக் கூடிய பாதிப்புகள்

பாரிய எரிகாயங்கள் ஏற்படும் போது நீரிழப்பு அதிகாமாகக் காணப்படும். உடல் புரதப் பதார்த்தங்களும் இழக்கப்படுவதால் குருதித் திரவ இளையம் (Plasma) வழங்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. சிறுநீரகங்களும் பாதிக்கப்படும் சாத்தியம் காணப்படும். (ARF) கனியுப்புக்களின் சமநிலையிலும் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இரைப்பை, குடல் போன்ற பகுதிகளில் புண்களும் ஏற்படலாம்.

உடலில் தோலானது பாதுகாப்புக் கவசமாகக் காணப்படுகிறது. மேல் தோல் பகுதி எரிவடையுமானால் இலகுவாக கிருமிகள் தொற்றுதலுக்குள்ளாகி புண்கள் ஏற்படும். தோல் முழுவதும் ஆழமான எரிகாயங்கள் ஏற்படுமானால் இரத்தக் கசிவுகள் கூட உருவாகலாம். எண்ணெய் வகைகளால் ஏற்படும் எரிகாயங்களால் மூச்சுத் திணறல் ஏற்படலாம். முகம், கழுத்துப் பகுதிகள் எரிகாயங்க்ளுக்கு உட்படும் போது அப்பகுதி வீக்கம் அடைவதாலும் குரல்வளை, வாதனாளி போன்ற பகுதிகள் பாதிப்படைகின்றன.

### நீண்டகாலப் பாதிப்புகள்

தோல் மீளத் தோன்றும் போது முன்னைய தோல் போன்று தோற்றத்தில் காணப்பட மாட்டாது. மிகவும் தடித்த தன்மையாகக் காணப்படுவதுடன் விகாரத் தோற்றம் உடையதாகவும் காணப்படும். கண்மடல்கள் இழுபட்டு வெளித் தள்ளியவையாகவும், கழுத்து நெஞ்சுப் பகுதி ஒட்டியது போன்றும், மீள்தகவு தன்மை குறைந்தவையாகவும் காணப்படும். கைகளில் மடிப்புகள், வளைவுகள் ஏற்படும். தொழிற்பாடுகள் சீரானவையாகக் காணப்படமாட்டாது. அந்த அங்கங்கள் அசைவுகளுக்கு ஏற்றவாறு தொழிற்படச் சிரமப்படும். தோல்பகுதிகளில் மீண்டும் புண்கள் ஏற்படலாம். இப்படியான விகாரமான தோற்றத்தால் அந்நபர் சமுகத்தில் தனிமைப்படுத்தப்படலாம். இதனால் மனோநிலைரீதியான பாதிப்புக்கும் உள்ளாகலாம்.

***யாழ்.போதனா வைத்தியசாலையில் எரிகாயங்கள் காரணமாக அனுமதிக்கப்பட்ட வர்களின் புள்ளி விவரம்!***

| ஆண்டு | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 2004 | 115 | 102 | 217 |
| 2005 | 112 | 129 | 241 |
| 2006 | 101 | 101 | 202 |
| 2007 | 87 | 125 | 212 |
| மொத்தம் | 415 | 457 | 872 |

பெண்களே கூடுதலான எரிகாயங்களுக்கு உட்படுகிறார்கள். இவர்களில் பெருமபாலானோர் தற்கொலை முயற்சிகளே காரணமாக இருக்கின்றன.

### யாழ்.போதனா வைத்தியசாலையும் எரிகாயச் சிகிச்சையும்

பாரிய எரிகாயங்கள் ஏற்படும் போது போதனா வைத்தியசாலையிலேயே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. (12 பக்கம் பார்க்க...)

லோ.துஷிகரன்

# எமக்குத் தெரிந்த கலையை ஏனையோருக்கும் கற்றுக் கொடுத்தால் அத்துறையில் நாம் வளரலாம்


## தனது அனுபவத்தைக் கூறுகிறார் மூத்த வணிக ஓவியர் முருகேசு



முருகேசு திருஞானரத்தினம் வணிக ஓவியராகப் பணிபுரிகிறார். விளம்பரப் பலகைகள் எழுதுவதில் நீண்டகாலம் ஈடுபட்டு வரும் அவரை 'உதயன்' ஞாயிறு இதழுக்காக நேர்காணல் செய்தோம். அவரது செவ்வி இங்கு பிரசுரமாகிறது.

**கேள்வி:-** உங்கள் குடும்பப் பின்னணி பற்றிக் கூறுங்கள்?

*பதில்:-* நான் 1946 ஆம் ஆண்டு உடுவிலிற் பிறந்தேன். எனது தந்தையார் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். நான் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தில் க.பொ.த.சாதாரண தரம்வரை படித்தேன். பின்னர் தந்தையார் நெடுங்கேனியில் கற்பித்த போது அங்கு சென்று குடியேறி விவசாயத்தில் ஈடுபட்டேன். இலங்கை போக்குவரத்துச் சபையில் இயந்திரக் திருத்துனராகப் பணியில் சேர்ந்து 1986 இல் சுயவிருப்பில் விலகிக் கொண்டேன். திருமணத்தின் பின் அச்சுவேலியில் வசித்து



வருகிறேன்.

**கே:-** ஓவியம் வரைவதில் ஈடுபாடு எவ்வாறு ஏற்பட்டது?

*ப:-* படிக்கும் காலத்திலேயே ஓவியம் வரைவதில் ஆர்வமிருந்தது. மான்ஸ் மகா வித்தியாலயத்தில் சித்திர ஆசிரியையாக இருந்த செல்வி போல் அவர்கள் அந்த ஆர்வத்தை மேலும் வளர்த்தார். பாடசாலையிலிருந்து விலகிய பின்னர் வெள்ளைத் தாள்களில் ஓவியங்களை வரைவேன். உறவினர், நண்பர்கள் கேட்கும் போதும் வரைந்து கொடுப்பேன்.

**கே:-** நீங்கள் ஒரு வணிக ஓவியர். வணிக ஓவியத் தொழிலை எப்போது ஆரம்பித்தீர்கள்?


*ப:-* முதன் முதலில் கோண்டாவில் 'புலவர் சவுண்ட் சேவீஸ்' என்ற நிறுவனத்துக்கு ஒலிபெருக்கியில் பெயர் எழுதினேன். இதற்கு ஊதியம் எதுவும் பெறவில்லை. ஆரம்பத்தில் ஊதியம் பெறாமலும், தரும் பணத்தைப் பெற்றுக் கொண்டும் ஓவியங்களை வரைந்தும் விளம்பரப் பெயர்களை எழுதியும் கொடுத்தேன். இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பணியாற்றும்போது மேலதிக நேரக் கொடுப்பனவை வழங்கி வழித்தட இலக்கங்கள், பெயர்களை எழுதுவிப்பார்கள்.

**கே:-** எவ்வாறான ஓவிய வேலைகளைச் செய்துள்ளீர்கள்?

*ப:-* கடை விளம்பரங்கள், தனியார் கல்வி நிலையப் பெயர்ப் பலகைகள், புகைப்படக் கலையகத்திரைகள், மணப்பந்தல், அலங்காரத் தட்டுகள், பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களின் ஓவிய வேலைகள் என்பவற்றைச் செய்துள்ளேன்.

**கே:-** பாடசாலைகளில் எவ்வாறான ஓவிய வேலைகளைச் செய்துள்ளீர்கள்?

*ப:-* பாடசாலைகளின் பெயர்ப்பலகைகள் எழுதுதல், தூர நோக்குக் கூற்றுக்கள் எழுதுதல, ஆரமபப் பிரிவுச் சித்திரங்கள் வரைதல், உலகப் படம், இலங்கைப் படங்களை வரைதல் போன்றவற்றைச் செய்துள்ளேன். அச்சுவேலி புனித



திரேசா மகாவித்தியாலயம், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை, உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம் ஆகியவற்றில் பல ஓவிய வேலைகளைச் செய்துள்ளேன்.

**கே:-** ஓவியத்துறை சார்ந்து உங்களால் மறக்க முடியாத சம்பவம் ஏதும் முண்டா?

*ப:-* 1973 ஆம் ஆண்டு நான் முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தேன். இயற்கையை இரசித்த படி நான் பயணம் செய்வதை ஒரு பெரியவர் கவனித்துக் கொண்டிருந்தார். முறி கண்டியில் பஸ் தரித்து நின்றபோது என்னை அழைத்த அவர் ''நீர் ஓவியம் வரைபவரா?'' என்று கேட்டார். நான் ''ஆம்'' என்றேன். தானும் ஓர் ஓவியரென்றும், இந்தியா வில் ஓவியம் பயின்றவர் என் றும் கூறிய அவர் ''உமக்குத் தெரிந்ததை ஏனையோருக்குச் சொல்லிக்குடும். கலை தானாகவே வளரும்'' என்று சொன்னார். அவரது வாக்கை வேத வாக்காகக் கொண்டு நான் செயற்படுகிறேன்.

**கே:-** ஓவியத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

*ப:-* பயிற்சியும் முயற்சியுமே ஓவியக் கலைக்கு அவசியமா கும். நாங்கள் எதைக் கற்றுச் செய் கிறோமோ அதை மற்றவருக்கு மறைக்கா மல் சொல்லிக் கொடுக்க வேண்டும். புதிது புதிதாகச் சிந்தித்துத்தான் ஓவியத்தை உருவாக்க முடியும். அந்தச் சிந்தனைதான் ஒருவரை நல்ல ஓவியராக்கும். எனவே ஓவியத் துறையில் ஈடுபடுபவர்கள் புதிது புதிதாகச் சிந்தித்து அதற்கேற்ப வரைய வேண்டும். *

- எஸ்.ரதீகுமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் 30ஆவது திருமண ஆண்டு நிறைவு வாழ்த்தும்



இன்று (13.07.2008) ஞாயிற்றுக்கிழமை 60ஆவது பிறந்தநாளையும், 30ஆவது திருமண ஆண்டு நிறைவையும் கொண்டாடும்

திரு.திருமதி

**உ.ருத்திரன்- இரத்தினபூபதி**

தம்பதியினரை மேலும் மேலும் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ மீனாட்சி அம்பாளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

4ஆம் குறுக்குத்தெரு,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
(76236)

வாழ்த்துவோர்:
அமரர் சு.கந்தசாமி
குடும்பம் (மாமா- ஆசிரியர்),
சகோதரர்கள், மைத்துனிமார்,
பெறாமக்கள்.

## அந்தியேட்டி அழைப்பு



கடந்த 13.06.2008
வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்த எமது தந்தை
**அமரர் வல்லிபுரம் தம்பையா**
அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (13.07.2008) ஞாயிற்றுக்கிழமை அரியாலையில் உள்ள எமது இல்லத்தில் மு.ப.10 மணிக்கு நடைபெறவுள்ளது. தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

74, மலர்மகள் வீதி,
அரியாலை.
(76234)

த.இராசலிங்கம்
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
(யாழ்.வலயம்).

### மனிதப் பண்புகளை.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பகையை வெல்லும் வீரத்தைத் தருவதும் அன்பின் துணைதான்.

*அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை.*

'வீரத்திற்கும் அந்த அன்பே துணை' என்பதைப் புரிந்து கொள்ளாதவர்களை, 'அறியார்' என்று எள்ளி நகையாடுகிறார் முனிவர்.

அன்று வள்ளுவன் உலகத்து மக்களுக்குச் சுட்டிக்காட்டி உணர்த்திய ஈகையின் சிறப்பை, தன்னலமற்ற கொடையின் பெருமையை, இத்தனை ஆண்டுகள் கழிந்தும் எம்மால் யதார்த்த பூர்வமாக,- நேரில் கண்டுணர்ந்து தெளிந்து கொள்ளும் சந்தர்ப்பமொன்று அண்மையில் எமது யாழ். குடா நாட்டில் ஏற்பட்டமை எமது நெஞ்சங்களில் மீண்டும் மீண்டும் நிழலாடுகின்றதல்லவா?

மொத்தத்தில் சங்ககால படைப்புகளில் பொதிந்துள்ள உண்மைகள் இவ்உலகம் உள்ளளவும் பொய்க்கா நாங்கள்தான் அவ் அடிப்படை உண்மைகளைக் கருத்தில் கொள்ளாது-கவனம் செலுத்தாது மறந்து நமது வாழ்வியலை மாறுபாடாக்கி வாழப் பழகிக் கொண்டுள்ளோம்: வாழ முயல்கிறோம்.

- இலக்கியன்.

### எரிகாயங்களுக்கு....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எனவே அதற்கான விசேட கவனிப்புடனான தனியான ஒரு கூறு அவசியம். ஆனால் யாழ். போதனா வைத்தியசாலையில் எரிகாயச் சிகிச்சைக் கூறு தனி அலகாக இல்லை. எரிகாயங்களுக்குள் ளான நோயாளிகள் தனியாகப் பராமரிக் கப்பட வேண்டிய தேவை உள்ளவர்கள். எனவே அதற்கென தனியான கூறு அவசியமாகும்.

இந்நோயாளிகளின் நீர்ப்பற்று இழப்பு அதிகமாகக் காணப்படுவதால் அதைத் தடுப்பதற்குக் குளிரூட்டப்பட்ட அறை இருத்தல் வேண்டும். புரதப் பதார்த்தம், கனியுப்பு போன்றவற்றின் சமநிலையையும் உடலில் பேணல் வேண்டும். அவர்களது உடல் புண்ணாகக் காணப்படுவதால் இலகுவில் கிருமித் தொற்று ஏற்படக்கூடிய சாத்தியம் அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே சரியான பராமரிப்பு அவசியம். மூக்குவழி மூலமான உணவுப்பாதை ஏற்படுத்த வேண்டிய தேவையும் ஏற்படலாம். சில சந்தர்ப்பங்களில் எரிகாயங்கள் ஏற்படும்போது புகை உள்ளெடுக்கப்படுவதால் நுரையீரலுடன் தொடர்புடைய பகுதிகளும் பாதிப்புக்கு உள்ளாகலாம். இதனால் மூச்சுத் திணறல் ஏற்படலாம். எனவே செயற்கை சுவாசம் வழங்க வேண்டிய தேவையும் ஏற்படும். எனவே எரிகாயங்களுக்கு உள்ளான நோயாளிகளுக்கு அதற்கேற்ற வசதிகளுடன் கூடிய தனியான சிகிச்சைக் கூறு அவசியமே. ✱

### பயன்தரு மரங்கள் நடப்பட்டன

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் பயன்தரு மரக்கன்றுகள் நடப்பட்டன.

சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். பிராந்திய உள்ளூராட்சிஉதவிஆணையாளர் அலுவலக ஆய்வு அலுவலர் வி.பரமேஸ்வரன் கலந்து கொண்டார்.

(203-201)

## 60ஆவது திருமண ஆண்டு நிறைவு வாழ்த்து



மட்டுவில் தெற்கு, வளர்மதி வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த

**திரு.திருமதி ஆறுமுகம் - அன்னம்மா**

தம்பதியினர் 60ஆவது திருமண நாளை இன்று (13.07.2008) ஞாயிற்றுக்கிழமை தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள். இவர்களை மட்டுவில் தெற்கு, வில்பம்பதி விநாயகர் அருளால் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துவோர்:
மகன்மார்: சிவகுமார் குடும்பம் (பாபு-டென்மார்க்), கோபிநாத் (லண்டன்),
மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.
(76233)

## 47ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
15 ✱ 07 ✱ 1972

உதிர்வு
28 ✱ 05 ✱ 2008



**அமரர் பரநிருபசிங்கம் தேவகுமார் (தேவா)**

**(ஊடகவியலாளர் சக்தி T.V., சக்தி F.M.)**

**நிலையில்லா இவ்வுலகில் நிலைத்திருக்கும் உன்னுறவால்
நினைவிழக்க மாட்டாமல் நீந்துகின்றோம் கண்ணீரில்
மரமிருக்கும் நாள் வரையில் நிழலிருக்கும் பூமியிது
நாமிருக்கும் நாள்வரையில் நீர் இருப்பீர் மனத்திரையில்....**

*எமது அன்புத்தெய்வத்தின் பிரிவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவி புரிந்தோருக்கும் தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு கண்ணீர்ப் பிரசுரம் வெளியிட்டோர், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர் உடுக்கை இழந்தவன் கைபோல் உதவிய சக்தி, M.T.V வலையமைப்பு நிறுவனத்தினர்களுக்கும் உதயன் நிறுவனத்தினருக்கும் மேலும் ஏனைய வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது அன்பு கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் வீட்டுக்கிரியைகள் இன்று (13.07.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் அனைவரும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

(அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் தயவுசெய்து இதனையே அன்பான அழைப்பாக ஏற்று வருகை தரவும்).

(சி/553723)

கார்த்திகேய வித்தியாலய வீதி, வட்டு.தெற்கு, வட்டுக்கோட்டை. மனைவியின் அன்பு உறவுகள்.


## எல்லையற்ற செய்தியாளர்கள்

**REPORTERS WITHOUT BORDER**




உதயனின் சர்வதேசப் பதிப்பிலும்
உதயன் பத்திரிகையிலும் உங்கள்
பகுதியின் நிகழ்வுகளையும்
சம்பவங்களையும்
பதிவுசெய்யுங்கள்.
அது ஒன்றும் கடினமானது அல்ல.


உங்கள் பகுதியில் உள்ள பாடசாலைகள்,
ஆலயங்கள், சனசமூக நிலையங்கள்
மற்றும் பொது அமைப்புகளின்
நிகழ்வுகளை எங்களுக்கு
அறியத்தாருங்கள்.
புகைப்படங்களையும்
அனுப்புங்கள்.

**பலரும் சேர்ந்துள்ள இந்த அணியில்
நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்**

இன்றே உரிய தரவுகளுடன் விவரங்களை
news@uthayan.com
photo@uthayan.com
எனும் ஈ-மெயில்களுக்கு அனுப்புங்கள்



புகைப்படங்கள், செய்திகளில் தமது
பெயர்களைச் சேர்த்துக்கொள்ள
விரும்புவோர் அதனைக் குறிப்பிடவும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொன்மைகளைப் பாதுகாக்கும் எத்தனமாக யாழ்.பல்கலையில் இந்துக் கலைக்கூடம்

பாரம்பரியங்களைப் பேணுதல் என்னும் பண்பு நம்மிடையே அருகிக் கொண்டே வருகின்றது. நம் முன்னோர் பயன்படுத்திய பல அரியனவற்றை வேண்டாத குப்பை



இந்துக் கலைக்கூடத்தில் பேணப்பட்டு வருகின்ற, சுதுமலை அம்மன் கோயில் தேரிலிருந்து எடுக்கப்பட்ட தொன்மையான மரச் சிற்பங்கள்.

களென எண்ணி, நம் சமூக வரலாற்று இருப்பியில் சார்ந்த ஆதாரங்களை நாமே அழித்து வருகின்றோம். இந்நிலையை மாற்றுவதற்கு அவ்வப்போது சிற்சில எத்தனங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனையும் மறுப்பதற்கில்லை.

யெடுக்கப்பட்ட பொருள்களின் குப்பைக் களஞ்சியம்' என்ற எண்ணக் கருவினைத் தகர்த்தெறிந்து, அதனூடாக ஒருவித அழகியல் மன உணர்வினையும் ஊட்ட முடியுமென்ற உண்மையை இந்துக் கலைக் கூடத்தினூடாக வெளிப்படுத்திய - அதில் ஈடுபட்டவர்களின் - உழைப்பு பிரமிப்பை உண்டுபண்ணுகின்றது.

### பயன்பாட்டு ரீதியான கல்விக்கு உதவும் அருங்காட்சியகங்கள்

நூலகங்கள் தருகின்ற அறிவினை விடவும் அருங்காட்சியங்கள் மூலம் பெறப்படுகின்ற அறிவார்ந்த விடயங்கள் காத்திரமானவையாகவே இருக்கின்றன. நூலகத்தினைப் பயன்படுத்த வேண்டுமாயின் 'வாசிக்கத் தெரிதல்' என்னும் அடிப்படைத் தகுதி வேண்டியிருக்கிறது. ஆனால் அருங்காட்சியங்கள் வெறும் 'பார்த்தல்' என்பதனூடாகவே தமது வெளிப்பாட்டினை நிகழ்த்துகின்றன கூடவே படிம ரீதியான காட்சிப்படுத்தல்களூடாக வெகு இயல்ததன் பேறே இப்போது தோற்றுவிக்கப்பட்டுள்ள இந்துக் கலைக்கூடம்'' என்று இந்துக் கலைக்கூட உருவாக்கலுக்கான எண்ணக் கருவினை இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி மா.வேதநாதன் உதயனுடன் பகிர்ந்து கொண்டார்.

அருங்காட்சியகமென்பது சேகரித்தல், பாதுகாத்தல், ஆவணப்படுத்தல், காட்சிப்படுத்தல், கல்வி, ஆய்வு, வெளியீடு என்னும் தொழிற்பாட்டுத் தொடர்ச்சிகளைத் தன்னகத்தே கொண்டதாக அமையவேண்டும். அருங்காட்சியகங்களை நிறுவுதல் மட்டுமன்றி அவற்றினுடைய தொடர்ச்சியான பேணுகையே அதன் தோற்றப்பாட்டுக்கான இலக்குகளை எட்டுவதற்கு வழி செய்யும்.

யாழ்.பல்கலைக்கழகத்தினைப் பொறுத்த வரையிலும் 'அருங்காட்சியகம்' என்பது வரலாற்றுத்துறையில் மாத்திரமே நிறுவப்பட்டு, பேணுகைக்குள்ளாகி வருகின்றது.

டினை பாடக்குறிப்புகளை விடவும் அனுபவரீதியாக உய்த்துணர முடியும்.

### இந்துக் கலைக்கூடம் பல்கலை வரலாற்றில் ஒரு மைல்கல்

இந்துக் கலைக்கூடம் ஈழத்து இந்து சமயத் தொன்மையின் எச்சங்கள் சிலவற்றைக் காட்சிப்படுத்தி நிற்கிறது. கருங்கற்களாலும் வெண்கலத்தாலுமான இந்து சமயக் கடவுள்களைக் குறிக்கும் தொன்மையான விக்கிரகங்கள், சுதுமலை அம்மன் கோயில் தேரிலிருந்து எடுக்கப்பட்ட காலத்தால் முந்திய கலையம்சம் கொண்ட சிற்பங்கள், இந்துக்களினது பண்பாட்டுப் பின்புலத்தை வெளிப்படுத்தி நிற்கும் வழிபாட்டு உபகரணங்கள், இந்துசமயம்சார் ஓவியங்கள் என்பன இப்போது இந்து கலைக்கூடத்தினுள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இவையெல்லாம் நாட்டின் பலபாகங்களிலிருந்தும் மிகுந்த பிரயத்தனங்களிடையே தருவிக்கப்பட்டவையாகும். இவை இந்துமதத்தின் தொன்மையை மட்டுமல்லாது பண்டைய ஈழத்தமிழரின் வாழ்வியற்செழுமையையும் பறைசாற்றுகின்றன. இந்து கலைக்கூடம் மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்வதற்கு மட்டுமல்லாது, ஈழத்தமிழர்களின் வரலாற்றினைப் பேணுகின்ற தன்மையினையும் காணமுடிகிறது.

''காலம் வேண்டி நிற்கின்ற தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள இந்துக் கலைக்கூடம் அதன் விரிவாக்கத்திற்கான பங்களிப்பினை ஆர்வமுடைய அனைவரிடமும் எதிர்பார்க்கின்றது'' என்று வேண்டிநிற்கின்றார், இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி எம். வேதநாதன். அவரது குரலுக்குச் செவிசாய்த்து இந்துக் கலைக் கூடத்தின் வளர்ச்சியில் ஈழத் தமிழர்கள் பங்குகொள்ள முன்வரவேண்டும். அப்போதுதான் இந்துக் கலைக்கூடத்தின் வளர்ச்சியோடு தமிழர் பாரம் பரியத்தையும் கட்டியெழுப்ப முடியும்.

## முதுசொம்களைப் பேணுவதில் இன்னொரு மைல் கல்

அவற்றில் நம்பிக்கை தரக்கூடிய எத்தனங்களில் ஒன்றாக யாழ்.பல்கலைக் கழகத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ள இந்துக் கலைக் கூடத்தினைக் கூறலாம்.

யாழ்.பல்கலைக்கழக , இந்து நாகரிகத் துறையினரால் அமைக்கப்பட்ட 'இந்துக் கலைக்கூடம்' அருங்காட்சியம் கடந்த புதன்கிழமையன்று (07.07.2008) துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கனால் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்துக் கலைக்கூடத்தினை நிறுவும் முயற்சியில் கலைப்பீடாதிபதி சோ.கிருஷ்ணராஜாவின் பங்களிப்பு அளப்பரியதாகும். இந்தக் கூடத்தின் உருவாக்கத்திற்காகவும், எடுத்தாளுகைக்காகவும் உதவி விரிவுரையாளரான ஜீவரத்தினம் ஜெயதீஸ் எடுத்துக் கொண்ட சிரத்தையை, அருங்காட்சியகத்தைப் பார்வையிட்ட பலரும் பாராட்டத் தவறவில்லை.

அருங்காட்சியகம் என்றால் 'தோண்டிபாகவே மனதில் தங்கியும் விடுகின்றது எனவே மாணவர்களுக்கான கற்றல் தேவை இலகுவானதாகவும் பயன்பாட்டு ரீதியானதாகவும் மாறுவதற்கு அருங்காட்சியங்களின் தேவைப்பாட்டினை கல்வித்துறை நன்குணர்ந்துள்ளது. அருங்காட்சியங்களை அமைப்பதில் இருக்கக்கூடிய சிரமங்களால் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விடுகின்றன - முயற்சி செய்வதில் அசமந்தம் காணப்படுகிறது.

அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க வேண்டுமென்ற சிந்தனை இந்து நாகரிகத்துறையில் பல வருடங்களாகவே இருந்து வந்துள்ளது.

''இவ்வாறானதொரு கலைக்கூடம் உருவாக வேண்டுமென இந்து நாகரிகத்துறையின் முதலாவது தலைவரானபேராசிரியர் கைலாசநாதக்குருக்களின் கனவாக இருந்தது. அந்தக் கனவை நனவாக்க யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் உழைத்தற்போது இந்துநாகரிகத்துறையிலும் 'அருங்காட்சியகம்' என்ற கிளை அரும்பியுள்ளது.


இதன் மூலம் இனிவரும் காலங்களில் இந்து நாகரிகத்துறை மாணவர்கள் தமது

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையின் 'கலைக் கூடத்தின்' உட்புறம்.



கற்றற்செயற்பாடுகளை பயன்பாட்டு ரீதியாக மேம்படுத்திக் கொள்ள முடியும். சோழர் கால விக்கிரகங்களுக்கும் தற்கால விக்கிரகங்களுக்கும் இடையேயான வேறுபாட்

## சாப்பிடும் போது 'ரீ.வி' வேண்டாம்



*தொலைக்காட்சி பார்த்துக் கொண்டே குழந்தைகளை சாப்பிட அனுமதித்தால், அதிக அளவில் சாப்பிட நேரிடும். இதனால் உடல் பெருக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். குண்டுக் குழந்தைகள் தொடர்பாக, கனடாவின் டொராண்டோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர். அவர்கள் தங்கள் ஆய்வில் கண்டறிந்துள்ள விவரம் வருமாறு. தொலைக்காட்சி பார்த்துக் கொண்டே சாப்பிடும் குழந்தைகள், அதிக உணவை சாப்பிடுகின்றனர்.*

*அதாவது 228 கலோரி சத்துள்ள உணவை கூடுதலாக எடுத்துக் கொள்கின்றனர். சாப்பிடும் போது ''தொலைக்காட்சி'' பார்க்காத குழந்தைகள், அதிக அளவில் சாப்பிடுவதில்லை. குறைவாகவே சாப்பிடுகின்றனர்.*

*தொலைக்காட்சி பார்த்துக் கொண்டே சாப்பிடும் போது, எப்போது சாப்பாட்டை நிறுத்த வேண்டும் என்பதை அறிய முடியாமல் போகிறது. அந்தத் திறனை குழந்தைகள் இழந்து விடுகின்றனர். அதிக அளவில் சாப்பிட்டு குண்டாகி விடுகின்றனர். எனவே, குழந்தைகள் சாப்பிடும் போது தொலைக்காட்சி நிறுத்தி வைத்தால் நல்லது. இதை பெற்றோர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.*

*இவ்வாறு ஆய்வாளர் கூறியுள்ளனர்.*

## ஒலிவ் எண்ணெய் புற்றுநோய் ஆபத்தைக் குறைக்கும்

**சமையலுக்கு ஒலிவ் எண்ணெய்யைப் பாவிப்பதால் சுமார் 9 வீதம் புற்றுநோய் ஏற்படுவதற்கான ஆபத்தைக் குறைக்கலாம் என்று கிறிஸ் மற்றும் ஸ்பெயின் வாழ் மக்களிடம் நடத்திய ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளது.**

**ஸ்பெயின் மற்றும் கிறீஸ் மக்களிடம் புற்றுநோய் மற்றும் இதய நோய் தாக்கம் ஒப்பீட்டளவில் குறைந்திருப்பதற்கு அவர்களின் உணவுப் பழக்கமே முக்கிய காரணம் என்று அறியப்பட்டுள்ளது.**

**அதிகம் பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளையும், ஒலிவ் எண்ணொய், மீன் உணவுகளையும், சிவப்பற்ற இறைச்சிகளையும், தானிய வகைகளையும் மற்றைய உணவுகளை விட உண்பது புற்றுநோய் மற்றும் இதய நோய்களைக் குறைக்க உதவும் என்றும் குறித்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.**

**ஒலிவ் எண்ணெய் அதிக அளவு நிரம்பாத கொழுப்பு அமிலங்களைக் கொண்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.**

**பிறிதொரு ஆய்வில் புறோக்கோலி (Broccoli) மற்றும்Cruciferous வகை மரக்கறிகளை நாளாந்த உணவில் சேர்த்துக் கொள்வது ஆண்களில் புறஸ்ரேற் (Prostate) புற்றுநோய் ஏற்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக கண்டறிந்துள்ளனர். புறோக்கோலியில் உள்ள இயற்கையான இரசாயணங்கள் ஆண்களில் புறஸ்ரேற் சுரப்பியில் உள்ள மரபணுக்களில் குறிப்பாக GSTMI எனும் மரபணு மீது செல்வாக் குச் செய்து இந்த நோய் ஏற்படுவதைக் கட்டுப்படுத்த உதவுவதாக ஆதாரபூர்வமாகக் கண்டறியப்பட்டுள்ளது.**



## உலக மக்கள் சனத்தொகை 2012ஆம் ஆண்டு 700 கோடியைத் தாண்டி விடும்



உலக சனத்தொகை எதிர் வரும் 2012 ஆம் ஆண்டு 700 கோடியைத் தாண்டிவிடும் என கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளது. அமெரிக்காவில் உள்ள மக்கள் கணக்கெடுப்பு மையத்தினால் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி இத்தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் சீனா முதலாவது இடத்தையும், இந்தியா இரண்டாவது இடத்தையும், அமெரிக்கா மூன்றாவது இடத்தையும் வகிக்கின்றன.

தற்போது உலக மக்கள் சனத்தொகை 670 கோடி (6.7 பில்லியன்) எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சனத் தொகை வருகிற 2012 ஆம் ஆண்டு 700 கோடியைத் தாண்டிவிடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சனத்தொகை வருடம் ஒன்றுக்கு 1.2 விழுக்காடு அதிகரித்துச் செல்லுகின்றது.

## சீனாவின் மொபைல் மக்கள் 59 கோடியே 20 லட்சம்



மக்கள் தொகையில் மட்டுமன்றி மொபைல் போன் பயன்படுத்துவோர் எண்ணிக்கையிலும் சீனா தொடர்ந்து முன்னேறி வருகிறது.சென்ற மாதக் கணக்கின் படி சீனாவில் 59 கோடியே 20 லட்சம் பேர் மொபைல் பயன்படுத்துபவர்களாக அறியப்பட்டுள்ளது. அங்கும் கேபிள் இணைப்பைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை சரிந்து வருகிறது. இதனாலேயே சீனாவில் மொபைல் போன் தயாரிப்பில் எண்ணிக்கையிலடங்கா வகையில் பல்வேறு மாடல்களில் போன்கள் தயாரிக்கப்பட்டு மக்களிடையே புழக்கத்தில் இருக்கின்றன.

பெயர்பெற்ற நிறுவனங்களில் தயாரிப்புக்களின் மாடல்களின் அடிப்படையில் அவற்றின் விலைவில் 40 சத வீகிதத்தில் அதே வசதிகளுடன், சில வேளைகளில் கூடுதல் வசதிகளுடன், மொபையில் போன்கள் கிடைக்கின்றன. இந்தப் போன்கள் இந்தியாவிலும் குறிப்பாக தமிழகத்தில் தென் மாவட்டங்களில் சிறிய ஊர்களிலும் கிடைப்பது குறிப்பிடத்தக்கது.

## இரண்டு 'சிம்' செல்பேன்

ஜிஎஸ்எம் மற்றும் சிடிஎம்ஏ என 2 தொழில்நுட்பங்களிலும் இயங்கும் திறனுள்ள புதியரக செல்போன்களை மொரிடியன் மொபைல் நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது. இதன்படி, மொரிடியன் மொபைல் நிறுவனத்தின் பிளை பிராண்ட்-ன் V80, V80L, B700 மற்றும் B720 ரக செல்போன்களில் 2 சிம் அட்டைகளைப் பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



டி.எஃப்.டி வண்ணத்திரை, 200 எஸ்எம்எஸ் சேகரிக்கும் வசதியுடன் கூடிய V80 ரக செல்போனில் விலை 15 ஆயிரம் ரூபா ஆக நிர்ண யிக்கப் பட்டுள்ளது. எப்.எம் ரேடியோ மற்றும் ஸ்பீக்கர் போன் உள்ளது.இதே போல் ஆ700 ரக செல்போனில் 2 மெகா பிக்சல் கமரா, புளுருத், ஜீபிஆர்எஸ், மெமரி ஸ்லாட் வசதிகள் உள்ளது. இதன்விலை 22ஆயிரம் ரூபா ஆக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.எட்ஜ் (EDGE) தொழில்நுட்பம் உட்பட பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்ட B720 ஈதணி ரக செல்போனின் விலை 30 ஆயிரம் ரூபா என மொரிடியன் மொபைல் வெளியிட்டுள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்க விளைவுகள் ஏற்படாமல் நீரிழிவு நோயை கட்டுப்படுத்துவதற்கு!

ஆயுர்வேத மருத்துவ குணம் கொண்ட கருஞ்சீரக மூலிகையினால் தயாரான

Baraka DIABsol



பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

Baraka DIABsol

100% இயற்கை மூலிகைகளினால் தயாரிக்கப்படுவதால் ஏனைய மருந்துகளுடன் பாவிக்க முடியும்.

100% இயற்கையான கருஞ்சீரக எண்ணெய் கெப்ஸ்யூல்கள் நீரிழிவு நோயை குறிப்பிட்ட அளவில் பராமரிப்பதோடு இதில் அடங்கியுள்ள கருஞ்சீரக எண்ணெய் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலின் ஆரோக்கியத்தை பேணுவதினால் நீரிழிவு நோயாளர்களுக்கு ஏற்படும் ஏனைய நோய்களையும் இயற்கையாகவே குணப்படுத்துகின்றது.

பரக்கா DIABsol (Black Seed Oil) நவீன உற்பத்தித்திறனையும் பழமைவாய்ந்த மூலிகை நிபுணத்துவத்தையும் கையாண்டு தயாரிக்கப்பட்ட பக்க விளைவுகளற்ற முழுமையான நிவாரணத்திற்கு வழிவகுக்கின்ற மூலிகை உற்பத்தி ஆகும்.

HOTLINE:0773-237859

ஆயுர்வேத திணைக்களத்தின் அனுமதி இலக்கம் AY/MF/199/Cap/09

யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் இடம் ▶ SIVA NARUMANAB POONGA
No:288, Hospital Road, Jaffna.
Tel: 021 2222567

Manufactured By: Bio Extracts (Pvt) Ltd. 11A, Milepost Avenue, Colombo 3. Sri Lanka.
Tel: +9411 2810570 Fax: +94 11 2827126 E mail: bioext@expo.slt.lk www.baraka.lk
Marketed By: Expolanka Pharmaceuticals (Pvt) Ltd.


# நிகழ்வுகள்

வடமராட்சி, ஜூலை 13

இலங்கை சாரணர் சங்கத்தின் பருத்தித் துறை மாவட்ட சாரணர் கிளையின் விளையாட்டுப் போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பருத்தித் துறை திக்கமுனை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை மாவட்ட சாரணர் ஆணையாளர் மு.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) எஸ்.உதயகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கிளித்தட்டுப் போட்டியில் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தை எதிர்த்து வதிரி வடக்கு றோ.க.பாடசாலையும், உதைப் பந்தாட்டப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியை எதிர்த்து வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியும் மோதவுள்ளன.(203-236)

* * *

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி மேற்குப் பிரதேசசபையினரால் சுற்றுச் சூழல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் செல்வி வி.சுபாஜினி கருத்துரை வழங்குவார். (203-29)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 13

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகமும் மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகமும் இணைந்து இன்று ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆனைக்கோட்டையில் உள்ள துரைராஜா மண்டபத்தில் புதிய உறுப்பினர்கள் பதவி ஏற்பு நிகழ்வு ஒன்றை நடத்தவுள்ளன. லயன்ஸ் கழகத்தின் பிரதி ஆளுநா லயன்ஸ் லக்ஷ்மன் விஜயசிங்க பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (203)

* * *

சங்கானை, ஜூலை 13

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் தமிழ்மன்றம் நடத்தும் முத்தமிழ்விழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் திறந்த வெளியரங்கில் இடம் பெறவுள்ளது.

தமிழ்மன்றத் தலைவர் ம.சசிகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி.வி.கந்தையா கலந்து கொள்வார். (203-29)

## வீடும் காணியும் விற்பனைக்குண்டு

**124, இராசாவின் தோட்டம்,**
**யாழ்ப்பாணத்தில்**
**சகல வசதியுடன் கூடிய வீடும்**
**அத்துடன் காணியும்**
**விற்பனைக்குண்டு.**
**தொடர்புகளுக்கு தொலைபேசி இல.**
**021 4590853, 021 4591449,**
**077 3564662.**

(76238)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
23 ✱ 11 ✱ 1966

மறைவு
25 ✱ 07 ✱ 2007

**கிறிஸ்தோத்திரம் விக்ரர் விஜயநாதன்**

திதி: 13.07.2008 ஏகாதசி

எம் குடும்ப ஒளிவிளக்கே! எம் அப்பாவே!
ஓராண்டு சென்றாலும் உம்
நினைவு எம்முடனேயே.

கலைமகள் வீதி,
அரியாலை.
(76254)

மனைவி - மேகலா,
பிள்ளைகள் - பவித்திரா,
தர்ஷிகன், சுமித்திரா.

## காணவில்லை



பொற்பதி வீதி இல்லத்திலிருந்த இந்தக் கறுப்பு Dash Hund (பெண்) நாய் 10.07.2008 காலை காணாமற்போய்விட்டது. தகவல் தருவோருக்குச் சன்மானம் வழங்கப்படும்.

*தொடர்பு:* 222 7909

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, மாலைதீவில் உதவிக் கணக்காளராகப் பணிபுரியும் 30 வயது, கேட்டை நட்சத்திரம் உடைய மணமகனுக்கு படித்த, பண்பான, அழகான, மணப்பெண்ணைப் பெற்றோர் விரும்புகின்றனர். ஆங்கில ஆசிரியை கூடுதலாக விரும்பத்தக்கது.

*தொடர்பு:* (காலை 6 தொடக்கம்9.30 வரை)
*383/26, நாவலர் ஒழுங்கை, நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.*
**T.P.: 222 3276** (76251)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kgஇற்கு மேல் வளர்ச்சியடையக்கூடிய BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 14.07.2008 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

*தொடர்பு:*
**றாஜீவ்**, *குளப்பிட்டி வீதி,*
*ஆனைக்கோட்டை.*
(76258)

## தவறிவிட்டது

70/4, ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த சூரசங்காரன் செல்வராணி என்பவரது தேசிய அ.அட்டை (526502582V), விசேட அ. அட்டை, செல்லையா சின்னம்மா என்பவரது தே.அ. அட்டை (175660313V) என்பன 06.07.2008 அன்று ஈச்சமோட்டையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (76256)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**அமரர் கந்தையா தருமலிங்கம்**

( Ex. V.K.V. Brothers )

14.06.2008 அன்று சிவபதமடைந்த மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட அமரர் கந்தையா தருமலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் 14.07.2008 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, 15.07.2008 செவ்வாய்க்கிழமை மதியம் 10.30 மணிக்கு A.V.S. Hall, இல. 8.லோறன்ஸ் றோட், பம்பலப்பிட்டியில் நடைபெறவிருக்கும் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

28,Grairo Place,
Pamankada,
Colombo - 06.

மனைவி,
பிள்ளைகள்,
மருமகன்.

## இந்திய அணியைப் புரட்டி.....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிய மண்ணில் மீண்டும் ஒரு முறை துடுப்பாட்ட வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். இலங்கையின் ஜெயசூரியா, சங்கக்கரா, இந்தியாவின் ரெய்னா, ஷேவாக், டோனி ஆகியோர் அதிரடியாக விளையாடி, ரசிகர்களுக்கு வாண வேடிக்கை காட்டினர்.

ஆடுகளங்களும் துடுப்பாட்ட வீரர்களின் சொர்க்கபுரியாகத் திகழ்ந்தது. அனைத்து அணிகளும் 300 ஓட்டங்களை எளிதாக எட்டின. விக்கெட் வீழ்த்த முடியாமல் பந்துவீச்சாளர்கள் திணறினர்.

இலங்கை அணியின் ஜெயசூரியா, வழக்கம் போல் எதிரணிப் பந்துவீச்சாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தார். இத்தொடரின் 'நம்பர் -1' துடுப்பாட்ட வீரராக வலம் வரும் இவர் ஆசியக் கிண்ணத் தொடரில் 1,000 ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற சாதனையையும் தன்வசப்படுத்திக் கொண்டார். பொறுப்பான நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய சங்கக்கார இத் தொடரில் மூன்று சதங்களை விளாசி ஜொலித்தார். கப்புகெதர சிறப்பாக ஒத்துழைப்புக் கொடுத்தார்.

இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர்கள் கலக்கினர். இறுதியாட்டத்தில் அஜந்த மெண்டிஸ், இந்தியத் துடுப்பாட்ட வீரர்களைத் திணறச் செய்துவிட்டார். 5 போட்டிகளில் 17 விக்கெட்டுகளைக் கைப்பற்றி, தொடர்நாயகன் விருதையும் வென்றார்.முரளிதரன் 11 விக்கெட்டுகளை வீழ்த்தி தொடரின் 2ஆவது சிறந்த பந்துவீச்சாளர் என்ற பெருமையைப் பெற்றார்.

'சுப்பர்-4' போட்டியில் ஹொங்கொங் அணிக்கு எதிரான போட்டியில் அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 374 ஓட்டங்கள் எடுத்து ஆசியக் கிண்ணத் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த அணி என்ற சாதனை படைத்தது.

ஷேவாக், கம்பீர் ஆகியோர் இந்திய அணிக்கு சுப்பர் தொடக்கத்தைப் பெற்றுக்கொடுத்தனர். ஒவ்வொரு போட்டியிலும் அதிரடியாக விளையாடிய ஷேவாக், இந்தியாவின் ஓட்டவேகத்தை ஆரம்பத்திலேயே ரொக்கெட் வேகத்தில் உயர்த்தி, அடுத்து வரும் துடுப்பாட்ட வீரர்களை 'ரிலாக்ஸாக' விளையாட உதவினார்.

மூன்றாவது வீரராக வந்த ரெய்னா, அணியில் தனது இடத்தை உறுதிசெய்து கொண்டார். இத்தொடரில் இரண்டு சதங்கள் கடந்தார். இவர் 6 போட்டிகளில் 372 ஓட்டங்களை எடுத்து, அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரராகத் திகழ்கிறார். அணித்தலைவர் டோனி சூழ்நிலை அறிந்து சிறப்பாக விளையாடி வருகிறார். ரோகித், யுவராஜ் சொல்லிக் கொள்ளும்படி விளையாட வில்லை.

இந்திய அணியின் பந்துவீச்சு சுத்தமாக எடுபடவில்லை. களத்தடுப்பு மந்தமாக இருந்தது அணிக்குப் பின்னடைவைக் கொடுத்தது. இஷாந்த், ஆர்.பி.சிங் ஒன்று இரண்டு போட்டிகளில் மட்டுமே ஜொலித்தனர். இர்பான் பதான் ஓட்டங்களை வாரி வழங்கினார். சாவ்லா, ஓஜா முழுத்திறமையையும் வெளிப்படுத்தவில்லை.

சொந்த மண்ணில் பாகிஸ்தான் அணி இறுதியாட்டத்துக்கு முன்னேற முடியாமல் தவித்தது. சொய்ப் மலிக், யுனிஸ்கான் ஆகியோர் சிறப்பாக விளையாடினர். அக்தர், ஆஸிப், குல் இல்லாதமை அணிக்குப் பின்னடைவாக அமைந்தது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி துரைராஜா யோகேஸ்வரி

சங்கானை முருகமூர்த்தி கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா யோகேஸ்வரி 12.07.2008இல் இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாரதி வீதி,*
*சங்கானை.*
*(76253)*

*தகவல்:*
கிருபாகரன்(*மகன்*),
கிருபாகரன் மங்களேஸ்வரி(*மருமகள்*).

### திருமதி திலகவதி தம்பிப்பிள்ளை



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் இடம் பெயர்ந்து தெல்லிப்பழை, கொல்லங்கலட்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் தற்போது கனடாவிலும் வசித்து வந்தவருமான திருமதி திலகவதி தம்பிப்பிள்ளை அவர்கள் 10.07.2008 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பலாலி சித்திவிநாயகர் வித்தியாலய முன்னாள் அதிபர் இராமநாதர் சின்னத்தம்பி (இளையதம்பி உபாத்தியாயர்) - தங்கமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் சுப்பிரமணியம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும்தெல்லிப்பழை முன்னாள் தபாலதிபர் சுப்பிரமணியம் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் கனடாவில் வசிப்பவர்களான பிறேமா, ஜெயசீலன், சறோஜா, அனுஷியா ஆகியோரின் அன்புத் தாயும் பாஸ்கரன், புஷ்பராசா, சிவசக்தி சுந்தரம் மற்றும் வித்தியா, சத்தியேஸ் சுகன்யா ஆகியோரின் மாமியும் யசூரினா, ஜினித்தா, ஸ்ரீலேகா, அவ்னி ஆகியோரின் பேர்த்தியும் மகேந்திரன் (கனடா) மற்றும் காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவகுமாரதாஸ், விமலகுமாரி (கனடா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2008) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.JEYASEELAN,
163, COLLINGSBROOK BIVD,
SCARBOROUGH O.N.T,
MIW 1M6, CANADA.

*தகவல்:*
ச.ஜெயதாசன்
*(உடன்பிறவாச் சகோதரன்).*

T.P.: 0014164994138, 416 756 2469, 416 497 9314 - *பிள்ளைகள்*
416 297 7318 - *சகோதரன்* *(76255)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# திரும்பவும் திரும்பவும் தவறிழைக்கும் இந்தியா

கறுப்பு ஜூலைக் கலவரத்தின் நினைவழியா நாள்கள் இவை. அந்தக் கோரத்தின் - கொடூரத்தின் கால் நூற்றாண்டுக் கழிவில்- இருபத்தைந்தாண்டு நிறைவில் நிற்கிறோம்.

இந்தக் கால விரிப்பிலே பல்வேறு விடங்கள் மாறி விட்டன. ஆனாலும் இலங்கைத் தீவின் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு நியாயம் செய்ய மறுக்கும் பௌத்த- சிங்களப் பேரினவாதத்தின் பிடிவாதமும் இலங்கை விவகாரத்தைக் குழப்பியடிக்கும் இந்தியாவின் இராஜதந்திர அணுகுமுறையும் மட்டும் மாறாமல் அப்படியே நீட்சியாகத் தொடர்கின்றன.

இப்போதும் கூட ஈழத் தமிழர் விவகாரத்தில் புதுடில்லி இழைத்து வரும் தவறுகளும் அணுகுமுறைப் பிறழ்வுகளும் தமிழர் தரப்பால் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றன. ஆனால் அவை செவிடன் காதில் ஊதிய சங்காக - புறக்குடத்து நீர் போல - வீணாகிக் கொண்டிருக்கின்றன.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா நேரடியாகத் தலையீடு செய்வதற்கான இராஜதந்திர இடைவெளியையும் பொருத்தமான புறநிலையும் தகுந்த நியாயப்பாட்டையும் தார்மீக தேவைப்பாட்டையும் கறுப்பு ஜூலைக் கலவரமே உருவாக்கிக் கொடுத்தது.

இலங்கைத் தீவில் அப்பாவித் தமிழர்களுக்கு எதிராக - மடை திறந்த வெள்ளம் போல - வன்முறைப் பிரளயம் பெருங்கொடூரமாகக் கட்டவிழ்ந்தது. அந்த வன்முறைப் புயல் வீசிய ...... கொடூரத்தின் அதிர்வுகளோடு ஆரம்பமான இந்தியாவின் முதற்கட்ட நேரடித் தலையீடு 1990 மார்சில், அது வரை இலங்கையின் வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துத் தமது பிடியில் வைத்திருந்த இந்திய (அமைதி காக்கும்) படையின் அவமானகரமான படைவிலகலோடு முடிவுக்கு வந்தது எனலாம்.

அரசியல், இராணுவ, சர்வதேச விவகாரங்கள் என முப்பரிமாண அடிப்படை கொண்ட இந்த இந்தியத் தலையீடு, கடைசியில் தனது ஆக்கிரமிப்புப் படைகளை இலங்கை மண்ணிலிருந்து மூடைமுடிச்சுகளுடன் வெளியேறும் நிலை வரை இந்தியாவைக் கொண்டு போய் விட்டது.

பாதுகாப்பற்ற அப்பாவி ஈழத்தமிழ் சமூகத்துக்கு எதிராக இலங்கையில் திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அகோர இன அழிப்பு வன்முறைக் கொடூரங்களில் இருந்து ஈழத் தமிழர்களைக் காக்கும் மனிதாபிமான தலையீடாக முதலில் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை வெளியில் பிரசாரப்படுத்தப்பட்டது.

தவிரவும், இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு காண்பதற்காக இராஜதந்திரக் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளோடு தான் பேச்சு நடத்துவதாகக் காட்டிக் கொண்ட பாரதத் தலைமை, அதைப் பயன்படுத்தித் தனது நலன்களை உறுதிப்படுத்தும் விதத்தில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் எழுத்தில் வடித்துக் கொண்டது.

இதே சமயம், இலங்கை அரசுக்கு எதிரான ஈழத் தமிழர்களின் ஆயுதம் தரித்த போராட்டம் முளைவிட்டு உருப்பெருக்கி விளைவிக்க இந்தியா மறைமுக உதவிகளையும் வழங்கியது.

இலங்கை இனப்பிரச்சினையை வைத்துக் கொண்டு இந் நாட்டுக்குள் தலையை நுழைத்த இந்தியா, அதன் மூலம் தனது புவியியல் கேந்திர நலன்களை ஓம்பிக் கொள்ளவும் தயங்கவில்லை.

இந்தியாவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகிக் கேடு விளைவிக்கக் கூடிய பல்வேறு அந்நிய - நாச சக்திகள் இலங்கைக்குள் ஊடுருவியிருக்கின்றன என அப்போது சந்தேகித்த இந்தியா இலங்கைக்குள் தானே நேரடியாக ஊடுருவி, ஆக்கிரமித்து, அந்தச் சிக்கல்களையும் தனக்கும் சாதகமான வகையில் தீர்த்துக் கொள்ளவும் தவறவில்லை.

ஆனாலும் இப்படிப் பல்வேறு பரிமாணங்களையும் கொண்ட இலங்கை மீதான இந்தியாவின் நேரடித் தலையீடானதுஒட்டுமொத்தத்தில் பார்த்தால் இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைக்கும் இராஜதந்திர முயற்சிகளுக்கும் கடைசியில் பெரும் தோல்வியாகவே முடிந்தது.

அதற்குக் காரணம் என்ன?

அந்தக் காரணத்தைத்தான் இப்போதும் தமிழர் தரப்பு இந்தியாவுக்குத் திரும்பவும் சுட்டிக்காட்ட விழைகின்றது.

1983 இற்குப்பின்னர் இலங்கை விவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தலையிட்ட போதும் சரி -

இப்போது இலங்கை விவகாரத்துக்கு மறைமுகமாகக் காய் நகர்த்தித் தலையிடும் போதும் சரி -

இந்திய அரசியல் தலைமை மீண்டும் மீண்டும் ஒரே தவறையே செய்து வருகின்றது.

அது - இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தன்னுடைய உண்மையான நண்பன் -சகா - யார் என்பதையும் வெளியில் பகட்டு வேடம் போட்டு நடிக்கும் தனது எதிரியார் என்பதையும் பாரதம் சரியாக அடையாளம் காணத்தவறியுள்ளமையே-தவறிவருகின்றமையே - ஆகும்.

இதைத்தான் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மீண்டும் ஒரு தடவை இந்திய செய்திநிறுவனத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில் விவரித்திருக்கின்றார்.

இந்தியாவின் காதில் இந்தக் கருத்து இப்போதாகிலும் ஏறுமா?

# விளையாட்டு நிகழ்வுகள்

கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம், யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம், யூனியன் அசூரன்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்திவரும் தாச்சிசுற்றுப் போட்டியில் இன்று பி.ப. 4 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் மானிப்பாய் பொஸ் வுறம் வி.கவும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் வி.க.வும் மோதுகின்றன.

போட்டியை அடுத்து கே.நரேந்திரன் தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வில் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத் தலைவர் சண்முகலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

* * *

வலி.வடக்கு, ஜூலை 13

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணம் பாடசாலைகயளின் 17 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்தப்பட்டு வரும் சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

* மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம் - வண்ணார்பண்ணை பெரியபுலம் மகா வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

* சென்.ஜோன்ஸ் கல்லூரிமைதானம்- யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஏ அணி எதிர் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி.

* யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம்-யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

* கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம் - கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

* சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானம்- சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் அரியாலை கனக ரத்தினம் மகா வித்தியாலம்.

* பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானம்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் வட் டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி

* நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் எதிர் சுழிபுரம் விக்ரோறியக் கல்லூரி.

* * *

வண்ணை காமாட்சி முன்பள்ளியின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாச்சிமார் கோயிலடியில் அமைந்துள்ள முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

ஆலய தர்மகர்த்தா சபைத்தலைவர் அ.ஜெயராமன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ஆர்.எம்.சத்திய குமார் கலந்து கொள்வார். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை13

உடுவில் இந்து இளைஞர் மன்ற பாலர் விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவி பிரதம விருந்தினராகவும் மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளை உதவிப் பொது முகாமையாளர் ப.உதயனன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (203)

## ஜேர்மன் தூதுவருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 13

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பாக ஜேர்மன் தூதுவருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கலந்துரையாடினர்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, எஸ் கனகரத்தினம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரே ஜேர்மன் தூதுவருடன் பேச்சு நடத்தினர்.

தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் யுத்தம், மனித உரிமை மீறல்கள், கிழக்கில் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் ஆகியன தொடர்பாக தூதருக்கு கூட்டமைப்பினர் விவரமாக எடுத்துக் கூறியதாகக் தெரிவிக்கப் பட்டது. (அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 30 | 14.07.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | மு.ப 07.11 வரை |
| நட்சத்திரம் : | அனுஷம் |
| | மு.இ. 08.58 வரை |
| சுபநேரம் : | 12.00 - 01.30 |
| ராகுகாலம் : | 07.30 - 09.00 |

## பம்பலப்பிட்டி கடற்பகுதியில் சுழல் காற்று

கொழும்பு,ஜூலை13

கொழும்பு, பம்பலப்பிட்டி கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் சுழல் காற்று சுமார் 5 நிமிடம் வீசியது என்று தெரிவிக்கப் பட்டது.

பம்பலப்பிட்டி கடலின் மேற்கு கடற்பரப்பில் இச்சுழல் காற்று ஏற்பட்டது என்றும் இதனைக் கரையோர மக்கள் அவதானித்தனர் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.


இடியுடன் கூடிய மழையை ஏற்படுத்தும் முகில் கூட்டத்தினாலேயே இந்தச் சுழல் காற்று ஏற்படுவதாகவும் இதனால் பாதிப்புகள் எவையும் ஏற்படமாட்டாது எனவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்தது. (சி)

## எந்நாளும் சாந்தியுற ஏத்துவோமே!

பண்டிதராய் சைவத்தின் புலவருமாய்
பத்திரமாய் நடைக்கோர்நல் பாத்திரமாய்
எண்டிசையும் போற்றவேதன் இனிய சொல்லால்
ஏராளம் சொற்பொழிவை இசைத்து நின்றார்
மண்டுபுகழ் துர்க்கை யம்பாள் ஆதீனத்தில்
வைகியே செய்தருமம் ஒன்றிரண்டோ?
கண்டுலகம் அதிசயிக்க கலாநிதியாய்
கால்பதித்தாள் கற்பகமாய் காலத்தாலே.

★ ★ ★

வாணியாய்ச் செந்திருவாய் வாழ்துர்க்கையாய்
வையமெல்லாம் பாராட்ட வாழ்ந்து காட்டி
ஆணியாய்த் தெய்வத்தின் நடையே போல
அவனியிலே வாழ்ந்திருந்து அன்பின் வைப்பாய்
பேணியே சிவன் சிவ சக்தியென்ன
பெருங்காட்சி வயப்பட்டு, பிறங்கியொன்றாம்
ஏணியாய் மெல்லெனவே சுவர்க்கஞ் சென்றாளை
எந்நாளும் சாந்தியுற ஏத்துவோமே.



புலவர்-வை.க.சிற்றம்பலம்.

(இன்று அன்னையின் சபிண்டிகரணக் கிரியைகள் நடைபெறுகின்றன)

## இறை வார்த்தையின்படி நடப்பவர்கள் நற்பயன் பெறுவர்

*நல்ல நிலத்தில் விதைக்கப் பட்டவன்*
*யாரெனில் என் வார்த்தையைக் கேட்டு*
*உணர்ந்து கொள்கிறவனே (மத்13:1-23)*

மக்கள் தம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பொருள்கள் அவர்கள் செய்யும் தொழில் ஆகியவற்றை உவமைகளாகப் பயன்படுத்தி அரிய மறையுண்மைகளைப் போதிக் கின்றார்கள்.

அதேபோல் விதைப்பவன் உவமை வழியாக இறைவார்த்தையின் பலனை விளக்குகின்றார் இயேசு.

நல்ல பண்பட்ட நிலத்தில் விழுந்த விதை நூறுமடங்கு, அறுபது மடங்கு, முப்பது மடங்கு பலன் தரும். அப்படியே ஆண்டவரின் வார்த்தையை ஆர்வமுடன் கேட்பவர்கள் அதை உள்ளத்தில் இருத்தித் தியானிப்பவர்கள், அதன்படி நடப்பவர்கள் நல்ல பயனைப் பெறுவர்.




"உனது வார்த்தை யின் படியே ஆகட்டும்" என்று பதில ளித்த அன்னை தான் கேட்டதை கண்டதை மனதில் இருத்தித் தியானித்து வந்தார்.

நாள்தோறும் நாம் இறைவார்த்தையைக் கேட்கின்றோம். கேட்பதும் மட்டும் போதாது அதன்படி நடக்க வேண்டும். உமது வாக்கின்படி தனது நடத்தையை நெறிப்படுத் தும் (சங்118:133) மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று கடவுளிடமிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையினாலும் உயிர் வாழ்கிறான் என்பதை நாம் உணரவேண்டும். நான் சொல்லும் இவ்வார்த்தைகளைக் கேட்டு இவற்றின்படி நடப்பவன் எவனும் கற்பாறையின் மீது தன் வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு ஒப்பாவான். *(மத்7:24)*

நசரேன்.

## உள்ளூர் தயாரிப்பான தபால் வண்டி சிக்காக்கோ நகரக் கண்காட்சியில்

### சூசைப்பிள்ளை வன்னியனாரின் மற்றுமொரு சாதனை

சூசைப்பிள்ளை வன்னியனாரைப் பற்றி இந்தப் பகுதியில் நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்குமிடையிலான தபால் சேவையை குத்தகைக்கு எடுத்து நடத்தியவர் சூசைப்பிள்ளை வன்னியனார் என்பதை ஏற்கனவே பார்த்துள்ளோம். இவர் ஆனையிறவிலிருந்து அனுராதபுரம் வரை தபால்களை எடுத்துச் செல்வதற்கான பிரம்மாண்டமான தபால்வண்டி ஒன்றை (குதிரை வண்டி) தயாரித்தார்.

அப்போது பிரதம தபாலதிபராக (Postmaster General) பணிபுரிந்த ஸ்கின்னர் (Skinner), சூசைப்பிள்ளை தயாரித்த தபால் வண்டியை (Mail coach) சிக்காக்கோ நகரில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சிக்கு அனுப்பினார். சிக்காக்கோ நகரில் நடைபெற்ற உலக வர்த்தகக் கண்காட்சியில் இலங்கைத் தொகுதியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த தபால் வண்டி அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

கொழும்பில் சேவையிலீடுபடுத்தப்பட்ட மெயில் கோச் ஒன்றும் அந்த வரிசையில் இருந்தது.அதுவும் சூசைப்பிள்ளையின் தயாரிப்புத்தானா அல்லது வேறு யாராவது தயாரித்தார்களா என்பது தெரியவில்லை. சூசைப் பிள்ளை சிறந்த மெயில் கோச் வடிவமைப்பாளராக இருந்த படியால் அதுவும் அவரது தயாரிப்பாக இருக்கலாம் அனுமானிக்க இடமுண்டு.

- தாண்டவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# பாலமோட்டையில் முன்னகர்வு முயற்சி; 3 படையினர் பலி; ஐவர் படுகாயம்!

வவுனியா, ஜூலை13

பாலமோட்டையில் ஸ்ரீலங்காப் படையினரின் முன்னகர்வு முறியடிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இத்தாக்குதலில் படையினர் மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஐவர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டது.

பாலமோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் ஸ்ரீலங்காப் படையினர் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் முன்னகர்வுத் தாக்குதலை நடத்தினர். இதற்கு எதிராக புலிகளின் முறியடிப்புத் தாக்குதல் இரவு 7மணிவரை இடம்பெற்றது என்று புலிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-02)

# புலிகளின் புதிய முன்னரங்குகளை குண்டு வீசி அழித்ததாக அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

முல்லைத்தீவுக்கு வடக்கே விடுதலைப் புலிகள் புதிதாக அமைத்து வரும் முன்னரங்க நி[illegible]களை விமானப் படையினரின் [illegible]ங்கள் நேற்று காலை 7 மணிக்கு தாக்கி அழித்தன- என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் 3.5 கி.மீற்றர் நீள மான முன்னரங்க நிலைகளே தாக்கப்பட்டன. வாகனங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் விடுதலைப் புலிகள் கனரக வாகனங்களை பயன்படுத்தி பதுங்கு குழிகளை அமைக்கும் பணிகளை தீவிரமாக்கியுள்ளதை அவதானித்து இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று அவர் சொன்னார். (அ-1)

## லண்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கியது.

நிகழ்வின் பொதுச் சுடரினை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி ஏற்றினார்.

பிரித்தானியா வாழ். தமிழ் இளையோர்கள் ஐம்பதுக்கும் அதிகமானோர் மஞ்சள், சிவப்பு வர்ண உடையணிந்து மேடையில் பொங்குதமிழ் எழுச்சிப் பாடல்களைப் பாடினர்.

நாடகம் மற்றும் தமிழர்களின் மங்கல வாத்தியங்களான தவில், நாதஸ்வரக்கச்சேரி ஆகியன நடைபெற்றன.

பிரித்தானிய தமிழர் பேரவையின் சார்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் மகன் டேவிட் பரராஜசிங்கம் தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து பிரித்தானியாவின் லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எர்ட்வேர்ட் டேவ், தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிவோன் மக்டோனா, தமிழ் உள்ளூராட்சி அமைப்பின் சார்பாக சுரேஸ் கிருஸ்ணா ஆகியோர் உரையாற்றினர்.

சோசலிச எதிர்ப்பின் ஆசிரியரும் அதன் கௌரவ உறுப்பினருமான லியாம் மக் எய்ட் உரையாற்றினார். தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளரும் கவிஞருமான புதுவை இரத்தினதுரையின் உரை ஒலிக்க விடப்பட்டது. பிரித்தானியாவின் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வீரேந்த சர்மா உரையாற்றினார்.

'உலகத் தாயே ஒன்றுபடு' எனும் பொங்கு தமிழ் பாடலுக்கு இளையோர்கள் எழுச்சி நடனம் வழங்கினர். இதனைத் தொடர்ந்து பத்து வருடங்களுக்கு மேலாக பிரித்தானிய தொழிற்கட்சியின் அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பாக இருந்த மைக்கிறசன் உரையாற்றினார்.

மனித விவகாரங்களுக்காக குரல் கொடுத்துவரும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் பானாட்ஸ் சாறா லுட்பேட், பிரித்தானிய தமிழ் உள்ளூராட்சி மன்ற அமைப்பின் தலைவர் தயா இடைக்காடர், பிரித்தானியாவின் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டோன் பற்றின், பிரித்தானியாவின் கிங்ஸ்ரன் பகுதியின் முன்னாள் நகரபிதா யோகன் யோகநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி, கொசாவோ விடுதலை அமைப்பின் முக்கிய பிரதிநிதி, தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் முக்கிய உறுப்பினர், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இறுதியாக பொங்குதமிழ் பிரகடனம் படிக்கப்பட அங்கு கூடியிருந்த அனைத்து மக்களும் பிரகடனத்தினை முழங்கினர். 'தமிழரின் தாகம் தமிழீழ தாயகம்' எனும் உறுதிமொழியுடன் இரவு 7.30 மணியளவில் நிகழ்வு நிறைவடைந்தது. (1)

பக்ஸ் வசதி

சாவகச்சேரி நகர் பகுதியில் பக்ஸ் வசதியுடன் கூடிய தொலைத் தொடர்புகளுக்கு தொடர்புகொள்ள

கணபதி தொலைத் தொடர்பகம்
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
T.P.:0214590020, 0214590738

## மன்னாரில் இருந்து 1615 குடும்பங்கள் இடம்பெயர்வு

மன்னார், ஜூலை13

அரச படையினரால் மேற்கொண்டு வரும் தாக்குதல்களால் மன்னார் மாவட்டத்தில் இருந்து 1615 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக கிளிநொச்சி அரச செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிக் கின்றன.

அதேநேரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 9 ஆயிரத்து 39 குடும்பங்களும் முல்லைத்தீவில் இருந்து 184 குடும்பங்களும் திருகோணமலையில் இருந்து 245 குடும்பங்களும் மட்டக்களப்பில் இருந்து 223 குடும்பங்களும் வவுனியாவில் இருந்து 273 குடும்பங்களும் ஏனைய மாவட்டங்களில் இருந்து 19 குடும்பங்களும் கிளிநொச்சியில் இடம்பெயர்ந்துள்ளதாக அப்புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## கையடக்கத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக கண்டறிந்து உறுதிசெய்து பதிவு செய்த பின்னரே அவர்களுக்கு வழங்க முடியும்.

* கைத்தொலைபேசிப் பாவனையாளர்கள் தமக்கு வழங்கப்பட்ட, அத்தாட்சிப்படுத்தப்பட்ட உரிமைபத்திரத்தின் பிரதிகளை கைவசம் வைத்திருக்க வேண்டும். அதனைப் பொலிஸாரும் படையினரும் எந்த வேளையிலும் சோதனை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேற்கண்ட புதிய கட்டுப்பாட்டு விதிகள் உடனடியாக நடைமுறைக்கு வருவதாகவும் புதிதாக கைத்தொலைபேசித் சேவையைப் பெறும்பாவனையாளர்களுக்கு மேற்கண்ட கட்டுப்பாடுகளின் அடிப் படையிலே கைத்தொலைபேசிகள் வழங்கப்படும் என்றும் பிரியந்த காரியப்பெருமா தெரிவித்தார்.

எனினும் ஏற்கனவே கைத்தொலைபேசி சேவையை பெற்றுக்கொண்டவர்கள் புதிய சட்ட விதிகளை பூர்த்திசெய்வதற்கு "சிறிது காலம்" மட்டும் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவோர் கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்தி குண்டுகளை வெடிக்கவைக்கின்றனர். ஆனால், சம்பந்தப்பட்ட கைத்தொலைபேசியின் உண்மையான உரிமையாளரைக் கண்டுபிடிக்க முடியாதிருக்கிறது.

குண்டு வெடிப்பை யார் செய்தார் என்பதைக் கண்டறிவதைத் தடுப்பதற்காக - அதிலிருந்து தப்புவதற்காக - கைத்தொலைபேசிகளை வெவ்வேறு - பல பல - பெயர்களில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் பதிவு செய்து ஏமாற்றுகின்றனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டே புதிய கட்டுப்பாடு விதிகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தொலைத் தொடர்பு கட்டுப்பாட்டு ஆணைக் [illegible] கூறின. (அ)

SHAMROCK
[illegible]
Physics
A/L 2009
FIELDS
Tue., Thu. - 3.30 p.m.
Mr.K.[illegible]
C/ma, CHE, [illegible]

# ஆற்காடு மீனவர் இருவர் நேற்று கடலில் சூட்டுக்குப் பலியாகினர்

## இலங்கைக் கடற்படை சுட்டதாகக் குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை13

நாகபட்டினம், ஆற்காட்டிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்கள் சூட்டுக்கு பலியானார்கள்.

இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலிலேயே இந்த மீனவர்கள் கொல்லப்பட்டனர் என்று தமிழக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மீன்பிடிப்பதற்காக வாசகன், நாராயணசாமி, முரளி ஆகியோர் ஆற்காட்டில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு புறப்பட் டனர்.

நேற்றுக் காலை தமது படகு மீது மேற்கொள்ளப்பட்ட சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் வாசகன், நாராயணசாமி ஆகியோர் இறந்து விட்டனர் என்றும் தாம் காயமடைந்துள்ளார் என்றும் முரளி கையடக்க தொலைபேசி மூலம் உறவினர்களுக்கு தகவல் கொடுத்தார்.

அவரது உறவினர்கள் வள்ளங்களில் வந்து உயிரிழந்தவர்களின் சடலங்களையும், காயமடைந்த முரளியையும் மீட்டுச் சென்றனர். காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்ட முரளியின் நிலை மையும் மோசமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## ஜனக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை இரவு 10.30 மணியளவில் சென்ற அடையாளம் தெரியாத குழுவே, அங்கிருந்த காவலாளியை அச்சுறுத்தி விட்டு அலுவலகத்தை தாக்கி சேதப்படுத் தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து அனுராதபுரம் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அச்சுறுத்தும் பாணியிலான திட்டமிட்ட நடவடிக்கையே இத்தாக்குதல் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (அ-02)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்த தகவலின் பேரில் சம்பந்தப்பட்ட நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை விசாரணை செய்த பொலிஸார், பெண் ஒருவர் உட்பட மேலும் மூவரை நேற்று மாலை கைது செய்துள்ளனர்.

இந்த கோஷ்டியிடம் இருந்து 4 கடன் அட்டைகள் மீட்கப்பட்டுள்ளன. இக்கோஷ்டி கோடிக்கணக்கான பணத்தை கப்பமாக பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது - என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-150)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருந்தது.

வழிபாட்டுக்குப் பின்னர் செய்தியாளர், ராஜபக்ஷவைச் சந்தித்தனர். அப்போது அவர் மேலும் கூறியதாவது:

நாட்டில் அமைதி திரும்ப விடுதலைப் புலிகளுடன் பேச நாங்கள் எப்போதும் தயார்தான். தீர்வு அவர்கள் கையில்தான் உள்ளது. இதுவரை இலங்கையில் நடந்த சண்டைச் சம்பவங்களில் 25 ஆயிரம் அப்பாவி உயிர்கள் பலியாகியுள்ளன. இதற்கு முடிவு வர வேண்டும் என்றால் விடுதலைப் புலிகள் தான் முன்வர வேண்டும்.

கடந்த இருபது ஆண்டுகளாகஇனப் போரால் இலங்கையின் அமைதி பாதிக்கப்பட்டுள்ளது. வன்முறையை நிறுத்த இலங்கை அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு உலகில் உள்ள எந்த நாடும் ஆதரவு தராது. எனவே இந்தியா விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்யும் என நான் நினைக்கவில்லை

### தமிழக மீனவரைத் தாக்குவது புலிகளாக இருக்கலாம்

ராமேஸ்வரம் மீனவர்களுக்கு இலங்கை அரசு எந்த தொந்தரவையும் தரவில்லை. இருப்பினும் இலங்கை அரசின் பெயரைக் கெடுக்கும் நோக்கில் மீனவர்களைத் தாக்குவது விடுதலைப்புலிகளாக இருக்கக் கூடும் என்று நான் கருதுகின்றேன்.

விடுதலைப்புலிகளின் பிரச்சினை எப்போது தீரும் என்ற கேள்விக்கு இப்போது பதிலளிப்பது கடினம். இருப்பினும் விடுதலைப்புலிகளின் நடவடிக்கையை தடுக்க இலங்கை அரசு அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

சார்க் அமைப்பின் மாநாட்டில் விடுதலைப்புலிகள் பிரச்சினையை இலங்கை அரசு எழுப்பி வந்திருக்கிறது. கொழும்பில் நடைபெறவுள்ள 15வது சார்க் மநாட்டிலும் இப்பிரச்சினையை எழுப்புவோம்- என்றார் ராஜபக்ஷ

### இரண்டாவது முறையாக

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே அரசாங்கம் அவர்களுடன் சமாதானப் பேச்சு நடத்தும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த மாதம் நடுப்பகுதியில் லண்டனில் வைத்து "த ரைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இப்போது இரண்டாவது முறையாக வெளிநாடு ஒன்றில்- இந்தியாவில் - வைத்து மீண்டும் அந்த நிலைப்பாட்டை அறிவித்திருக்கிறார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறும்.

நேற்றுக் காலை ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஒருங்கிணைப்புக் கூட்டம் நடந்தது. இதில் நம்பிக்கை வாக்கு கோருவதற்காக எப்போது லோக்சபாவை கூட்டுவது என்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

இதையடுத்து மாலையில் அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. இக் கூட்டத்தில் 21ஆம் திகதி நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் 21 ஆம் திகதி கூட்டப்படுகிறது. அன்று நம்பிக்கை கோரும் தீர்மானத்தை பிரதமர் மன்மோகன்சிங் தாக்கல் செய்கிறார். அதன் மீது விவாதம் நடைபெறும். பின்னர் 22 ஆம் திகதி நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறும்.

நம்பிக்கை வாக்கெடுப்பு முடியும் வரை காங்கிரஸ் மற்றும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி எம்.பிக்கள் வெளிநாட்டுப் பயணம் எத்தனையும் மேற்கொள்ள வேண்டாம் என காங்கிரஸ் கட்சி கேட்டுக்கொண்டுள்ளது.

முன்னதாக நேற்று காலை பிரதமரின் இல்லத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது. மாலையில் சோனியா காந்தியின் இல்லத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. (அ-1)

## மன்மோகன் சிங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளார்.

கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்றுக்கு அவர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

'சார்க்' மாநாட்டில் பங்குபற்றவரும் தலைவர்களுக்கு தேவையான பாதுகாப்புக்களை இராணுவ, பொலிஸ், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் எமது படையினர் வழங்குவர். அவர்களுக்கு தேவையான சகல பாதுகாப்பு மற்றும் அது சார்ந்த உதவிகளை எமது படையினரே பூர்த்தி செய்வர்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை அவர்களது பாதுகாப்புப் படையினரே வழங்குவர். அவருக்கான பாதுகாப்பு மற்றும் அது சார்ந்த தேவைகள் யாவற்றையும் அவர்களே பொறுப்பேற்று மேற்கொள்வர். அதில் எமது அரசாங்கம் தலையிடாது.

மன்மோகன்சிங்குக்கு பாதுகாப்பு வழங்க தமது ஹெலிகள் இலங்கை வான்பரப்பில் பறக்க இந்தியா அனுமதி கோரியிருந்தது. அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது - என்றார் இராணுவப் பேச்சாளர்.

இதேவேளை -

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கின் விஜயம் இறுதிவரை உறுதிசெய்யப்படாத நிலையிலேயே இருக்கும் என்றும் -

அவர் வருகை தரும்பட்சத்தில், அவரது விஜயம் 'சார்க்' மாநாட்டு நிகழ்ச்சியுடன் மட்டுப்படுத்தப்படும் என்றும்-

அவரது நடமாட்டங்கள் தொடர்பாக இரகசியம் பேணப்படும் என்றும் - விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையில் 'சார்க்' மாநாடு மூன்றாவது தடவையாக இப்போது நடைபெறுகின்றது.

கடந்த இருமாநாடுகளும் 1991, 1998 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றன.

தற்போதைய யுத்தச் சூழலில் மூன்றாவது மாநாடு நடைபெறுவது போலவே முன்னைய மாநாடுகளும் யுத்த சூழலிலேயே இங்கு நடத்தப்பட்டன என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (அ-1)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.